பதிவு எண் 2041 | KUDI ARASU. | தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளி நாடு 1½ அணா

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் ... ரூ 3—0 | வாரப்பதிப்பு. | வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12. |
| 6 மாத சந்தா ,, ... ரூ 1-12 | ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி. | கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2 |
| வெளி நாட்டிற்கு ,, ... ரூ 4—0 | | நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம் |

மாலை 3. | ஈரோடு, பிரபவஹு பங்குனி மீ 6௳ (18—3—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 47.



இனும்! இனும்


முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனும்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் திறந்திரவே லை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன் பேனா இனமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5 வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

கையில் கட்டும் ரோல்டு கோல்டு ஸ்பிரிங் செயினும், பௌண்டன் பேனாவும் இனும்.



நூதனமாக வரவழைத்த எங்களின் 22 காரட் ரோல்டு கோல்டு கை கெடியாரம், 5 வருஷம் உத்திரவாதம் புதுமாதிரி பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான காலத்தைக் காட்டும்.
விலை ரூ. 6—8—0. தபால் கூலி வேறு.

லண்டன் வாட்ச் அவுஸ்.
3, பார்க் டவுன், (தா) சென்னை.

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு!
புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.


## முத்துமாமா.

நேயர்களே! இந்தக் கதையைப் படித்து விட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள், தூங்கும்போதும்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் 4½ அணா ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணுபிள்ளைத் தெரு, மதராஸ்.

டேபில் டைம்பீஸ் இனும் !!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் பேரில் வைக்கக்கூடிய அருமையான டேபில் டைம்பீஸ் இனமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். இரண்டிற்கும் விலை ரூ. 7-3-0 தபால் கூலி பிரத்தியேகம்.



வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.

முன் விலை ரூ. 14 இப்பொழுது ரூ 7
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்தவேஷப்வேண்டுமோ அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்


(1916 ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இஞ்சினியரிங்வொர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் திறத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாக க்கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பார்சில் செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0. தபால் செலவு 0—8—0.



தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.

இனும்! இனும்!

சாவித்திரி சத்யவான் சம்பாஷணை 'கிழவன் குமாரனுன்' இவ்விரண்டு கதைகள் அடங்கிய புத்தகம் தங்கள் விலாசம் தெரிவித்தால் இனமாக அனுப்புவோம்.

ஸ்ரீ சாது இரத்தினசற்குரு புத்தகசாலை,
பார்க் டவுன் போஸ்டு, சென்னை.

## கணித சோதிடம்

பரிசுத கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. அருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னொன்று மகவும் சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலையாவது கடிதம் எழுதும்நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

## ஆநந்த குணபோதினி.

இரண்டாம் வருடம்.

இது போன்ற நவீன மாதாந்தர சஞ்சிகை இது வரை வெளிவரவில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலமாத சஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிக்கை இது ஒன்றேதான். 5000—சந்தாதாரர்கள் உள்ளது. வருட சந்தா ரூ. 1, வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரிக்கு இனும். இது பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குண போதினி' ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, மதராஸ்.



## இரகசியம் வெளிய்ய. விட்டது

| | | | | |
|---|---|---|---|---|
| இலவாழ்க்கையின் இரகசியம் | ரூ. | ... | 2 | 0 |
| ஸ்திரீ புருஷ இரகசியம் | ,, | ... | 1 | 0 |
| ரதி மதன சிங்கார இரசியம் | ,, | ... | 0 | 12 |
| மணவாழ்க்கையின் மர்மம் | ,, | ... | 2 | 4 |
| சதிபதிகளின் மர்மம் | ,, | ... | 1 | 0 |
| சரீர மர்ம சாஸ்திரம் | ,, | ... | 1 | 0 |
| கொக்கோகம் | ,, | ... | 1 | 0 |
| மதன ரதி ரகசியம் | ,, | ... | 1 | 0 |

எஸ்ஸி. ஆர். பகவன் அண்டு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ், மதராஸ்.



## திருக்குறள்.

கையடக்கமானது 200 பக்கம்கொண்டது
கண்கவரும் உயர்ந்த பதிப்பு

அடக்க விலை 2 அணா

31—3—28க்குள் ஒரு ரூபாயுக்கு குறையாமல் முன் பணமனுபபி பிரதிகளுக்கு பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

புத்தகம் விபவ ஆண்டுச் சித்திரை திங்கள் முதல் நாள் 13—4—28ல் வெளிவரும்.

ரூபா ஒன்றுக்கு 8 பிரதிகள்

வ. திருவரங்கம் பிள்ளை
அமைச்சர்
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் Ltd
6 பவளகாரத் தெரு, சென்னை



## Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போட்டோ பிடிக்கலாம். போட்டோவின் அளவு $3\frac{1}{2}''\times2\frac{1}{2}''$ ஆகும். இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லா சாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜம், ஜி. டி., மதராஸ்



முந்துங்கள்! முந்துங்கள்!!

## 'இந்திய-மாதா'

மிஸ். காதரைன் மேயோ என்னும் அமெரிக்க மாது தன் இந்திய—சுற்றுப்பிரயாணத்தில் கண்டவைகளையும், கேட்டவைகளையும் கொண்டு பெரும் பிரட்டாக நம்மையும் நம் சகோதரிகளையும் தூஷித்து எழுதியிருக்கும் புரட்டுப் புராண புஸ்தகத்தின் சுத்த மொழி பெயர்ப்பு.

இதை ஒவ்வொரு இந்தியரும் வாசித்து, அயல் நாட்டார் நம்மை எவ்வளவு இழிவுபடுத்தத் தயாராயிருக்கிறார்களென்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

பெரிய புஸ்தகம் உயர்ந்த பைண்டு.

புஸ்தகத்தின்பேரில் பாரத மாதாவின் படம் கண்ணைக் கவரும்படியாக பல கலர்களில் அச்சிடப் பட்டிருக்கிறது.

இங்கிலீஷ் பதிப்பு ரூ. 8—0—0 ஆக விற்கப்படுகிறது. தமிழர்கள் படிக்க வேண்டும் என்ற உத்தேசத்துடன் அசல் விலைக்கே விற்கிறோம். முன்பணம் ரூ. 1—8—0 அனுப்பிப் பதிவுசெய்து கொள்ளுங்கள்.

விலை ரூ. 1—8—0.

முன்பணம் அனுப்புவோருக்கு தபாற்செலவு இனும்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
Book-Depot, சென்னை.



## சிருங்காரமான போட்டோ படங்கள்.

பாரிஸ் மாதர்கள், ஐரோப்பிய மாதர்கள் முதலோரின் அழகையும், அவர்களின் விநோத நடை உடை பாவனைகளையும் விளக்கும் போட்டோ கார்டுகள் படுக்கையறையைச் சிறப்பிக்க ஒவ்வொரு வீட்டிலும் முக்கியமானவை. படங்களைப் பார்க்கப்பார்க்கப் பேரின்பம். உயர்ந்த கலர் கிளேஸ் படங்கள். பல ரகங்கள் கொண்ட டஜன் கார்டுகள் விலை ரூ. 1-15-0.

ப்ரெஞ்சு வாசனைக் கார்டுகள்.

வாசனைப் புட்டி வேண்டுமென்ற அவசியமில்லை. எப்பொழுதும் உயர்ந்த வாசனையோடு கூடிய ஷி கார்டுகள் டஜன் ரூ. 1 தான்.

ஸ்ரீ கிருஷ்ண ஏஜன்சி,
26, வெள்ளாளத் தெரு, புரசபாக்கம், மதிராஸ்



பார்த்தீர்களா! இரகசிய நூல் படித்தீர்களா!!

"ஹிப்னாடிஸ மெஸ்மரிஸமென்னும்

## மனோவசிய ரகசிய சாஸ்திரம்.

இப்புத்தகம் ஆங்கில நாட்டார் செய்து அனுபவ மடைந்தது. இதில் தூங்காமல் தூங்குதல், தூக்கத்திலிருப்பவனைப் பலவித வேலை செய்வித்தல், பிறரை வசியப்படுத்தல், புலி முதலிய மிருகங்களைத் தன் வசப்படுத்தல், தூர சங்கதி அறிதல், மருந்தில்லாமல் ரோகம் தீர்த்தல் முதலிய பல ரகசிய மெஸமரிஸ சாஸ்திரம் சித்திரப் படங்களுடன் அடங்கியிருக்கிறது. விலை ரூ. 1—8—0. ஸ்ரீ பானுமதி புஸ்தகசாலை, சூலை போஸ்டு, மதராஸ்.



## மதுரை எலெக்ட்ரிக் கம்பெனி Ltd

ஷேர் 1-க்கு ரூ. 10.

தயவு செய்து ஷி கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகரமானது. பிராஸ்பெக்ட்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்.

# உண்மையான மதத்தை வெளிப்படுத்துவதே

## 'குடி அரசின்' பிரசாரம்.

### III-

கைவல்ய சாமியார் எழுதுவது

இளமை தருகின்ற கால வெள்ளத்தில் நிர்வாணமாக முழுகி எழவேண்டும் என்பதும் செத்ததை அடைக்கலம் புகுதல் சாதலேயாம் என்பதும் மகாகவி ரவீந்தர நாத்தாகூரின் ஆராய்ச்சி வாக்கியம். இந்த வாக்கியத்தின் உண்மைகளையே நாய்க்கரவர்களும் சனசமூகத்திற்கு எடுத்துச்சொல்லுகிறார். விர்த்தாப்பியமடைந்து சிவனில்லாமல் உயிர்போய் செத்துப்போன கிரிகைகளையும் வயிற்றுப்பிழைப்புக்காகவே ஏற்பட்ட மதக்குருக்கள் கட்டுப்பாட்டையும் ஒழிக்கவேண்டுமென்றே அவர் பிரசாரம் செய்கிறார். சென்ற காலப்புழுதியும் சருகும் அவை சம்மந்தமான ஆபாசக்கதைகளும புதிய உதயத்தை மறைக்கின்றன. நம்முடைய நன்மைத்தொழிலை அவை மூடுபனி போலவே மறைக்கின்றன. புறத்திலிருந்து நம்மீது இடைவிடாமல் சுமத்தப்படும் அவமானமும் கஷ்டமும் பட்டுப்பட்டு நீண்டகாலமிருப்பதை ஜீவ பிரயோஜனம் என்ற அவமானத்திலிருந்து தப்ப விரும்புவதையும் தப்ப விரும்பினால் குருட்டாச்சாரமென்ற சுமையைக் கூசாமல் வீசி எறிந்து விடவேண்டுமென்றே 'குடி அரசு' சொல்லுகிறது.

மனுஷ்ய ஜாதி எப்போதும் விழிப்புடன் புது நிலைமைத் தேடி மரணத்தை வெல்லுகிறது. ஜகத்தின் பெரிய சிற்பிக்கு வலக்கை போன்றிருக்கும் சுயமரியாதை உண்மையைக் கெஞ்சி அறிவுச்சுடர் கொளுத்திய வீதிவழியே செல்லுகையில் காலாகாலத்திற்குக் காலம் வெற்றிகொண்டு முன்னேறும்போது உலகமுழுதும் எதிரொலி கேட்கத்தக்க ஆரவாரம் உண்டாகிறது. இந்த மனுஷ்ய ஜாதியுடன் நாமும் சம நடையாக செல்ல விரும்பினால் மதக் கொடுமையால் நம்மீது சுமத்தப்பட்டிருக்கும் முதுகுச்சுமையை கூசாமல் வீசி எறிந்து விடவேண்டுமென்பதே 'குடி அரசின்' பிரசாரம்.

கடவுள் என்னும் தேவ சக்தியானது நமது நாட்டில் வியாபித்திருந்த காலம் ஒன்றிருந்திருந்தால் அந்தக்காலம் இந்த அற்பலோப காலத்தைப் போன்றதன்று அது கொடுமையுடைய அசுரத்தனமான அகங்காரமும் ராஜதந்திரிகளின் பொய் முழக்கங்களும் செழிப்படைந்த கபடமும் தலை எடுத்திருக்கும் இந்த காலத்தைப் போன்றதன்று. மனிதன் தனதாத்மாவிலும் ஜகத்தைப் பிரகாசப் படுத்திய பரமாத்மாவினிடத்திலும் நம்பிக்கை கொண்டிருந்த பக்தியானது இந்த காலத்தைப் போன்று கொடுமையும் ஏமாற்றும் மனிதனை மனிதன் அடிமைகொண்டு சமூகங்களைக் குலைத்துக்கெடுத்து தன் வயிறு நிறப்பும் காலமுமன்று. கருணையான அவசிய விதியினிடத்தே மனுஷ்ய இருதயத்தைப் போட்டு இன்னிசையையும் உயிருள்ள வளர்ச்சியையும் உண்மையையும் அழகையும் மேலாகவெண்ணி கேவலம் காரியலாபத்தையும் வல்மையையும் தாழ்வாக நினைத்து மனுஷ்ய ஜாதியின் பரம ஐக்யத்தையும் அன்பின் ஆழ்ந்த பந்தத்தையும் அங்கீகரித்து அனுஷ்டித்து சமத்துவமும் தர்ம சிந்தையுமுடையவர்களாய் மனிதர்கள் பரமார்த்தங்களின் உண்மை காண பக்தி செய்தார்கள். இவ்விதப்பக்திமான்களையோ அவர்கள் கடவுளையோ 'குடி அரசு' குற்றம் சொல்லாது. அப்பேர்ப்பட்ட பக்திமான்களையும் அவர்கள் கடவுளையும் முன்னிறுத்தி பல ஆபாசக் கதைகளினாலும் இதிகாசப் புராணங்களினாலும் செத்துப்போன கடவுளாம், தன் புருஷனைப் போன்று வேஷம் போட்டு கற்புடைய ஸ்திரீகளின் கற்பைக்கெடுத்து காமசாஸ்திரம் பழகின ஆசாரிகளும், குருக்களும், அவர்கள் கொள்ளையடிக்கும் பணம் ஒரு கூட்டத்தாரே தின்று அவர்கட்கே செலவு செய்து ராஜ்ய முன்னேற்றத்திற்குக் குறுக்கிட்டு அவையே மதமென்று சொல்லும் ஏமாற்றும் அசுர கொள்கைகளும் ஒழியவேண்டு மென்றே 'குடி அரசு' பிரசாரம் செய்கிறது.

இந்த தேசத்தின் புராதனச் சரித்திரமாகிய நாடகம் தோல்வியாகவே முடிந்திருக்கிறது. அதிலும் இத்தேசத்தில் வடதேசத்திலில்லாத வைதீகக் கொடுமைகள் நிறைந்திருக்கின்றன. ஆரியப் பார்ப்பார்களும் அவர்கள் தெய்வங்களும் உற்பத்தியான வட தேசத்தில் அந்த தெய்வங்களை எல்லோரும் தொட்டுக்கட்டி அணைத்துக் கொள்ளலாம். எந்த பக்தியிலும் நிருஷ்ட தோஷமில்லை. இந்துவாகவிருக்கும் எவனும் ஒரே தட்டில் ஒருவருக்குப்பின் ஒருவர் சாப்பிடலாம். இது வட தேசயாத்திரை செய்தவர்களுக்கெல்லாம் தெரியும். வேதத்தெய்வங்களும் பார்ப்பார்களும் உற்பத்தியான வடதேசத்திலில்லாத வித்தியாசமும் தீட்டும் நம் நாட்டிலுண்டாவதற்குக் காரணமென்ன? மதத்தின் வேறுபாடுதான் காரணமென்பதை 'குடி அரசு' உணர்ந்து மத அசம்பாவிதத்தின் கொடுமையால் பிரிவினையடைந்திருக்கும் ஜன சமூகத்தை ஒன்று கூட்ட 'குடி அரசு' செய்யும் பிரசாரத்தைப்பற்றி வயிறு வளர்க்கும் வைதீகர்களுக்குக் கோபம் வரலாம். வைதீகத்தை நிறுத்துவதாகக்கண்பித்த 'தமிழ் நாடு' பத்திரிகைக்கு ஒரு கஷ்டமுமில்லை. எங்கும் நிறைந்த மங்களமான சிவத்திற்கோ பக்தர்களுக்கோ குப்பை கூளம் நிறைந்த ஏடுகள் ஒழிந்துபோவதில் எந்த விதபயமும் வேண்டியதில்லை. பாவமும் வந்துவிடாது.

சில மனிதர்கள் ஒன்று கூடி யோசனை பண்ணி நாம் என்றைக்கும் பிரிவு பட்டு நிற்கும் வழிகளையல்லவா நம் நாட்டில் மதங்களாக கற்பித்திருக்கிறார்கள். நமக்கு மிகவும் இனிமையாகத் தோன்றிய சுதந்தரங்களை நாம் அனுபவியாமல் தடுக்க நம்மதத்தின் பேரால் எத்தனை புரட்டுகள் செய்யப்பட்டிருக்கின்றன? சர்வ சாதாரணமாக வழங்கத்தக்க உரிமைகளுக்குச் சிறப்புரிமைகள் என்று பெயர் சூட்டி மனிதர்களை மிருகங்களிலும் கேடாக வேட்டையாடி பாழ்படுத்தி விட்டோம். அதற்கு எத்தனையோ பலமான சாஸ்திர மூட்டைகளை வைத்துக் காத்தும் இந்த அசம்பாவிதத்தை நம்மால் ஸ்திரமாகக் காப்பாற்ற முடியவில்லை. நம்மால் எத்தனையோ உபசரணைகளையும் பெற்றுக்கொண்ட நம் கடவுளும் நம்மைக்காண வெட்கப்படுகிறது. நம் கடவுளாலும் மதத்தாலும் மந்திரத்தாலும் வைதீகச் சடங்காலும் தீராத பாவங்களெல்லாம் அன்னிய மதக்கடவுளாலும் அவர்கள் மந்திரங்களாலும் அவர்கள் பேரைச் சொன்ன மாத்திரத்தில பரிசுத்தமாய் விடுவதை பிரத்தியட்சமாகப் பார்க்கிறோம். ஆதலால் நமக்கு மரியாதையும் மதிப்பும் வரவேண்டுமானால் நம் மதத்தையும் நம் கடவுளையும் முதல் முதல் பரிசுத்தம் செய்யவேண்டுமென்று 'குடி அரசு' சொல்லுகிறது.

எல்லா விதத்திலும் நம்மைப்போன்றேயிருக்கும் மனிதர்கள் கோவிலுக்குள் வந்தால் நாமும் நம் கடவுளும் தீட்டுப்பட்டுப் பாவம் சூழ்ந்து கொள்ளுமென்றால் இந்த கடவுள் நம் பக்தியை ஏற்று நாம் இறந்தபின் நம்மை சொர்க்கத்தில் தேவர்களுடன் எப்படி சேர்க்கும்? அந்த தேவர்களும் அங்கிருக்கும் கடவுளும் நம்மால் தீட்டுப்பட்டுப் பாவத்தை யடையாதா? இதைச் சொன்னால் சைவமும் வைணவமும் பறந்துபோய்விடுமா? வியாபத்திற்கும் சேறிக்கும் பறக்கும் அவ்வளவு லேசான கடவுளும் மதமும் இருந்து தான் என்ன பயன்? நம் தெய்வங்களில் சிவத்திற்கு பிச்சை ஆண்டி என்று பெயர். விஷ்ணுவிற்கு கபட நாடக சூத்திரதாரி என்று பெயர். பிச்சை எடுப்பதும் கபடநாடக சூத்திரம் செய்வதும் தொழிலாகக்கொண்ட கடவுளையுடைய நாமும் நம் நாடும் அந்த தொழிலைவிட்டு கடைத்தேற வழி ஏதாவதுண்டா? அப்பேர்ப்பட்ட அந்த கடவுளும் அது சம்மந்தமான ஆபாசக் கதைகளும் ஒழியவேண்டுமென்றே நாய்க்கர் பிரசாரம் செய்கிறார்.

சைவத்தையும் வைணவத்தையும் அவை சம்மந்தமான ஆச்சாரிகளையும் ஒழித்துவிட வேண்டுமென்பதல்ல 'குடி அரசின்' பிரசாரம். அவர்கள் பக்திக்கும் [illegible]த்திற்கும் பொருந்தாது என்றும் சம்மந்தமல்ல என்றும் அதனால்தான் அவர்களைப்போன்றவர்கள் அவர்களுக்குத் தப்பின் தோன்றவில்லை என்றும் 'குடி அரசு' சொல்லுகிறது. சுந்தரருக்கு சுந்தரேஸ்வரர் தேவடியாள் வீட்டுக்குப் போய் பொன் கொடுத்ததாகவும், அதற்கு இணங்காதவளிடம் கடவுளே தூது போனதாகவும், பாண்டியன் சைனியத்திற்கு குதிரை வாங்கப் போன மந்திரியான மாணிக்கவாசகர் அப்பணத்திற்கு கோவில் கட்டிவிட, அதைக்கண்டு பாண்டியன் கோபிக்க, சிவபெருமான் நரியைக் குதிரையாக்கிக் கொடுத்து ராத்திரியில் குதிரை நரியாகி பழய குதிரைகளையும் கடித்து கொன்றுவிட்டு காட்டிற்கே போய்விட்டதாகவும் சொல்லப்படுகிறது. இந்தக் கதைகள் ஆசாரிகளுக்கும் அவர்கள் கடவுளுக்கும் பெருமையாகச் சொல்லப்படுகிறது: அபார பக்தி அவர்களுக்கு இருந்ததைப்பற்றியல்ல இங்கு சமாதானம். அனுபோகத்திலுண்டாயிருக்கும் கெடுதலே இங்கு பிரதானம். ராஜாவுக்கு சைன்யமே முக்கியம். அதில் குதிரை மிகவும் முக்கியம். அந்த பணத்திற்கு கோவில் கட்டி விட்டால் அந்த ராஜாங்கம் எப்படி நிலைக்கும்? பாண்டிய ராஜ்யம் அழிந்து விஜய நகர ராஜ்ஜியம் ஏற்படுகையில் கோவில் கட்டுவதே விசேஷமென்று சிவபெருமான் நினைத்திருந்தால், பாண்டிய ராஜயம் ஏன் அழிக்கப்படவேண்டும்? ராஜாங்கத்திற்கு முக்கியமான சைனியத்திற்கு வேண்டிய சாமக்கிரிகைகளைச் சேகரம் பண்ணும் பணத்தால் கோவில் கட்டி விட்டதினால் தான் அன்னிய ராஜாங்கம் உண்டாயிற்று என்பது பிரத்தியக்ஷ மல்லவா. ராஜ்யத்தைக் காப்பாற்ற சைனியத்தையும் சன சமூகங்களை விர்த்திசெய்ய கல்வியையும் தொழிலையும் விர்த்தி பண்ணாமல் அந்தப்பணத்தை யெல்லாம் கோவில் கட்டி அபிசேஷமென்றும் ஆராதனை என்றும் சமாராதனை என்றும் தேர் திருநாள் உற்சவமென்றும் எல்லாப் பணத்தையும் செலவு செய்து கடவுளும் பக்தர்களும் தேவடியாள் வீட்டிலே இருப்பதாக பெருமை பேசிக்கொண்டிருக்கும் மதம் எந்த தேசத்தைத்தான் முன்னுக்குக் கொண்டுவரும்? இதனால் அழிந்துபோன தேசத்தைக் காட்ட முடியுமே யொழிய விர்த்தியான அம்சம் எதையாவது காட்ட முடியுமா? கோவிலை நம்பி அழிந்தது பாண்டிய ராஜ்யம். பார்வதியால் சிருஷ்டித்[illegible] பெண்ணை தனபத்தினிடமே [illegible]

[illegible] தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க

# திரு. சோமசுந்தரம் பிள்ளையின் சொற்றடுமாற்றம்.

—:o:—

"தமிழன்" பத்திரிகையில்

திரு தருமசேனன் எழுதியது

உயர்மிகும் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் திரு. கா. சோமசுந்தரம் பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட "இந்துமதமும் வைக்கம் வீரரும்" என்ற வியாசத்துக்குத் தமது 25-12-27 "குடி அரசு" இதழில் ஆணித்தரமான பதிலிறுத்துள்ளார். அதற்குள் திருவாரியேனும் அசைக்கவேலாப் பிள்ளையவர்கள் சென்ற 14-2-28ல் வெளியான 'தமிழ்நாடு' வாரப்பதிப்பில் 'நாயக்கர் பிரசாரம்' என்னுந் தலைப்புத்தீட்டி நீண்டதோர் வியாசம் எழுதியுள்ளதைக் கண்டோம். இது 'மாயவரம் போக வழி எதுவென்றதற்கு இம்மாடு பால் கறக்கவில்லை' யென்றவன் கதைபோல் நிலவுகின்றதே யன்றிச் சிறிதும் அறிவுடையோரால் புகழ்பெற்றேர்துந் தன்மைத்தாய்க் காணப்படவில்லை.

"இந்துமதமும் வைக்கம் வீரரும்" என்னும் பிள்ளையவர்கள் வியாசத்திற் போதரும் ஒவ்வொரு வினாவுக்கும் உயர்மிகும் நாயக்கர் அவர்கள் அறிவுச்சுடர் விடை முரசார்த்திருக்க அதனை மறுக்கவோ உடன்படவோ வேண்டிய தருக்க முறையினை விடுத்து அவற்றிற்குச் சிறிதும் நேயமில்லா வேறொரு பாரணம் பாடற்கு நமது பிள்ளையவர்கள் "தமிழ் நாடு"வைத் தஞ்சம் கொண்டது அவர்தம் ஆற்றாமையையே தேற்றமாக்குகின்றது.

இந்து மதத்திற்குப் பற்றுக்கோடாகப் புறப்பட்ட பிள்ளையவர்கள் நம் இந்து மதமும், இந்துக்களின் இந்து மதமென்றால் குற்றமொன்றுமிருப்பதாய்த் தெரியவில்லை என்கிறார். ஆம் இந்து மதம் இந்துக்களின் மதம், என கள், இன், முதலிய உருப்புகளைச் சேர்த்துக் கூறுவதால் குற்றமில்லைதான் அங்ஙனம் கூறுவது கூற்றமென்று நாயக்கராவது, மற்றவராவது கூறமாட்டாரென்பது துணிபே. ஆனால் இந்து மதம் என்பதற்குப் பொருளுமில்லை, பொருத்தமுமில்லை யென்பதுதானே திரு.நாயக்கர் அவர்களின் வாதம். அதற்கு பொருள் தேரவேலாப் பிள்ளையவர்கள் "இந்து மதம்" என்றால் குற்றமென்னை? என வினவியது வழுவன்றோ? பொருளற்றவொன்றை பொருளுளதே போல் பிதற்றல் முக்காலமும் குற்றமே என்பதை பிள்ளையவர் இனியேனும் அறியக்கடவர்.

"மூக்கேயில்லை யென்றால் முகத்துக்கழகு எங்கிருந்தேற்படும்" என்பதுபோல "இந்துமதம்" என்பதற்கேபொருளில்லை என்னும்போது அதன் ஆலயங்களின் சக்தியைப்பற்றியும், அற்புதங்களைப்பற்றியும் தேவர்களைப்பற்றியும், நமது பிள்ளை அவர்கள் பேசப் புறப்பட்டது மிகவும் வியப்பைத் தருமொரு சார்புடைத்தே. திருச்செந்தூர், திருவண்ணாமலை, திருப்பேரூர், சிதம்பரம் முதலிய கோவில்கள் மகா சக்திவாய்ந்தவைகள் என்று மிரட்டுகிறார். அவைகள் என்ன சக்தி என்பதை பிள்ளையவர்கள் விளக்கிக் கூறாதொதுங்கியதேனோ? திருச்செந்தூரில் வாணியரைக் கோயிலில் விடாது வழக்காடும் சக்தியும், திருவண்ணாமலையில் ஆலய தரிசனம் செய்ய விடாமல் கதவடைத்துக் கொண்ட வழக்கின் சக்தியும், சிதம்பரத்தில் நந்தனை வதைத்துக் கொன்ற சக்தியும், பழனியில் அறுக்கிற கோழி கூவுகிறது, கொதிக்கிற மீன் சிரிக்குது என்ற மூடநம்பிக்கையால் ஏற்படும்படுகொலைப்பாதகத்தின் சக்தியுமல்லாமல் வேறென்ன சக்தி யுண்டென்பதை நமது பிள்ளையவர்கள் விளக்க வெளிவரட்டுமே. பிறகு கோவில் சக்திகள் படும்பாட்டைச் சிறிது பார்க்கலாம்.

கோவில்களில் சக்தி யுண்டென்ப வென்று சட்டியில் குதிரையோட்டி பாமரர்களை ஏய்த்துப் பொருளும், பதவியும், உயிரும் வவ்விய காலம் இதுவல்ல வென்பதை நமது பிள்ளையவர்கள் இன்னும் அறியாத மயக்குதலைப் பற்றி நாம் வருந்தாமலிருக்க முடியவில்லை. அன்றியும், சர்ப்பக்காவடி, மச்சக்காவடி, அன்னக்காவடி தீ மிதித்தல் முதலியவைகள் கடவுளை ஆய்ந்தறியும் ஆற்ற வில்லாதவர்களுக்கு, பக்தியை புகட்டும் நன்முறைகளாம். இதையே அற்புதங்கள் என்று பிள்ளையவர்கள் கூறினாராம். அங்ஙனமாயின் அவைகள் அற்புதமாவ தெங்ஙனம்? தோலைக்காட்டி பாம்பை யுண்டாக்கும் பாம்பாட்டி வித்தையைப்போன்றபடுமோசச்செயலென்றன்றோ சொல்லவேண்டும்? உள்ளதைத் திரித்துணரும்படி செய்வது பாமரரை இன்னும் மூடர்களாகச் செய்யும் பாபகாமான காரிய மல்லவோ? இதுபற்றி யன்றோ மிஸ் மேயோவின் புத்தகத்தில் இந்துமதம் இடர்பட்டு நிற்கின்றது. மேலை நாட்டில் ஆரியர்கள் படுசூரணப் பட்டொழிவதற்குக் காரணமென்ன வென்பதை நமது பிள்ளையவர்கள் ஆய்ந்துணர்ந்திருப்பரேல் இத்தகைய வழுவான அற்புத வார்த்தைகூற முன்வந்திருக்கமாட்டார்.

அன்றியும் கடவுளை அறியுமறிவாற்றலில்லா மூடர்க்கு மச்சக்காவடி முதலிய அற்புதங்கள் நன்மறையினால் நமது பிள்ளை எவ்வித ஆற்றலுடையவரென்பதை விளக்க வேண்டுமல்லோ? காண்டற்கருதல் முதலிய நல்லறப்புக்களால் கடவுள் ஆன்மா முதலியவற்றை நிலைநாட்டும் உணர்வற்ற பிள்ளையவர்கள் கடவுள் ஆன்மாவென வெற்றுரையாட முன்வந்துளது குருடனுக்குக் குருடன் வழி காட்டுவதற்கொப்பாயிருக்க இவர் மற்றையோரை அங்ஙனஞ் சுட்டுவது தன்குற்றமோரா தப்பறை யாகுமன்றோ.

ஆகாயத்தை அறியும் நுண்கருவியினும் மிக்கதான மனதினால்தான் கடவுளையறிய முடியுமென்று நமது பிள்ளை கூறுகிறார். இக்கூற்று மனோதத்துவ நிலையினைப்பற்றிய நுண்மாணுணர்வு பிள்ளையவர்களுக்கில்லை யென்பதையே விளக்கமாக்குகின்றது. புலன்களால் உணரப்படுவனவைகளையே மனம் உறையுளாய்க்கொண்டு உன்னி உணரும் ஆற்றலுடைத்தல்லால் புலன்களால் உணரப்படாதனவற்றையும், புலனுக்குப் புலனாநதனவற்றையும், மனம் ஒரும் தன்மைத்தல்ல. புலனுணர்வைப் போகவிடாது அகத்தேகொண்டிருத்தலும், உள்ளதை யுன்னி பெயர்தலுமே மனதின்செயலல்லால் மற்றொன்றுண்டென்பதெல்லாம் மயக்குறையாம்.

இந்த மனோ சரண வாதத்தில் பௌதம் ஒன்றே அதன் தன்மையை நன்குணர்ந்து சற்றேக விபரீதமின்றி விளக்குகிறதே யன்றி மற்றைய மதங்களெல்லாம் மனதின் தன்மையை இனைத்தென்றே துணிவதற்கேலாத விடர்பாட்டினையே மேற்கொண்டிருக்கின்றன. புலனுறுங் காட்சியின் உணர்வின் சேர்க்கையிலேயே மனிதன் காட்டுமிராண்டித் தன்மையாம் நாசத்தியினின்று படிப்படியாயுயர்ந்து அறிவின் பூரண ஆற்றலால் மேனிலையுற்றானென்பதை உயிர்நூற்புலமை உடையார் எவரும் மறுத்துரையாரென்பது திண்ணமாம். இதன்படித் திறத்தையுணரு மாற்றலற்ற பிள்ளையவர்கள், மனித உணர்ச்சியும் மூட நம்பிக்கையும் அவசியமில்லை, மனித தன்மையும் அறிவும் அடையப்பெற்றால் போதமென்று நமது நாயக்கர் கூறிய மெய்யுரையை யிகழ்ந்து, குண்டலியினின்று கனலெழும்புவதினால் அடையப் பெறும் இன்பம் ஒரு புட்டி சாராயத்தி லடைய முடியுமோ! வென்கின்றார். அக்குண்டலி ஞானமும், அறிவுக்கும் மனிதத்தன்மைக்கும் உட்பட்டதா புறப்பட்டதா வென்பதை உணர்ந்திருப்பரேல் பிள்ளையவர் குண்டலி பேச்சு கள்ளைப் பேச்சாமென்பதை நன்குணர்வர்.

சதுர் வேதங்களை அடியாகக் கொண்டு தோன்றியிருக்கும் இந்துமதமானது பிராமணரின் மதத்துவத்தை நிலைநாட்டவும் நம் நாட்டின் நற்குடி மக்களை யடிமைப் படுத்தவும் ஏற்பட்டதொன்றேயன்றி வேறல்ல. ஆலயங்கள் அற்புதங்கள் என்பனவெல்லாம் பிராமணரைக் கொழுக்கவைத்து தமிழரை வாட்டும் தந்திரங்களாகவே காணப்படுகின்றன. இவற்றினின்றும் வேறுபட்ட இந்து மதம் ஒன்றுண்டென்று பிள்ளை யவர்களாவது மற்ற யெவராவது ஐயமற விளக்கிக்காட்ட வெளிவரட்டும். வீணே மதப்பற்றினால் பொறாமை பற்றி உண்மை தேசபக்தரும் சுயமரியாதை வீரருமாகிய பெரியோர்களை தாக்க முற்படுவது தாம் விழப் படுகுழி வெட்டினதற்கே ஒக்கும்.

சத்தியத்தையும் மனச் சாட்சியையுமே தங்கட் பிடியாகக் கொண்டு திகழும் உயர்திரு ஈ. வெ. இராமசாமிநாயக்கர் 'தமிழன்' ஆசிரியர்போன்றவர்கள் நமது பிள்ளையவர்கள் போல எத்தனை பிள்ளைகள் புறப்பட்டாலும் அவர்கள் பிள்ளைத்தனத்தை நீக்கிப் பெருந்தன்மையையூட்டுவாரென்பதிற் சிறிதும் ஐயமில்லை.

---

# நாயக்கர் பிரசாரத்தை ஏய்க்கும் பிரசாரம்.

"தமிழன்" பத்திரிகையில்

திரு. அ. கமல சீலன் எழுதியது

பன்னூறு ஆண்டுகளாகப் பார்ப்பனீயத்தால் அடிமைப்பட்டு சுயமரியாதை யற்றுக்கிடக்கும் "தமிழ் மக்களின்" விடுதலைக்காக நமது ஸ்ரீ ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் மேற்கொண்டுள்ள [illegible] செறிந்த பேருழியத்துக்குத் தமிழுலகம் மிகுதியும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. ஆனால் மக்களின் நன்னிலை வாழ்க்கையாதென்பதையும் அதை யடைதற்குரிய வழியாதென்பதையும் கால தேசவர்த்தமானத்தைத் தழுவி ஆய்ந்துணருமாற்றல் இல்லாதவர்களாய் சிலர் தமது பிடிவாத மென்னும் மூக்குக்கண்ணாடி வழியால் நோக்கி மதத்துக்கே ஆபத்துண்டாய் விட்டதென்று வெகுண்டு வசைபுராணம் இசைக்க முன்வந்திருக்கின்றனர். அந்தோ இவர்மாட்டு இரங்குவதல்லால் எழுதுவதியாதுளது?

இக்கோடலுக்கு எட்டுணையும் இளைக்காதவர்களாகிய விஜயபுரம் சர்வமத சகோதர சங்கத்தாரின் வெளியீடுகள் மிகுதியும் நகைச்சுவை ததும்புவனவாய்க் காணப்படுகின்றன. முரண்பாடில்லா ஒரு நற்பெயரைத் தங்கள் சங்கத்திற்கென்று தெரிந்து கொள்ள முடியாத இவர்கள் "சர்வ மத சகோதர சங்கம்" என வெளித்தோன்றிச் சைவசமயமே தொன்மைத்துந் தூய்மைத்து எனக்கூற முன்வந்துளது சர்வ மத சகோதர சங்கற்பம் போலும்!

மதங்கள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று முரண்பாடான தனிச் சிறப்புடையன வென்பதை ஆழ்ந்த மதவுணர்ச்சியுடைய எவரும் மறுத்துரைக்க முன்வாரார். ஆதலின் ஒன்றிற்கு

இதன் தொடர்ச்சி 17 ம் பக்கம் பார்க்க.

## இதிகாசங்கள்

### இராமாயணம்—பாலகாண்டம் கட்டுரை 6.

திரு சந்திரசேகரப்பாவலர் எழுதுவது.

விசுவாமித்திரன் இராமனை நோக்கி கங்கையின் வரலாற்றைச் சொல்லத் தொடங்கினான். 'இமய மலையரசனுக்கு கங்கையென்றும் உமையென்றும் இரண்டு பெண்கள் பிறந்தனர். ஒருநாள் தேவர்கள் வந்து மலையரசனிடம் உம்முடைய மூத்த பெண் கங்கை மூவுலகங்களிலும் ஓடும் ஆறாக வேண்டுமென்று வேண்ட அவனும் இசைந்தான். தேவர்கள் பின் கங்கை விண் சென்று ஆகாயகங்கையெனப் பெயர் பெற்றது. சிவபெருமான உமையைக் கலியாணம் செய்துகொண்டு அவளோடு சம்போகிக்கத் தொடங்கினார். அவ்வாறு அவர் நூறு தேவ ஆண்டு சம்போகித்தும் அவருக்கு அந்தப் பார்வதியினிடத்தில் பிள்ளையுண்டாகவில்லை. பிறகு பிரம்மா முதலான தேவர்கள் இந்தப் பார்வதியினிடத்தில் ஒரு பிள்ளை பிறந்தால் அந்தப் பிள்ளையை எவன் பொறுப்பான் என்று பயந்தவர்களாய் சிவபெருமானைக் கும்பிட்டு 'தேவாதி தேவா! உமது வீரியத்தாலுண்டாகும் பிள்ளையை உலகங்கள் தாங்கமாட்டா. ஆகையால் இதை விட்டு நீர் உமது மனைவியாரோடும் தவம் செய்யவேண்டும். மூவுலகங்கட்கும் நன்மை யுண்டாக வேண்டி நீர் உமது வீரியத்தை உமது ஒளி பொருந்திய உடம்பிலேயே தரிக்க வேண்டும்' என பிரார்த்தித்தனர். அதற்கு சிவபெருமான் 'அவ்வாறே ஆகட்டும். இப்போது வெளியான வீரியத்தை எவன் தரிப்பான்' என்று கேட்டனர். அவர்கள் பூமி தரிப்பாள் என்று கூற அவர் பூமியில் விட்டனர். அந்த வீரியத்தால் மலைகளும் காடுகளுமாகிய பூமியெல்லாம நிரம்பிவிட்டது. அதைக் கண்டு தேவர்கள் அக்கினி பகவானைப்பார்த்து 'நீர் வாயு பகவானோடுகூடி சிவபெருமானது வலிய வீரியத்தினுட் புகுதல் வேண்டும்' என்று சொல்லினர். அந்த வீரியமானது அக்கினியினால் வியாபிக்கப்பட்டு வெள்ளி மலையாகவும் நாணற் காடாகவும் ஆயிற்று. அந்த நாணற் காட்டிற்றான் அக்கினி தேவனுக்கும் கார்த்திகைப் பெண்களுக்கும் மகனாய் ஆறுமுகக் கடவுள் தோன்றினார். பின்பு பார்வதி தேவி தேவர்களைப் பார்த்து 'பிள்ளையுண்டாகக் கோரி நான் செய்துகொண்டிருந்த சம்போகத்திற்கு நீங்கள் இடையூறு செய்ததனால் உங்கள் மனைவியரிடம் நீங்கள் பிள்ளையைப் பெற மாட்டீர்கள்' என்று வெஞ்சொல்லுரைத்து பூமியைப் பார்த்து 'புத்திகெட்ட பூமியே! எனக்குப் பிள்ளையுண்டாவதைக் கோரத்தனாலும் கோபத்தை விளைத்ததனாலும் நீ அநேக ரூபமுடையவளும் பலர்க்கு மனைவியுமாயிருக்க. பிள்ளையுண்டாவதனால் வரும் மகிழ்ச்சியையும் நீ அடையாதிருக்க' என்று சபித்து விட்டாள். வானவர் வேந்தாகிய சிவபெருமானானவர் அவ்வாறு பார்வதியினிடத்து சாபம் பெற்ற வெட்கங்கொண்டு நிற்கும் தேவர்களைப் பார்த்து கவலைப்பட்டு வருணன் பாதுகாக்கும் மேற்றிசையை அடைந்து தமது மனைவியோடு இமய மலையின் வட பக்கத்தில் தவஞ்செய்து கொண்டிருந்தார். இனி கங்கையின் வரலாற்றைக் கேள்' என்று கூறிபின்னரும் கோசிகமுனிவர் இராமனை நோக்கிக் கூறுவாராயினர். (இதுவரை கதை வால்மீகி பாலகாண்டம் முப்பத்தாறாம் சருக்கம்).

இராம! சிவபெருமான் இவ்வாறு தவஞ்செய்து கொண்டிருக்கையில் வானவர் தமக்கொரு படைமன்னருண்டாகக் கருதினர். அக்கினி இந்திரனோடும் தேவரோடும் கூடி நான்முகனையடைந்து 'நமது படை மன்னர் உமாதேவியாரோடு கூடித் தவஞ்செய்வதால் வேறு படைமன்னரைப் பெறத்தந்திரம் சொல்லும்' என்றனர். நான்முகன் 'உங்களுக்கு உங்கள் மனைவியிடம் பிள்ளை யுண்டாகாதென உமை சொன்னசொல் வீணாகாது. இது உண்மை. ஐயமில்லை. அக்கினி பகவான் படைமன்னரை இந்தக் கங்கையினிடம் உண்டு பண்ணுவான். கங்கையும் பிள்ளையுண்டாக உடன்படுவாள். அது பார்வதிக்கும் சம்மதமாயிருக்கும்' என்றனன். தேவர்களனைவரும் கைலாச மலையை படைந்து அக்கினி பகவானைப்பார்த்து 'சுவாமி! முன்னே நீர் தரித்துக்கொண்டிருக்கும் சிவபிரானது வீரியத்தை கங்கையினிடத்தில் விடவேண்டும்' என்று தூண்டினர். அதுகேட்ட அக்கினியும் கங்கையினிடம் வந்து 'கங்காதேவி சிவபெருமானது இவ்வீரியத்தை வாங்கிக்கொண்டு நீ கர்ப்பந்தரிக்கவேண்டும்' என்றனன். கங்கை பெண்ணுருத்தாங்கினள். அக்கினி பகவானும் தமது எல்லா சரீரத்தினின்றும் சிவபெருமானது வீரியத்தை அவளிடத்தில் நிரம்பப் பொழிந்தான். கங்கை அத்தீயினால் வெதுப்பப் பெற்று மனதில் மிக வருத்தங்கொண்டு தீயைப்பார்த்து 'நீர் மேலும் மேலும் விடும் இச்சிவ வீரியத்தை நான் தரிக்க வல்லவளல்லேன்' எனலும் தீ 'அப்படியாயின் இக்கருவை இமயமலையின் இச்சிறிய குன்றில் விடு' என்றனன். உடனே கங்கை அந்தக் கருவை வெள்ளத்தினின்று எடுத்து வெளியில் விட்டு விட்டாள். அந்த வீரியத்திலிருந்து பொன் வெள்ளி முதலிய லோகங்களெல்லாம் உண்டாயின. கங்கையின் கருப்பத்திலிருந்து சுப்பிரமணியசாமி உண்டாகவே வானவர் கார்த்திகைப் பெண்களை நோக்கி அப்பிள்ளையை வளர்க்கச் சொல்லினர். அப்பெண்கள் நழுவிய கர்ப்பத்திலுண்டாய் விளங்கும் அக்குழந்தையைக் குளிப்பாட்டினார்கள். நழுவிய கர்ப்பத்திலுண்டானதால் ஸ்கந்தா என்றும் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப் பெற்றதால் கார்த்திகேயர் என்றும் தேவர்கள் அப்பிள்ளையை அழைத்தார்கள். அப்பெண்கள் அறுவரின் முலைப்பாலையும் அப்பிள்ளை ஆறுமுக முடையவராய்க் குடித்தார். பிறகு வானவர் அப்பிள்ளையைத் தமக்குச் சேனைத்தலைவராய்க்கொண்டனர்' பின்னரும் விசுவாமித்திர முனிவர் அக்கங்கையின வரலாற்றைக் கூறத்தொடங்கினர். (இதுவரை கூறியது முப்பத்தேழாவது சருக்கம்).

மேலே கண்ட வரலாற்றை ஆராய்வோம். இவ்வரலாறு கேட்பதற்கு மிகவும் வெறுப்பைத் தருவதாக உள்ளது. தேவர்களுக்கெல்லாம் தலைவராகிய சிவபெருமான் உமையோடு நூறு ஆண்டுகள் புணர்ந்தும் இந்திரியம் வெளிப்படவில்லையென்றும் அப்புணர்ச்சி யூடே பிரமன் முதலிய தேவர்கள் அவர்களைக்கண்டு புணர்ச்சியிலிருந்து நீங்க வேண்டினரெனவும் அவ்வேண்டுதலுக்குச் சிவபெருமான் இசைந்தனரெனவும் ஆனால் பார்வதி மட்டும் சினங்கொண்டு தேவர்களைச்சபித்ததோடு நில்லாமல் ஒரு பாவமுமறியாத பூமியையும் சபித்தனளெனவும் கதை வருகிறது. இது வியப்பாகவேயிருக்கிறது. இந்நூல் வைணவ நூலாதலின் சைவத்துக்கு இழுக்குக் கூற இவ்வரலாற்றைக் கூறியிருக்கவேண்டும்; இல்லையாயின் ஆரியர் கொள்கைகளை இவ்வாறு ஆபாசமாக இருந்திருக்க வேண்டும். இதனை முன்னரே கண்டோம். இவ்வித ஆபாசமான வரலாறுகளை எழுதுவதற்கு அவர்கள் மனம் துணிந்துள்ளதாகலின் இதனால் அவர்களுடைய இழிந்த ஒழுக்கம் புலனாகிறது.

மேலும் நூறாண்டு புணர்ந்தும சிவபெருமானுக்கு வெளிப்படாத வீரியம் தேவர்கள் வந்து தடுத்ததும் வெளிப்பட்டதாகவும், அதை அவர் விண்ணவர் கூறியபடி பூமியில் விட்டதாகவும், பின் அதில் அக்கினிதேவனும் வாயுதேவனும் கூடி உட்புகுந்து தமது உடலில் ஆக்கிக்கொண்டனரென்றும் தெரிகிறது. இதுவும் வியப்பாகவே இருக்கிறது. தீயும் காற்றும் கூடி யாது செய்தனர் என்பது தெரியவில்லை. வீரியத்துட் புகுதலாவதென்ன? ஒருவேளை அதை அவர்கள் உண்டு தம்முடலில் சேர்த்துக்கொண்டனர் போலும்!

தீக்கடவுள் நாணற்காட்டில் கார்த்திகைப் பெண்கள் அறுவரோடும் கூடி ஆறுமுகக் கடவுளைப் பெற்றான் என்று 36ம சருக்கமும் அவன் கங்கையோடுகூடி தான் வைத்திருந்த சிவபிரானுடைய வீரியத்தை அவளிடம் பெய்து ஆறுமுகனைப் பெற்றான் என 37ம் சருக்கமும் கூறுகின்றன. இவை ஒன்றுக்கொன்று மாறுபட்ட செய்திகளே. 37 ம் சருக்கம் கார்த்திகைப் பெண்கள் முருகனை வளர்த்தனரென்று கூறுகிறது. மேலும் சிவபிரானுடைய வீரியத்தை தீக்கடவுளும் காற்றவாயனும் கூடி உண்டிருக்க தீக்கடவுள் அவ்வீரியத்தை வெளி விட்ட செய்திமட்டும் கேட்கப்படுகிறது. வாயு கொண்ட வீரியம் என்ன வாயிற்றோ? தெரியவில்லை. அதைப்பற்றிய பின் வரலாறு ஒன்றும் நூலில இல்லை. இன்னும் கங்கைகொண்ட கரு நழுவி விழுந்து விட்டதாகவும் அதிலிருந்து தான் முருகன் தோன்றினனென்றும் கதைபோகிறது. இவைகளையெல்லாம் சிந்தித்துப்பார்த்தால் வேடிக்கையாகவே இருக்கிறது. இந்த வரலாற்றின் ஆபாசத்தை உணர்ந்த பண்டித நடேச சாஸ்திரியார் தமது மொழி பெயர்ப்பில் இதனை மொழிபெயர்க்காது விட்டுவிட்டு விருப்பமுடையோர் மூலத்தில் பார்த்துத் தெரிந்துகொள்ளட்டும் என்று எழுதினார். இது

இதன் தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க

## ஆலயம் புகுந்த ஆதிதிராவிடப் பெண்.

பிப்ரவரி மாசம் 17 தேதி வெள்ளிக்கிழமை மாலை சில ஆதித்திராவிடச் சகோதர சகோதரிகள்சுவாமி தரிசனம் செய்யவேண்டிச்சென்னை தங்கசாலைத் தெருவிலுள்ளசுப்பிரமணியர்கோவிலுக்கு சென்றார்கள். ஆடவர்கள்கோவிலுக்குள்செல்லாமல்வெளியிலேயே நின்று கொண்டார்கள். ஆனால் ஒரு ஆதிதிராவிட சகோதரி மாத்திரம் தைரியமாய் உள்ளே சென்றாள். அவளைக்கண்ட அக்கோயில் குருக்கள் அவளை இன்னுளென்றறிந்ததும் மிக்க கோபத்துடன் அவள் எப்படி கோயிலுக்குள் வரலாமெனக்கேட்டு அதட்டினார் அதற்கு அப்பெண் "சாமியைக் கும்பிட வந்தேன். இதோ இருக்கும். தேங்காய் பழத்தை வைத்து, கற்பூரத்தைக் கொளுத்திக் காண்பியுங்கள்" என்று சொன்னாள். குருக்கள் ஒன்றும் செய்வதற்கே இல்லை. நாலாபக்கமும் விழித்துப்பார்த்தார். அப்பொழுது வெளியே நின்றிருந்த ஆதிதிராவிடர்களைப் பார்த்தார். இம்மாதம் 3 தேதி ஏற்பட்ட சைமன் பகிஷ்காரத்தினத்தன்று நடந்த கலவரத்தை யறிந்திருந்த அக்குருக்களுக்கு இன்னும் பயம் அதிகரித்தது இதைப்போன்ற கலகமும் தீங்கும் எங்கே ஒருக்கால் நேரிடுகின்றதோ என்று அஞ்சி தாம் எவ்விதத்திலாகிலும் தப்பிப்பிழைத்துப் போவதே நலம் என்று கருதி உடனே அப்பெண்ணை யழைத்து அவள் கொணர்ந்திருந்த பழம் தேங்காய் கற்பூரம் முதலியவைகளைப் பெற்றுக்கொண்டு அவளையும் உள்ளேயழைத்துச் சென்று சுவாமிதரிசனம் செய்வித்தனுப்பினான். தெற்கே திருநெல்வேலி, மதுரை ஜில்லா முதலான இடங்களில் இந்துக்கள் என்று அழைக்கப் பெறும் நாடாரும் மருத்துவரும் வணிகரும் ஆதிதிராவிடர்களும் இந்துக்கள் கோயிலில் செல்லக் கூடாது என்னும் கட்டுப்பாடு இன்றும் இருக்கக்காண்கின்றோம். இனியேனும் அவர்கள் அனைவரும் ஒன்று கூடி மற்றவர்களைப் போன்று அவர்களும் கோயிலுக்குட் பிரவேசிக்கத் தகுந்தவாறு விரைவில் முயற்சிப்பார்களென்று எதிர்பார்க்கிறோம். இக்குருட்டுக்குருக்கள்மாரும் கடவுள் முன்னிலையில் எம்மக்களும் ஒரே மக்கள் என்ற நல்லுணர்ச்சியைப் பெற்று தம் அகங்காரத்தை அறவே ஒழிப்பார்களா.

ஒருசிருபர்

---

## சைமன் கமீஷனுக்கு தஞ்சை ஜில்லா கிலாபத்கமிட்டியின் அழைப்பு.

இந்தியாவில் ராஜீய கட்சிகள் என்பவைகள் ஒரு சில படித்தவர்களும், பணக்காரர்களும் சேர்ந்த சுயநலக்கட்சிகளே யல்லாமல் தேசமகா ஜனங்களின் பிரதிநிதிகள் அல்ல; அக்கட்சிகளிலும் பெரும் பான்மையோர் பிராமணர்கள் என்பவர்களே. முஸ்லீம் வகுப்பாரில் பெரும்பான்மையோரும் ஆதிதிராவிட வகுப்பாரும் கல்வியில்லாமலும், கைத்தொழில் இல்லாமலும் படித்த வகுப்பாராலும், பணக்காரர்களாலும் அடக்கப்பட்டுக் கிடக்கிறார்கள். தங்கள் வருகையினால் இவைகள் கவனிக்கப்படுமென்று நம்புகின்றோம். தாங்கள் இவிடம் விசாரணை செய்ய விஜயம் செய்யும் போது எங்களால் கூடிய உதவி செய்யத்தயாராயிருக்கிறோம் என்று தஞ்சை ஜில்லா கிலாபத் கமிட்டி காரியதரிசியவர்கள் சைமன் சபையாருக்கு எழுதியிருக்கிறார்கள்.

---

## இந்து மத ஆலயமா? காம பீடமா?

(திருச்சி ஸ்ரீமதி சிவம்பாய் அம்மாள் எழுதியது.)

சகோதரர்! சகோதரிகளே! நம் இந்து மதக் கொடுமைகளையும் ஆபாசக்கொள்கையான பல பொய்க் கதைகளையும் நீக்கி பரிசுத்தப்படுத்தப் பாடுபடும் பத்திரிகை இவ்வுலகில் 'குடி அரசு' ஒன்றே என்பது யாவருமறிந்ததே.

அதில் ஆலய விஷயமாக பல நண்பர்கள் எழுதியும் பிரசாரம்செய்தும் வந்ததில் ஒரே ஒரு பெருங் கொடுமையை மாத்திரம் விட்டதைப்பற்றி பெண் மக்களாகிய நாங்கள் விசனிக்காதிருக்க முடியவில்லை.

பெண் மக்களாகிய நாங்கள் ஆலயத்திற்கு சென்று கடவுளை நிம்மதியாய் நினைத்து பரவசமடைவதற்குள் பல காம வெறியர்கள் முன்னும் பின்னும் அமுக்கி தங்கள் காம வெறியைக் காட்டுவதல்லாமல் எங்கள் பக்தியையும் நல்லறிவையும் கெடுத்து அதிக காம இச்சையையும் உண்டாக்கி விடுகிறார்கள். எங்கள் கெதி கோவில் மூலஸ்தானத்திலுமிப்படி. இருந்தால் எங்ஙனம் தெய்வ பக்தியை அடைவதோ தெரியவில்லை.

நல்ல இரத்த ஓட்டமுள்ள இந்து மத புருஷர்களே! உங்கள் பெண்டு பிள்ளைகளை கோவிலின் பேரால் கோடிக்கணக்கான புருஷர்கள் கட்டிக்கசக்கவும் காம இச்சையை வளர்க்கவும் விடாதேயுங்கள். அகத்தில் ஒரு புருடனும் ஆலயத்தில் பல புருடனுமா! மற்ற மத ஆலயத்தைப் பாருங்கள். பெண்கள் வேறிடமும் ஆண்கள் வேறிடத்திலுமிருந்து கடவுளை வணங்குகிறார்கள்.

---

## கலிகால தர்மாதிபதி

### கா. வில்லானம் பலகாரர் காலமானார்

12—3—28 காலை 5 30 மணிக்கு மருங்காபுரி ஜமீன் அக்கயம்பட்டி கா. வில்லானம் பலகாரர் காலமானார். இவர் சுயமரியாதை சங்கம் நிறுவிய தோழரில் சிறந்த சிரேஷ்டராவர். ஏழைகள் சோதரனாய் வாழ்ந்து வந்திருந்ததால தகனம் செய்யும் பொழுது ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்திருந்தனர்.

ஜஸ்டிஸ்பார்ட்டி தெலுனிந்திய நலவுரிமைச்சங்கத்தின் காரியதரிசி திரு வி. பெரியாண்டி மூப்பனாரால் பற்பல ஆதிதிராடர்களுக்கு வெண்பொற்காசும் கதர் வேஷ்டிகளும் இனாமளிக்கப்பட்டது மிகவும் புகழத்தக்கது என்று கற்பக நாட்டுத்தலைவர் அறிவிக்கிறார்.

---

## பூணூல் திருட்டு

8—3—28 திருச்செந்தூர் முருகக்கடவுள் சந்நிதானத்தில் சுப்பிரமணிய சுவாமிக்கணிந்திருந்த தங்கப்பூணூலும் இன்னும் சில நகைகளும் களவு போய்விட்டதாகவும் ஆளகப்படவில்லை யென்றும் அறிகிறேன். இது பொது ஜனங்களுக்குள் ஓர் உணர்ச்சியை யுண்டுபண்ண எங்கு பார்த்தாலும் பூணூல் அபுதலைப்பற்றியே பேசப்படுகிறது, என்று ஆறுமுகநேரி புதுத்தெரு திரு. துரைப்பாண்டியன் எழுதுகிறார்.

---

## திருச்சிராப்பள்ளி தமிழர் சீர்திருத்த நூற்பதிப்புக் கழகம்.

அமைப்பு:— இப்பெரிய கழகம் ஒன்று ஒத்துழையாமை வீரர் பூவாளூர் திருவாளர் நா. சு. மு. செல்வக்கணபதி செட்டியாரவர்களைத் தலைமையாகக்கொண்டு தொடங்கப் பெற்றிருக்கிறது.

நோக்கம்:— இயற்கைக்கும் அனுபவத்திற்கும் ஒத்திராத சட்ட திட்டங்களைக் கற்பித்து, எல்லாம் வல்ல இறைவனால் படைக்கப்பட்ட மக்கள் சமூகத்தில் எண்ணிறந்த பிளவுகளை உண்டுபண்ணி, ஒருவரை ஒருவர் ஏமாற்றியும் அடித்தும் உதைத்தும் பிடுங்கியும் பிழைக்கத்தக்க வகையில் எழுதிவைக்கப்பட்டுள்ள வேதம், ஸ்மிருதி, ஆகமம் எனப்படும் ஆரியப் பார்ப்பனர்களின் நூல்களை நமது தரும சாஸ்திரங்களெனக் கூறி வருதலாலும், அதனைத் தழுவி நடத்தலாலும், அவை நமது இந்து சமூகத்தையே புரைப்புண் போலிருந்து அரித்து வருகின்றன. ஆகலால் ஆரியர்களது மதத்தின் மூலமும் அவர்களது வேதங்களின் மூலமும், மூடக் கொள்கைட்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் நமது மக்களை விழிப்படையச் செய்வதற்குரிய சன்மார்க்க நெறிபற்றிய பல்வேறு நூல்களை வெளியிடுவது இக்கழக நோக்கமாகும்.

உறுப்பினர்:— ஒரு ரூபாய்க்குக் குறையாத தலைகையொப்பத் தொகை கொடுப்பவர்கள் உறுப்பினர்களாகக் கருதப்படுவரென்றும் அவர்கட்கு எல்லா வெளியீடுகளையும் அவ்வப்போது அனுப்ப வேண்டுமென்றும், ஐந்நூறுகருக் குறையாத உறுப்பினர்கள் சேர்ந்த பின்னர் வெளியீட்டு வேலை தொடங்குவதென்றும், கழகத்தார் முடிவு செய்திருக்கின்றனர்.

வேண்டுகோள்:— தமிழ் மக்களின் நலத்தை விரும்பும் ஒவ்வொரு அபிமானியும் இயன்றதொரு பெருந் தொகையினைக் கொடுத்து ஆதரிக்குமாறு பெரிதும் வேண்டுகிறோம்.

ச. ம. சி. பரமசிவ,
து. இராவண தாசன்,
காரியதரிசிகள்.
தமிழர் சீர்திருத்த நூற்பதிப்புக் கழகம்
"சிவாஜி" காரியாலயம்,
பெரிய கடைவீதி, திருச்சிராப்பள்ளி.

---

## விதவா விவாகம்.

சென்ற தை திங்கள் 14-ந் தேதி தூத்துக்குடி முனிசிபல் கவுன்சிலரும் பிரபல பஞ்சு வியாபாரியும் வைசிய, சைவ வேளாளப் பெருமக்களில் பெருந்தன்மையும் ஜனமதிப்புமுடைய உண்மை நெறியாளர் உயர் திரு. பி. எஸ். சுப்பையா பிள்ளை அவர்கள் குமாரத்தி சௌபாக்கியவதி வேலம்மாளை பெருங்குளம் உயர் திருவாளர் சி. பி. சுப்பையா பிள்ளையவர்கள் திருக்குமாரர் திரு. எஸ். புன்னைவனதேசிகர் தமிழ்மறைத் திருமண முறைப்படி சிறப்பாக புனர் விவாகம் செய்து கொண்டார்கள்.

காரியஸ்தர்கள், சாந்தி சமாஜம்,
ஆரியங்காவு எஸ். ஐ. ஆர்.

# ஆலயங்கள் இருக்கவேண்டுமா?

'தெய்வங்களின் யோக்கியதை'

ராமன்

கட்டுரை 1.

எனது இரண்டொரு வார்த்தை:—ஆதிதிராவிடர்களும் தாழ்த்தப்பட்டுப் போன ஏனையோரும ஆலயம் நுழையவேண்டுமென்று கேட்கின்றனர். ஆலயங்களிலுள்ள தெய்வங்கள் என்னப் பட்டவற்றின் யோக்கியதையே ஆட்சேபிக்கப்படக் கூடிய நிலைமைக்கு வந்துவிட்டபடியால் நுழைவு வேண்டும் என்னும் விவகாரத்திற்கே இடமில்லாமல் போகிறது. கோவில்களின் சொத்துக்கள் யாவற்றையும் நிலம் முதலியன இல்லாமற் செய்யப்பட்ட ஆதிதிராவிடர்களுக்கு ஒருவழியில் பகிர்ந்து கொடுத்து அவர்களது பொருளாதார நிலைமையைச் செம்மைப்படுத்தி வைத்தால், பணம் உள்ளவருக்குச் செல்வாக்கு வருகிற இயற்கைப்படி அவர்களுக்குச் செல்வாக்கு ஏற்பட்டு அவர்களது தீண்டாமையும் ஒழிந்து விடும். தேச நன்மைக்கும் கோவில்களின் செல்வம் பயன்படும். இதையொட்டியே ஒவ்வொரு தெய்வத்தைப்பற்றியும் நான் கட்டுரை எழுதி அதற்கு ஆலயம் இனி வேண்டுவதில்லை என்று ருசுபிக்கின்றேன். முதலில் ராமாவதாரத்தை ஆராய்கின்றேன்.

ராமன்.— இவனைப்பற்றி ஆராயுமுன்பு இவனது தாய் தகப்பனைப்பற்றிசில வார்த்தை பகர்கின்றேன். தசரதன் பார்ப்பன போதனைப்படி தன் பெண்டாட்டி மூவரையும் அசுவமேத யாக காலத்தில் யாகம செய்து வைத்த புரோகிதர்களுக்குக் கொடுத்தவன். ஆகவே ராமன் தாயும் அன்னியனுக்கு கொடுக்கப்பட்டவள். அப்படியே அவனது சகோதரர்களது தாய்மாருமென்றாயிற்று. இவ்வித மானநடவடிக்கை விவரம் 'குடி அரசில்' முன்னமேயே விஷபதானம் செய்வோரால் வெளியிடப்பட்டிருக்கின்றதை வாசிப்போர் ஞாபகப்படுத்திக்கொள்ளவும் இதைக்கேட்கும் ஐரோப்பியர் ராமன் பெற்றோரை அறிவுடையவரென்றோ ஏதேனும் நாகரீகமுடையவரென்றோ நினைப்பாரா! நாம் தான் நினைக்கலாமா?

தசரதன மனு அதர்மப்படி ஆண்டவன். வருணாசிரம ஆபாசங்களின்படி 'நீதி' செலுத்தியவன். அவன் பார்ப்பனரல்லாதாரையும் ஆதித்திராவிடர்களையும் கருணையோடு நோக்கக் காரணம் வாய்த்திலலை. அவன் பார்ப்பனருக்குத் தானம் வழங்கியதையே ராமாயணத்தில் வருணித்திருக்கிறது. கம்ப ராமாயணத்தில் உள்ள இவ்வித வர்ணிப்பை என ஒருவன் செவிசாய்த்துக் கேட்பான்? உதாரணமாக, அவன் பார்ப்பனருக்கு முப்பழத்தோடும், தயிரோடும், பாலோடும் நெய்யோடும் அருந்தி வந்தானென்றும் இன்னும் பலவிதமாகவும் கூறியிருக்கிறது. இதைப்படிக்கும் ஆதிதிராவிடன் என்ன நினைப்பான். அந்தக்காலத்திலுள்ள தீண்டப்படாதார் எனப்பட்டவர் குந்தப் போதிய வீடுகளோடும், உண்ணப் போதிய கஞ்சியோடும் இருந்தனர் என்பது என்ன நிச்சயம்? சுதேச அரசர்களது காலங்களிலெல்லாம் அவர்கள் பட்ட கஷ்டம் சொல்லியிருக்க முடியாது. மநுஸ்மிருதியும் வருணாசிரமும் பின்பற்றிய தசரதன் இவர்களைச் சமமாகவும் சரிவரவும் பார்த்திருக்க கூடாதது இயற்கைதானே. ஆகவே அவனுடைய பொய்ப் "புகழை" என் தற்கால இந்தியர் படிக்கவேண்டும். மற்ற எல்லாப் பார்ப்பனரல்லாதாரையும் சந்தேகமில்லாமல் கொடுமையாகவே தான் அவன் நடத்தியிருப்பான்.

மூன்று பட்ட ஸ்திரிகளன்றியும் அவன் 60000 மனைவிகளை உடையவனும். (குறைந்தது அவன் 600 மனைவிகளையாவது உடையவனாய் இருந்திருப்பான்) அவன் அவர்களது சுயேச்சையை ஒடுக்கி அவர்களை அவர்களது சுயசம்மதத்திற்கு மாறாக அடக்கி அந்தப்புரத்தில் அடைத்து வைத்திருந்தவன் இங்கிலாந்தின் எட்டாவது ஹென்றி என்ற அரசரும் நான்காவது ஜியார்ஜ் என்றவரும் ஒரு மனைவிக்கு அதிகமாக கொண்டிருந்தனரென்று அவர்களது தேசத்தினரே அதிருப்தி கொண்டு நாவல்கள் மூலமாயும் தேச சரித்திரத்திலேயும் குறைமொழி பல கூறியிருக்க, 60000 பேரை (அல்லது 600 பேரையாவது) மனைவியாக உடையவனைப் போற்றி வருவதென்றால் நம்முன்னோர்கள் அசடர்களாய்ப் போனார்கள் என்று அது காட்டுவதன்றியும், முன்னோர்கள் என்பவரும் பார்ப்பன அதர்மிகளும் நம்மையும் அச்செயலைப் போற்றவைத்து, குறைபறிவுடையவராய் ஆக்கிவிட்டனர் என்பதையும் காட்டுகிறது. அறிவுடைய மேனாட்டாரும் ஏனையோரும் அவமதிக்கும் ஒரு தீய ஒழுக்கத்தைப் பார்ப்பனர் சாஸ்திர ஆதாரவும் வேத ஆதாரவும் கொடுத்துப் போற்றினார்களென்று நாமும் போற்றினால் இனி நாம மேனாட்டினரால் அவமதிக்கப்படுவோம். ஆகவே தசரதன் பல மனைவிகளைக் கொண்ட விஷயத்திலும் பாவமும் கொடுமையும் செய்துள்ளவன்.

தசரதன் ஊரார் எல்லாரது வரிப்பணத்தையும வாங்கி பார்ப்பனருக்கு மட்டும் அளித்த துரோகி. அவருக்கு அளித்தது போக மிச்சத்தைத தன் சொந்தக்காரியமாகச் செலவிட்டான். எப்படியெனில், 60,000 மனைவிமாருக்கும் அணிகலன்கள் உள்பட கலியாணத்திற்கு என்ன செலவு ஆகியிருக்கும் பாருங்கள்! தான ஒருவன் சுவர்க்கத்திற்குப்போக ஊரார் பணத்தைச் செலவிட்டு யாகங்கள செய்தான். இன்னும் அவன் அனந்தம் பாதகங்கள் சுயேச்சை முறையில் செய்திருக்கக்கூடியவன் இதற்காக இவனைக்கொண்டாடுவதா? இவனுக்கு முன்னவர்களாகிய ரகு, அரிச்சந்திரன முதலியோரும் மற்றும் பல்ஆயிரம பேரும் இப்படியே பக்ஷபாதமாய் ஆண்டவர்கள்; 'மனுநெறி, தவறாதவர்?' ஊரார் வரிப்பணத்தை சுதம்மதாகக் கொண்டு செலவிட்டவர்.

இவனது சரித்திரத்தைக்கண்டு பாடம் கற்றவாய், இவரது சந்ததிகளின் பல்லாயிரம்பேர்களது அவனை இவனைப்போல் செய்துவந்தனரா இல்லையா? இச்செய்தியைப்பதால் என்ன நாகரீகம் நமக்கு ஏற்படும்! இவ்வளவு பாவத்திற்கும் அவன் நரகம் செல்லவில்லை! பிரம லோகம் சென்று சுகமாய் இருந்தானாம். அவனது பாவத்தை இன்னும் சொல்கிறேன் கேளுங்கள். அவன் இறந்தவுடன் க்ஷத்திரிய ராஜ குடும்பத்திலுள்ள முறைப்படி அவனது 60000 மனைவியரும் தீக்குளித்திருப்பார்! தம்மிஷ்டத்திற்கு விரோதமாய் அடைத்துவைத்துக்கொள்ளப்பட்டவருக்கு மேலும் நேர்ந்த துன்பத்தைப் பார்த்தீர்களா? இந்தப் பாவம் மன்னனைச் சேர்ந்ததாகுமா இல்லையா? (இப்படி இந்தியாவில் உடன்கட்டை ஏறி உயிரோடு வெந்து அவிந்து மாண்ட மாதர்கள் எவ்வளவு பேர் இருக்க வேண்டும்) இப்படிப் பட்டவனுக்குப் பிறந்தானும் ராமன். பாவத்தையே செய்தவனுக்கு ஒரு 'அவதாரம்' பிறந்தால் அது அதிக பாவம் செய்யும் அவதார காரியத்திலேயே வந்து முடியும் என்று தான் நியாயமாய் நினைக்க முடியும். நாம் காரியப்போக்கைக் கவனிப்போம்.

கடவுள அவதாரமானது கடவுள் தன்னைக்கேற்க, தற்கால அகண்ட நோக்கங்களைக்கொள்ளாமலும், தன் அறிவில் அவற்றைவருவித்துக்கொள்ளாமலும் ஆனால் மூடத்தனமாய் வருணாசிரம ஆட்சியில் தேர்ச்சி பெற்றுக்கொண்டும், பைசாச சட்டமியம்பிய மநுவின் நெறியை போற்றிக்கொண்டும், அச்சட்டப்படி ஆளவேண்டுமென்றும் பார்ப்பனர்களால் அடிக்கடி ராஜீய விடயங்களில் அறிவு போதிக்கப்படவேண்டுமென்றும் எண்ணி, ராமன் பட்டத்திற்கு வரத் துணிகையில், அப்பட்டம் ராமனுக்குச் சித்திக்காவிட்டால் அதைப்பற்றி பார்ப்பனரல்லாத 100க்கு 97 வீதமுள்ள அத்தனை வாயில்லா பூச்சிகளுக்கு ஏதேனும் கஷ்டமா? நஷ்டமா? அவர்கள் அதற்காக வருந்தியிருப்பின் அவர்களினும் மிருகங்களயாவர்? நாமும் அவனது பட்டாபிஷேகநாள் முதலில் தவறியதைப் பற்றி அனுதாபத்தைக்கொண்டாடுவதா? இந்த மாதிரிப்பாடங்களை நாம் இன்னும் எத்தனை நாளைக்கு கற்பிக்கப்படுவது? ஏன் இந்த இடத்தில் நான் கடுமையாய்க் கேட்கவேண்டியிருக்கின்றதென்றால், இப்படிப்பட்ட மன்னனைப் பின் பற்றிப் பாடம கற்றவர்களாய் ஏனைய பார்ப்பனரல்லாதார் யாவருமே அவர்களைப் போல் தாமும் தம்மாலியன்றவரை பார்ப்பனருக்கே கணக்கற்ற மடங்களும், சத்திரங்களும் கட்டிவைத்து அதுவே புண்ணியமென்றெண்ணியும் தர்ம பாடசாலைகளும், அக்கிரகாரங்களும் அவற்றிற்கு இனாம நிலங்களும்வீடுகளும்கட்டி கோதானம்பூதானம், அன்னதானம், வஸ்திரதானம், கன்னிகாதானம், பூணூல் கல்யாணம் முதலியவையும் இன்னும் பல்லாயிரவிதப் புரோகிதர்மமும் செய்துவைத்தும் போனார்களே என நான் எண்ணியதான். இன்றைக்கும அப்படி நடக்கின்றனவா இல்லையா? இந்நெறி பெரும்பாலோர் பிழைக்க வழி தாமற்போனதாயும் கடவுள் அமைக்கும் இயற்கைச் செயல் முறைக்குமாறானதாயும்உள்ளபாவம்என்று எந்த அவதாரமாவது எந்தரிஷியென்பானாவது பண்டைக்

கால அரண்மனைப் புரோகிதர்களாவது கூறினதில்லையே. ஷெடி அக்கிரமங்களோடு தெய்வங்களுக்குக் கோவில்கள் கட்டி ஏராளமாகச் சொத்துசேர்த்துவைத்து விட்டால் மழை பெய்திடுமென்றுங்கற்பிக்க மூடப்பேதமைக்குநம்ஜனசமூகம்யாவரும் கட்டுண்டுபோய் இன்னும் அச்செயல்களைவிடாது செய்கின்றனரே; அதுவே புண்ணியமும் நன்மையும் என்றுரைத்தும் பார்ப்பனமக்கள் மேலோங்கப்பலவித வழிகளை நாடுகின்றனரே, இதையெல்லாம் 'ராமன்' திருத்தி ஒழுங்கு போதித்து நம் நாட்டை முன்னுக்குக்கொண்டுவந்தானாவென்றுதான் கேட்கிறேன். அவன் 'கடவுள்' அவதாரமாய் நம் நாட்டில் உதயமானான் என்றால் அது ஒன்றாலேயே நம்மவர் எல்லாரும் நல்லறிவு பெற்று, நல்ல கல்வி கற்று நாம் பிற தேசங்களை ஆண்டு ஆங்கெல்லாம் நாகரிகம் கொண்டு வந்திருக்கலாமே. அப்படிக்கின்றி இப்பொழுது ஐரோப்பியர்களால் அல்லவா உலகில் நாகரிகம் பரவத் தலைப்பட்டு 'அவதாரங்கள்' என்பனவே இன்றைக்கு வெட்கப்பட்டு மங்கவேண்டிய நிலைமை வந்திருக்கின்றன? மேல்வரிகள் ராமனைப்பற்றிப் பொதுவான குறை வார்த்தைகள். இனி உள் ஆராய்ச்சியைத் தொடங்குகிறேன்.

எனது கொள்கையை நாட்ட சில விஷயங்களை மட்டும் ஆராய்கிறேன். சிறு வயதில் ராமன் கூனியை உண்டை வில்லால் அடித்துக் களித்தானாம். இது 'கடவுள்' என்பவரின் பாலிய திருவிளையாட்டு. அடித்தால் நோகுமென்பதும், அதனால் கூனி ஒருத்தியாவது அவனைத் துஷ்டனென்று கூசாமல் சொல்வாள் என்பதும் தெரிந்த கடவுள் அவதாரமான ராமனே இப்படி துஷ்ட விளையாட்டு கைக்கொண்டிருந்தால் அக்காலத்தில் உள்ள எல்லாப் பிள்ளைகளுக்குள்ளும் இப்படிப்பட்ட விளையாட்டு சாதாரணமானது என்றும், ராமனுக்கு இளைத்த ஆசாமியாக ஒருத்தி இப்படி அகப்பட்டிருந்தால் பல துஷ்ட பிள்ளைகளுக்கும பலர் அகப்பட்டிருப்பர் என்றும் ஏற்படுகிறது. ஆகவே, பலர் மனவேதனையுற்றிருப்பர் என்றாயிற்று. இது பண்டைய இளைஞர் செய்கை.

கைகேயி தசரதன் சாகும் தருணத்திலும் தன் வரத்தைக்கொடுக்கச்சொல்லிக் கேட்டதில் ஓயவில்லை யென்றால் பண்டைய மாதர்களும (ஷெடி பண்டைய பிள்ளைகளும்கூட) தற்காலத்துச் சில விடங்களில் உள்ளவரை போலவே (அப்படிக்குக் கூட தற்போது இல்லையென்பேன்) இருந்திருக்கவேண்டுமென்றாயிற்று. இதனால் வெட்ட வெளிச்சமாவதென்னவெனில், பண்டைக்காலத்தில் பூராவும் தர்மநெறிப்படி எல்லா மனிதரும் பெண்டிரும் பிள்ளைகளும் இல்லையென்பதும் மக்கள் குணம் எக்காலத்திலும ஒரே இயற்கையை உடையது என்பதும ஆயிற்றன்றோ. மகனை உடையவள் உடன் கட்டையேறவேண்டிய அவசியமில்லை யென்பது அக்காலச் சட்டத்திலுண்டு. ஆகவே இந்த கைகேயிக்குப் பரதன் இல்லாவிடில், அவள் (புருஷனைத்தன்கண் பார்க்க உயிரோடு கொல்லுகிறவள்) முழுமனதோடு உடன் கட்டை ஏறியிருப்பாளா என்று யோசித்துப் பாருங்கள். ராமன் குடிகளுக்குப் பொறுப்புக்கொண்டு அரசு செலுத்தும் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டியவனாய் இருக்க, அவன் தன் தகப்பன் சொல் (ராஜாங்க காரியத்தில்) முக்கியமென்றுரைத்துக் காட்டுக்குப் போனான். இதனால் அவன் குடிகளது சம்மதம்கொண்டதாக ஏற்படுகிறதா? அவனது தகப்பனாவது ராஜாங்க சம்பந்தமான வாதத்தைக் குடிகளைக் கேட்காமல் எவ்விதம் அளிக்கலாம்? இதெல்லாம் அக்கால ஜனங்களின் கேடுகெட்ட நிலைமையை ஞாபகமூட்டுகின்றது. இவனை நாம் காட்டுக்குத் தொடருமுன் இவனது கடவுள் தன்மைக்குச்சான்றாய்க் கூறப்படும் அகலிகை சாப விமோசனத்தைக் காண்போம்.

கௌதமர் அகலிகைக்கு சாபம் தரும்போதே 'ராமனது பாதம் பட்டால் நீ கல் நிலையினின்றும் மாறுவாய்' என்று உரைத்திருந்தார். ஆகையினால் அவரது வாக்குப்படி இவன் கால்பட்ட அகலிகை எழுவாயிற்றேயன்றி இவன் தானாக எழுப்ப எண்ணி எழவைத்தனன் என்பது நடைபெறாததாகும். கௌதமர் வேறுயார் கால் பட்டும் எழுந்திருக்கலாமென்று உரைத்திருப்பினும அவ்விதமே யாகியிருக்கும். கௌதமர் ராமனைச்சிறப்பித்தால், நாம் நமக்கு ஒரு அனுகூலமும் ஒருவகை கண்திறப்பும் செய்யாதவனை, ஆனால் ஒவ்வொரு பிரதிகூலத்திற்கும் கேவலத்திற்குமாக, வருணாச்சிரமத்திற்கும், மனுஸ்மிருதிக்கும், தகப்பன் ஆண்ட வழிகளுக்கும அவன் இணங்கி வந்திருக்கையில்,— அவன் முற்போக்கு வழி ஒன்றுமே காட்டாதிருந்திருக்கையில், அவனை ஏன் கொண்டாடுவதென்று கேட்கிறேன்.

அவனது கடவுள் தன்மையை மேலும் சோதிப்போம். ராமனை முன்னிலையில் வைத்துக்கொண்டு சதாநந்த ரிஷி விஸ்வாமித்திரனின் வரலாறு கூறுகையில், விஸ்வாமித்திரன் தன் மக்கள்மாரில் எவரேனும்தனது சகோதரி மகனுக்குப் பதிலாக நரபலியாவதனை இசைந்து ஒரு யாகத்திற்குச் செல்லும்படி ஆஞாபித்ததாகவும், அது காலை, அம்மக்களில் ஒருவரும் கீழ்படியாத தற்காக அவர்சபித்ததாகவும் சொல்லிக்கொண்டு வருகிறபொழுது, ராமனெனவன் நரபலிபிசகென்றும், எந்த அரசனைப்பட்டவனும் நரபலியைச் செய்யக்கூடாதென்றும் சொன்னதுண்டா? அப்படி ஒரு யாகம் செய்பவன சிவன், விஷ்ணு, பிர்மா முதலியவர்களை யாகசாலைக்கு கூப்பிட்டு அங்கு அளிக்கும் உணவைப் பெற்றுக்கொள்ளச் சொல்லிவேண்டுகையில், அம்மூர்த்திகள் அவ்விதம பெறவருதல் அவர்களது மதிப்பிற்கும, நியாயத்திற்கும் நீதிக்கும தவறாகும் என்று ராமன் தனது அபிப்பிராய வார்த்தை பகர்ந்தானா? இல்லவே இல்லை. மௌனமாய் இருந்துவிட்ட ராமனின் நடத்தையால் உலகம் என்ன பாடம் கற்கும்! ராமனே எல்லா யாகங்களையும் வேதத்தில் சொல்லப்பட்டதாகவும் வேதம் 'கடவுள்' சொன்னதாகவும், தான் அவற்றின்படியே நடக்கவேண்டுமென்றும் எண்ணியிருக்கையில் அவன் எப்படி ஆக்ஷேபம் செய்வன் என்கிறேன். விஷ்ணுவுக்கும்சிவனுக்குமே இந்த யாகங்களில் மனமிருக்கையில் இவற்றை நிலைநாட்டவே, விஷ்ணு தானே ராமனாய் அவதரித்திருக்கையில், அதற்குத் தகுந்த புத்திதானே ராமனுக்கு வாய்த்திருக்கும். ஷெடி மும்மூர்த்திகளின் நடத்தையும் ராமன் செயலும் அருவருப்பு கொடுக்கின்றதா இல்லையா? அதை நாம் இகழ்வதா கூடாதா வென்று கேட்கிறேன். மேல நாட்டு வெள்ளைக்காரர், ராமாயண சம்பந்தமான ஷெடி 'தெய்வ'ச் செயல்களைப்பத்தியுடன் செவிசாய்த்துக் கேட்டுப் புகழ்ந்து வந்த-புகழ்கின்ற ஹிந்துக்களை எப்படி மதிப்பர்?

இனி நரபலியிட்ட அரசன் செயலைச் சற்று கவனியுங்கள்.

(தொடரும்) ஞானனந்தன்.

## திருநெல்வேலி
## திரு. T. S. க[illegible]மி நாதபிள்ளை அவர்கட்கு விண்ணப்பம்

ஐயா.

தாங்கள் பொது ஜன சேவையில் ஈடுபட்டு சமூகங்களின் வருங்கால வளர்ச்சி கருதி செய்த நன்மைகள் பல என்பது அந்தந்த போர்டு தலைவர்களுக்கும் பிரமுகர்களுக்கும் ஜனங்களுக்கும் நன்கு தெரியும். தங்களுடைய செல்வாக்குக்கும், நாணயத்துக்கும், யோக்யப் பொறுப்புக்கும், தாங்கள் ஜில்லாபோர்டு உபதலைவர் தேர்தலில் ஏகமனதாய் தேர்ந்தெடுக்கப்பட்டதே போதுமானசான்றாகும்.

இந்த நிலைமையில் சமீபத்தில் வரும் தாலூகா போர்டு தேர்தலில் தாங்கள் ஒரு ஸ்தானம் பெற வேண்டியதவசியமாயிருக்க, தாங்கள் தேவையில்லை என்று பிரஸ்தாபித்துக்கொண்டிருந்து, பின் தலைவர்களின் பொது ஜனங்களின் கட்டாய விருப்பத்திற்கிணங்கி நாமினேஷன் பேப்பரில் கையெழுத்திட்டுக் கொடுத்து, பின்னால் திடீரென சம்மதமில்லையென்று (Withdrawl) எழுதிக் கொடுத்துவிட்டதாக கேள்விப் படுகிறோம். இதைக்கேட்ட ஜனங்களும், பிரமுகர்களும், மிக்க மனம் வருந்துகின்றார்கள்.

தங்கள் போன்ற, யோக்கிய பொறுப்பும்,ஞானமும், திறமையுள்ள தலைவர்கள் பொதுஜன சேவையில் விலகினால் சமூகமோ, சமுதாயமோ எவ்வாறு முன்னேற்றமடையுமென்பதுதான் நமக்கு விளங்கவில்லை. எந்தத்துறையிலும் ஜனசம்மதம் பெற்ற தாங்கள், இதில் விலகிக்கொண்டதற்குப் போதுமான சமாதானம் பத்திரிகை வாயிலாக வெளியிட வேண்டுகின்றோம். இந்த சமாதானம் ஜனங்களுக்கு தெரியாதவரை, கக்ஷிப்ரதிகக்ஷியில்லாத போர்டுகளில் ஏதோ கக்ஷிபேதப்படக்கூடிய நிலைமை வந்துவிட்டதோ என்று எண்ண இடம் ஏற்படுகிறது. நிற்க.

தலைவர்களும் மற்றையோர்களும் விரும்பியபடியில்லாது விலகிக்கொண்டார்கள் என்ற பிரஸ்தாபம் உண்மையாயிருக்கும் பட்சத்தில் தலைவர்களால், கட்டாயமாய் தாங்கள் நாமினேஷனில் நியமிக்கப்படுவீர்கள் என்பது உறுதி. அதற்குத் தாங்கள் என்னசெய்வீர்கள் என்பதுதான் விளங்கவில்லை.

சுந்தரம்.

## இரண்டே நாள்.

"சனி தாலிகட்டி செவ்வாய் அறுக்கப்பட்டது"

சென்னை அரசாங்கம் பார்ப்பனர் ஆட்டுவித்த பிரகாரம் ஆடுகிறதென்றும் இம்மாதிரி பார்ப்பனர்கள் ஆட்டத்திற்குத் தகுந்தபடி கவர்னர்பிரபுவும் ஆடுவதினாலேயே கோஷன் பிரபுவிடம் பார்ப்பனரல்லாதாருக்கு நம்பிக்கை இல்லை என்பதாகக் கோயம்புத்தூரில் தீர்மானிக்க வேண்டி இருந்ததும் யாவருக்கும தெரிந்த விஷயம். அதோடு சென்னை அரசாங்க நிர்வாகத்தில் சர். சி. பி. இராமசாமி அய்யர் உட்கார்ந்து கொண்டு பார்ப்பன முறைப்படி கோஷன் பிரபுவை ஏமாற்றி அரசாங்கத்தின் முக்கியமான இலாக்காக்களையெல்லாம் தன் வயப்படுத்திக்கொண்டு பார்ப்பனரல்லாதாருக்கு எவ்வளவு கேடு சூழச்செய்யவேண்டுமோ அவ்வளவும் செய்து வந்ததும் போதாமல், அகம்பாவத்துடன் "என்னுடைய அரசாங்கம் என்னுடைய அரசாங்கம்" என்று ஆணவமாய் பேசி வந்ததும் யாவரும் அறிந்த விஷயம், முக்கியமாய் இதன் பலனாகவே, நாம் இப்பார்ப்பனசூழ்ச்சி ஆட்சி போன்ற இரட்டையாட்சி ஒழியும் வரை மந்திரி பதவியை ஒப்புக்கொள்வதில்லை என்றும் தீர்மானிக்க வேண்டி வந்ததும் எல்லோரும் அறிந்தது. ஆகவே பார்ப்பனரல்லாதார் பெரும்பாலும் தங்கள் சுயமரியாதையை உத்தேசித்து இவ்வளவு தூரம் துணிந்து சகல வித தியாகத்திற்கும் தயாராயிருந்த பின்னர்தான் லார்டு கோஷனுக்கும் கண்திறக்க நேர்ந்ததென்றே சொல்லுவோம். அதாவது சட்டமெம்பர் பதவி காலியானதும் அது ஒரு பார்ப்பனரல்லாதாருக்கே கொடுக்கப்படவேண்டும் என்று சர்க்காருக்கு எச்சரிக்கை செய்ததும் அதை கோஷன் பிரபு கவனித்து முன் நாம் எந்த எந்த இலாக்காக்கள் பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாய் உபயோகப்படுத்தப்படுவதாய் குறை கூறினோமோ அந்த இலாக்காக்களையெல்லாம் பார்ப்பனரிடமிருந்து பிடுங்கிப் பார்ப்பனரல்லாத அங்கத்தினர் வசம் ஒப்புவித்துவிட்டு சில இலாக்காக்களை மாத்திரம்வைத்து அந்த ஸ்தானத்தை வேங்கிட்டராம சாஸ்திரிஎன்ற ஒரு பார்ப்பனருக்கே கொடுத்தார்கள். ஆனாலும அதுவும பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்கு மிகவும் ஆபத்தாயிருக்ககூடியதென்றே சொல்லுவோம். அப்படியிருந்தும் உத்தியோகம்பெற்ற அச்சாஸ்திரியின் பேராசையானது கவர்னர் பிரபுவைமிரட்டும் படியான நிலைக்குவந்து பூரா லாக்காவும் கொடுக்காவிட்டால் இராஜினாமாக் கொடுக்கப் போவதாய் பயமுறுத்தினார். (இதற்கு முக்கிய தைரியம் மாஜிசட்டமெம்பரிடமே இருந்துவந்ததாகச் சொல்லப்படுகிறதானாலும்) கவர்னர் பிரபு அதை ஒரு சிறிதும் லக்ஷியம் செய்யாமல் சட்டமெம்பர் ஸ்ரீமான் வெங்கிட்டராம சாஸ்திரியாரின் மிரட்டுதல் ராஜினாமாவை கையில் வாங்கிய உடனேயே யாதொரு தாமதமும் இல்லாமல் அங்கீகாரம் செய்து கொண்டு, ஸ்ரீமான் சாஸ்திரியாரை வீட்டுக்கு அனுப்பிவிட்டார். ஐயோபாவம்! அய்யர் பேச்சைக்கேட்ட சாஸ்திரியாரின் மிரட்டலால் அய்யரின் 'வாய்த் தவிடும்போய் அடுப்பும் அவிந்த கதியாய் போய் விட்டது. போலீஸ் இலாக்காவும் எலக்ஷன் இலாகாவும் நீர்ப்பாசன இலாக்காவும் ஸ்ரீமான் சாஸ்திரியிடமிருந்து பிடுங்கப்பட்டதே தான் அவர் மிரட்டுதல் இராஜினமா கொடுக்க நேர்ந்தது. இந்த இலாக்காக்கள் கொஞ்ச நாளைக்கு முன்பே அய்யர் கையிலிருந்து பிடுங்கப்பட்டிருக்குமானால் சென்னை ஹர்த்தாலும் காலித்தனமும்கூட நடந்திருக்காதென்றே சொல்லுவோம். இவ்விடத்தில் ஒரு விஷயத்தை ஞாபக மூட்டுகின்றோம். லாமெம்பர் உத்தியோகம் சுமார் 18 வருஷகாலம் பார்ப்பனர்களுக்கே ஏகபோகமாய் கொடுத்து வந்தும், இந்த சமயம் அதுவும் அந்த உத்தியோகங்கள் பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாய் எவ்வளவோ கேவலமாயும் நாணயப் பொறுப்பில் சந்தேகப்படும் படியாகவும் நடத்தப்பட்டதாய் தெரிய நேர்ந்த பிறகு அதில் ஒரு பாகத்தைப்பிடுங்கி ஒரு பார்ப்பனரல்லாதாருக்கு அதுவும் இவரைவிட அனுபோகமும் அதிக சர்வீசுமானவருக்கு ஒப்புவித்ததற்கு, இந்தப் பார்ப்பனர்களுக்கு ஏன் இவ்வளவு பொறாமை வரவேண்டும் என்பதுதான். பார்ப்பனருக்கு உத்தியோகம் கிடைப்பதானால் ஒத்துழைப்பும், கிடைக்காவிட்டால் ஒத்துழையாமையும் செய்வது தான் பார்ப்பன அரசியல் என்பது இப்போதாவது வெளியாயிருக்கும் என்று எண்ணுகிறோம்.

இனியாவது கோஷன் பிரபுவுக்குச் சரியான புத்திவந்து இதை சரியானபடி உபயோகித்துச் சர்க்காரின் கௌரவத்தைக் காப்பாற்றுவாரென்று நினைக்கின்றோம்.

(திராவிடன்.)

## பொள்ளாச்சி தலூகா போர்ட் தலைவர் தேர்தல்

பொள்ளாச்சி தாலூகா போர்டுக்கு தலைவராக ஊத்துக்குளி குமார ஜமீன்தார் அவர்களை உடுமலைப்பேட்டை திருவாளர் மலையாண்டி செட்டியார் பிரேரேபிக்க திருவாளர் எல். சென்னியப்ப கவுண்டர் ஆதரிக்க ஏகமனதாய் தெரிந்தெடுத்தார்கள்.

## 'தேவதாசன்' எழுதுவது.

மார்ச்சு மாதம் 14 தேதி 'தமிழ் நாடு' பத்திரிகையில் 'தேவிதாசன்' போல் காணப்படும் "நாயக்கரின் சுயவஞ்சகம்" என்னும் கட்டுரைக்கு சமீபத்தில் சமாதானம் எழுதுகிறேன்.

## சத்தியமூர்த்தியின் தந்தி

திரு. எஸ். சத்திய மூர்த்தி தம் கட்சியாருக்கு மந்திரி பதவிகள் ஏற்றுக்கொள்ள அனுமதி கொடுக்க வேண்டுமென்று திரு. எஸ். சீனிவாசய்யங்காருக்குத் தந்தியடித்திருப்பதாய் அறிகின்றோம் மந்திரிகளெல்லாம் நியமனம் செய்யப்பட்டபிறபாடு இத்தந்தியடித்ததால் பயன் என்? இனி அனுமதி வந்தாலும் உப்புக்கண்டத்தைப் பறிகொடுத்த பாப்பாத்தி போன்றன்றோ இவர்கள் விழிக்கவேண்டும். "திராவிடன்"

## வேடிக்கை சம்பாஷணை

### சித்திரபுத்திரன்.

ஒரு குடித்தனக்காரன்:— ஐயா ஆ ஆ! எங்க வீதியில் நெருப்புப்பிடித்து 10, 20, வீடு வேகுதய்யா! எவ்வளவு தண்ணீர் ஊற்றியும அவியமாட்டேன் என்கின்றது. எல்லோரும் வந்து கொஞ்சம் உதவி செய்யுங்கள் உங்கள் பிள்ளைகுட்டிகளுக்கு புண்ணியமாகும்.

சித்ரபுத்ரன்:— ஐய்யய்யோ! ஏனப்பா நெருப்புப்பிடித்தது?

குடி:—ஒருத்தருக்கும் தெரியில்லை அய்யா?

சித்தி:—அப்படியானால் உங்கள் வீதியில் "பிராமணாள்" இருக்கின்றார்களா?

குடி:—ஆம் 4, 5, வீட்டுக்காரர்கள் இருக்கிறார்கள்.

சித்தி:— அவர்கள் ஏதாவது உங்கள் வீதிப்பக்கம் வந்தார்களா?

குடி:—ஆம் அய்யா, காலையில் ஒரு பிராமணர் ஆத்துக்கு போய் குளித்து விட்டு மொண மொண என்று சொல்லிக்கொண்டு இந்த வீதியில் தான் போனார்.

சித்தி:—சரி சரி, உங்க வீதி வீடுகள் வெந்துபோனதற்குக் காரணம் தெரிந்து போயிற்று.

குடி:—என்ன அய்யா எனக்கு தெரியவில்லையே!

சித்தி:—இது தெரியாதா உனக்கு; பிராமணாள் கையில் நெருப்பு இருக்கிறதே; நீ கேட்டதில்லையா.

குடி:—நான் கேட்டதில்லையே!

சித்தி:—அட பயித்தியமே, பிராமணாள் நாம் கும்பிட்டால் அவர்கள் இடது கையை மோந்து பார்ப்பதுபோல் மூக்குக்குப்பக்கத்தில் தூக்குகிறார்களே அது ஏன். வலது கையில் அக்கினி இருப்பதால் அது தூக்கினால் எறிந்து போய்விடுவோம் என்று இடது கையை மோந்து பார்ப்பது.

குடி:—அப்படியா! அது எனக்கு தெரிந்திருந்தால் நான் அவர்களை அந்த வீதியிலேயே நடக்க விட்டு இருக்கமாட்டேனே. ஏமாந்து போய் விட்டேன்.


சித்தி:—அது மாத்திரமா பிராமணாள் வாயிலும் நெருப்பு, வயிற்றிலும் நெருப்பு; இது உனக்கு தெரியாதா?

குடி:—தெரியவில்லையே! சற்று தெரியும் படியாய் சொல்லுங்களேன்.

சித்தி:—பிராமணாள் 'எங்கள் வாயில் விழுந்தால் பஸ்பமாய்ப் போய் விடுவாய்' என்று சொல்லுகின்றார்களே அது என்ன? வாயில் நெருப்பு இருப்பதாலன்றோ அவர்கள் அப்படிச் சொல்லுவது. தவிரவும், பிராமணாள் நம்மைப்பற்றி ஏதாவது நினைத்தால் நாம் பஸ்பமாய் விடுவோம் என்று சொல்லுகின்றார்களே அதன் அருத்தம் என்ன? நினைத்தால் பஸ்பமாய் விடுவதாயிருந்தால் வயிற்றில் நெருப்பு இல்லாவிட்டால் முடியுமா?

குடி:— இதென்ன இந்த இழவு பார்ப்பனர்கள் சங்கதி கையில் நெருப்பு, வாயில் நெருப்பு, வயிற்றில் நெருப்பு, இப்படி வைத்திருந்தால் நாம் எப்படி அவர்களோடு வாழு

இதன் தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு

ஈரோடு பிரபவ ஹூ பங்குனி மீ 6 உ

## பார்ப்பன தேசியம்.

சென்னை அரசாங்கத்திற்கு விலக்கப்பட்ட மந்திரிகளுக்கு பதிலாக ஸ்ரீமான்கள் முத்தயா முதலியாரும் சேது ரத்தினமய்யரும் நியமனம் பெற்று விட்டார்கள். இவர்களால் நமக்கு ஏற்படப்போகும் நன்மை தீமைகளைப்பற்றி இப்போது ஒன்றும் எழுதாமல் விட்டு விடுகிறோம்.

மந்திரிகளிடமிருந்தோ சர்க்காரிடமிருந்தோ அல்லது எந்த விதமான அரசியல் கட்சியார் என்பவர்களிடமிருந்தோ நாம் எவ்வித அரசியல் விஷயத்தையும் நாம் இப்போது எதிர்பார்ப்பதில்லை. அதற்குக் காலம் வரும்போது அதைப்பற்றி பேசிக்கொள்ளலாம். இப்போது நாம் மந்திரிகளிடமும் அரசாங்கத்தினிடமும் எதிர் பார்ப்பதெல்லாம் நம் மக்களுக்குள்ளாகவே ஒருவருக்கொருவர் சமத்துவமும் சம சுதந்திரமும் சுயமரியாதையும் ஏற்படுவதற்கு ஆதரவு தான். இந்த காரியத்திற்கு எவ்வளவு தூரம் இந்த மந்திரிகள் ஆதரவளிப்பார்கள் என்பதைப்பற்றி இப்போது "ஜோசியம்" கூறும் நிலைமையில் நாம் இல்லை.

ஏனெனில் ஒரு மந்திரி பார்ப்பனர்; அதிலும் வைதிக வேஷங்கொண்ட பார்ப்பனர். வைதீக வேஷமில்லாத பார்ப்பனராகிய சர். சி. பி. அய்யரால் நமது சமூகத்திற்கு நேர்ந்த கொடுமைகளைப் பார்க்கும்போது வைதீக வேஷக்காரப் பார்ப்பனரால் என்ன விளையக்கூடும் என்பதைப்பற்றி யோசித்தால் பயமாய்த்தான் இருக்கும். மற்றொரு மந்திரி ஸ்ரீமான் முத்தய்யா முதலியார் ஒரு பார்ப்பனரல்லாதார். ஆனாலும் பார்ப்பனருக்கு அடுத்தபடி என்று சொல்லத்தக்க வேளாள சமூகத்தைச் சேர்ந்தவர். இவரால் எவ்வளவு தூரம் அனுகூலம் ஏற்படும் என்பதும் யோசிக்கக்கூடியது தான். ஆனால் இப்போது நாம் அதைப்பற்றி பேச வரவில்லை.

இந்த இருகனவான்களும் மந்திரி பதவி ஒப்புக்கொண்டதற்காக "தேசிய' வயிற்றுப் பிழைப்பு ஆசாமிகளின் கூக்குரலுக்குத்தான் நாம் சமாதானம் சொல்ல விரும்புகின்றோம்.

கௌஹாத்தி காங்கிரசுக்குப் பின்னாலும், மந்திரி வேலை ஒப்புக்கொள்ளுவதில்லை என்று சொல்லியும், முட்டுக்கட்டை போடப் போகின்றோம் என்று சொல்லியும், இன்னும் என்ன என்னமோ சொல்லியும் ஓட்டு வாங்கி சட்டசபை ஸ்தானம் கிடைத்த பிறகும் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சாஸ்திரியை மந்திரி உத்தியோகம் ஒப்புக்கொள்ளும்படி தந்தி கொடுத்த ஸ்ரீமான்கள் வரதராஜுலு போன்றாருக்கும் 'தமிழ் நாடு' பத்திரிகை போன்றவைகளுக்கும் ஸ்ரீமான்கள் முத்தயா முதலியாரும், சேது ரத்தினமய்யரும் மந்திரி வேலை ஒப்புக்கொண்டதைப் பற்றி பேச வாயுண்டா? எழுத கையுண்டா? என்று கேட்கின்றோம். அப்படி மீறிப் பேசினால் அது பேசும் வாயா அல்லது கழிக்கும் வாயா என்று கேட்கின்றோம். மீறி எழுதினால் அது எழுதும் கையா? உலக்கையா? என்று கேட்கின்றோம்.

தவிர, புதிய மந்திரிகளுக்கு ஜஸ்டிஸ் கட்சியார் ஆதரவளிப்பதாக கவர்னரிடம் ஒப்புக்கொண்டதாக தெரிகின்றது, என்றும் 'ஜஸ்டிஸ் கட்சியின் குட்டிக்கரணம்' 'பனக்கால் ராஜாவின் துரோகம்' என்றும் சில ஆசாமிகளும் பத்திரிகைகளும் கூப்பாடு போடுகின்றன. கௌஹாத்தி காங்கிரசில் 'மந்திரி பதவி ஒப்புக்கொள்ளவும் கூடாது, வேறு கட்சிகள் மந்திரி ஸ்தானம் பெறுவதை ஆதரிக்கவும் கூடாது' என்கின்ற தீர்மானம் நிறைவேறி இருக்கும் போதே திருட்டுத்தனமாய் பார்ப்பன அடிமைகளை மந்திரியாக்கி அவர்களை ஆதரித்து, விஷயம் வெளியான பின்பும் ஸ்ரீ முத்தயா முதலியாரை இதைப்பற்றிய கேள்வி கேட்கக்கூட உரிமையில்லாமல் செய்ததுடன் இம்மாதிரி அயோக்கியத்தனம் செய்ததற்காகத் தங்களையே தாங்கள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் பாராட்டிக்கொண்ட யோக்கியர்களுக்கு 'ஜஸ்டிஸ் கட்சியார் ஆதரிப்பதாக ஒப்புக்கொண்டது தப்பு' என்பதற்கு வாயேது; எழுதகையேது என்று கேட்கின்றோம். ஜஸ்டிஸ் கக்ஷியார் இரட்டை ஆட்சி ஒழியும் வரை உத்தியோகமேற்பதில்லை என்று சொன்னது வாஸ்தவம் தான். அந்த கட்சி மறுபடியும் அனுமதி கொடுக்கும்வரை அவர்கள் உத்தியோகமேற்பதில்லை என்பதை காப்பாற்றி வருகின்றார்கள். ஜஸ்டிஸ் கட்சியாரை தெரிந்தெடுத்த ஓட்டர்கள் உத்தியோகம் ஏற்கவேண்டாம் என்று சொல்லி தெரிந்தெடுக்கவில்லை என்பது முழுமூடனுக்கும் தெரியும். எனவே கட்சி கூட்டத்தின் தீர்மானம் கட்சி கூட்டத்திலேயே யோசித்து வேண்டியது செய்யவேண்டியது; செய்து கொள்ளவும் பாத்தியமுடையது. ஆதலால் அவர்கள் நாளைக்கே கூட்டம் கூடி தீர்மானித்து மந்திரி பதவிகளை ஒப்புக்கொள்வதை எந்த நியாயமும் தடுக்கமுடியாது. காங்கிரஸ்காரரைப்போலவோ மற்றும் பல கட்சியாரைப்போலவோ ஜஸ்டிஸ் கக்ஷியார் ஓட்டர்களை ஏமாற்றி ஓட்டர்களுக்கு துரோகம் செய்யவில்லை என்பதை பார்ப்பனர்களும் பார்ப்பனக்கூலிகளும் உணரட்டும்.

தவிர கோவைத் தீர்மானத்தில் ஜஸ்டிஸ் கட்சியார் சில நிபந்தனைகளுக்குள்பட்டு தாங்கள் மந்திரி பதவி ஒப்புக்கொள்ளுவதில்லை என்று தீர்மானித்துக் கொண்டார்களே யொழிய வேறு கட்சி மந்திரிகளை ஆதரிப்பதில்லை என்று எங்கும் எப்போதும் தீர்மானிக்கவேயில்லை.

இதையறியாத தற்குறிகளும் துவேஷக்காரர்களும் சுயநலக்காரர்களும் ஜஸ்டிஸ் கட்சியை குற்றம் சொல்வதின் கருத்தென்ன? இதில் பனக்கால் ராஜாவின் துரோகமென்ன? என்று கேட்கின்றோம்.

தவிர, கோவை மகாநாட்டில் இரட்டை ஆட்சி என்பதைப்பற்றிப் பேசிய போது நிர்வாக சபையில் ஒரு பார்ப்பனர் இருந்து கொண்டு பார்ப்பனரல்லாதாருக்கு செய்த அக்கிரமங்களையும் கொடுமைகளையுமே முக்கியமாகக் குறிப்பிட்டு பேசியது அக்கூட்டத்திலிருந்த பந்தற்கால்களுக்கும் சுவர்களுக்கும் கூட நன்றாய் விளங்கியிருக்கும். அப்படி இருக்க, அந்த பார்ப்பனர் ஒழிந்த தோடல்லாமல் அந்த ஸ்தானமும் ஜஸ்டிஸ் கட்சியாருக்கே கொடுப்பதானால் மற்ற மந்திரிகளிடம் ஜஸ்டிஸ் கட்சியார் வேலை வாங்கிக் கொள்வதில் யாருக்கு என்ன ஆக்ஷேபம். எந்த 'சத்திய தேவதைக்கு' இதில் ஆபத்து வந்து விட்டது என்று கேட்கின்றோம்.

பார்ப்பன அடிமைகள் பார்ப்பன ஆதிக்கத்திற்குமந்திரி வேலை ஒப்புக்கொண்டால் அது 'தேசியம்' ஆகி விடுகிறது. அம்மந்திரிகள் 'தேசிய மந்திரிகள்' ஆய்விடுகின்றார்கள். அவர்களை வெளியில் இழுத்து விட்டுவிட்டு பார்ப்பனரல்லாராருக்கு அனுகூலமான மந்திரிகள் வந்தால் அது 'தேசத்துரோகம்' 'பனக்கால் துரோகம்' 'ஜஸ்டிஸ் கக்ஷியார் குட்டிக்கரணம்' ஆய் விடுகின்றது. என்னே பார்ப்பன சக்தி! இந்த பித்தலாட்டம் ஒழிந்தாலல்லது இந்த நாட்டுக்கு சுயமரியாதை இல்லையென்பது நமது உறுதி. ஜஸ்டிஸ் கக்ஷிக்குஒரு வார்த்தை:-எந்தக்காரணத்தைக் கொண்டாவது அரசாங்கத்தார் சட்ட மெம்பர் பதவியை ஒரு பார்ப்பனருக்கு கொடுப்பார்களே யானால் மறு நாளே இந்த மந்திரிகளை கவிழ்த்து விடவேண்டியது அவர்களது கடமையாகும். நமக்கு சுயமரியாதையும், சமத்துவமும், சமஉரிமையுமே நமது தேசியம் என்று உறுதியாயச்சொல்லுவோம். மற்றபடி வயிற்றுப்பிழைப்பு தேசியத்தைப்பற்றி நமக்கு ஒரு சிறிதும் கவலை இல்லை.

---

### ஈரோடு தாலூகா போர்டு தலைவர் தேர்தல்

இம்மாதம 14ம் தேதி பழையகோட்டை பட்டக்காரர் திருவாளர் ராய் பகதூர் நல்லதம்பிசக்கரை மன்றாடியார் அவர்களை ஈரோடு தாலூகா போர்டுக்கு தலைவராக ஜனாப் ஷேக்தாவுத்சாயபு அவர்கள்பிரேரேபிக்க வெள்ளப்பாளையம்திரு ராமசாமிக் கவுண்டர் ஆதரிக்க ஏகமனதாய்த்தெரிந்தெடுத்தார்கள்.

# திருவண்ணாமலை கோயில் வழக்கு

## எதிரிகள் நடை மனுவின் கதி.

### திரு. கண்ணப்பருக்கு மூன்றாவது வெற்றி

திருவண்ணாமலை சப் மாஜிஸ்ட்ரேட் முன் விசாரணையிலிருந்து வரும் திருவண்ணாமலை கோவில் வழக்கை வேறு எந்த மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்காவது மாற்றவேண்டுமெனப் பிரார்த்தித்து மேற்படி வழக்கு எதிரிகளுள் ஒருவரான ராமநாத சாஸ்திரி என்பவரால் ஹைகோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட மனு இன்று காலை நீதிபதி ஜாக்சன் முன்பாக விசாரணைக்கு வந்தது. திருவண்ணாமலை கோவில் வழக்கு விவரங்களும் எதிரி ராமநாத சாஸ்திரி விசாரணையை வேறு கோர்ட்டுக்கு மாற்றவேண்டுமென்பதற்குக் காரணங்காட்டி ஹைகோர்ட்டில் தாக்கல் செய்திருந்த பிரமாணப்பத்திரத்தில் கண்ட விஷயங்களும் முன்பே "திராவிடனில்" வெளியிட்டிருக்கிறோம்.

இன்று எதிரி ராமநாத சாஸ்திரி சார்பாகத் தோன்றிய திரு. நியூஜண்ட்கிராண்டு இக்கேஸ் சம்பந்தமான விஷயங்களை விளக்கிய பின் இவ்வழக்கு விசாரணையை மற்றெந்த கோர்ட்டுக்காவது மாற்ற வேண்டுமென்று டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் முன் மனுவொன்று கொடுக்கப்பட்டிருப்பதாயும் அதிலும் ஹைகோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவிற் கண்ட காரணங்கள் தான் அறிவிக்கப்பட்டிருந்தனவென்றும் கீழ்க்கண்ட காரணங்களைக் கூறினார்:—மாஜிஸ்திரேட்டும வாதியும் (திரு கண்ணப்பர் மிக நெருங்கிய நட்புடையவர்களாயிருக்கின்றனர். அவர்களிருவரும் கோர்ட்டில் மாஜிஸ்ட்ரேட் அறையிலேயே சாப்பிடுகின்றனர். சப் மாஜிஸ்திரேட் புதல்வனுக்கும் வாதிக்கும் நெருங்கிய சிநேகமுண்டு. திரு கண்ணப்பர் சப் மாஜிஸ்திரேட் புதல்வனுக்கு ஒரு நல்ல வேலை வாங்கிக் கொடுப்பதாக வாக்களித்திருக்கின்றார். மேலும் திரு. கண்ணப்பர் இவ்வழக்கில முக்கிய சாட்சியாயிருக்கும் திரு. உதண்டிப்பிள்ளை என்பவருக்குத் தக்க உத்தியோகமொன்றும் வாங்கிக் கொடுத்திருக்கின்றார்

எதிரி (மனுதார்) சார்பாகத்தோன்றியிருந்த திரு. நியூஜண்ட் கிராண்டு மனு தாமதித்துத் தாக்கல் செய்யப்பட்டதற்குக் காரணங்காட்டி சப் டிவிசனல் மாஜிஸ்திரேட் மனுவைத் தள்ளிவிட்டாரென்றும் இதன் சம்பந்தமாக ஜில்லா மாஜிஸ்திரேட்டிற்கு அப்பீல் செய்து கொள்ளப்பட்டபோது அவர் மனுதார் வக்கீலை விசாரிக்காமலேயே மனுவைத் தள்ளிவிட்டதாயும் கூறினார்.

நீதிபதி ஜாக்சன்—ஜில்லா மாஜிஸ்திரேட் யார்?

திரு. நியூஜண்ட் கிராண்ட்:-அப்பா துரை பிள்ளை என்பவர். மாஜிஸ்திரேட் மீது செய்யப்பட்டுள்ள புகார்கள் சாதாரணமானவைகளல்ல. அவர் அவற்றை இல்லை என்று ஒரேயடியாக மறுக்கிறார். இப்புகார்களை விசாரித்து அறிவதற்குச் சாத்தியமில்லாமற்போகவில்லை எனக்கூறி இப்புகார்களைக் குறித்து சப டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டை நன்கு விசாரித்து ரிபோர்ட் அனுப்புமபடி உத்திரவிடவேண்டுமெனக் கூறினார்.

நீதிபதி:—அது அந்த மாஜிஸ்ட்ரேட் எதிரியை விசாரிப்பதற்குப் பதிலாக மாஜிஸ்ட்ரேட்டை விசாரிக்கச் செய்யப்படவேண்டுமென்று யோசனை கூறுவது போன்றல்லவா இருக்கின்றது.

திரு நியூஜண்ட்கிராண்ட்:-- அப்புகார்கள் மிகுதியும் முக்கியமானதால் அவை அப்படிக்கூறுகுமென்று குறிப்பிட்டு மனுவிற் கண்ட மற்ற புகார்களை எடுத்துக்காட்டி மாஜிஸ்திரேட்டும் வாதியும் கோர்ட்டு அறையிலேயே பகல் போஜனம் சாப்பிடுவதாகக் குறிப்பிட்டார்.

நீதிபதி ஜாக்ஸன்:-- மாஜிஸ்திரேட்யார்?

திரு ஜே. சி ஆடம்:— ஞானசிகாமணி பிள்ளை.

நீதிபதி ஜாக்சன்:— மாஜிஸ்திரேட்டின் வகுப்பும் வாதியின் வகுப்பும யாவை?

திரு. ஓ. தணிகாசலம் செட்டியார்:—மாஜிஸ்ட்ரேட் கிறிஸ்தவர் வாதி நாயுடு.

நீதிபதி ஜாக்சன்:— அப்படியானால் அவர்களிருவரும் ஒன்றாய்ச் சாப்பிடக் கூடுமென்பதை நம்ப முடியாது.

திரு. கிராண்டு:— ஆயின் வாதி மாஜிஸ்திரேட் வீட்டுக்கு ஏன் போகவேண்டும்?

நீதிபதி ஜாக்சன்:— மாஜிஸ்திரேட்டுக்கு லஞ்சம் கொடுப்பதற்கா?

திரு நியூஜண்டு கிராண்ட்:—வாதி மேஜிஸ்ட்ரேட் வீட்டிலும் சென்று சாப்பிட்டிருக்கிறார்.

திரு ஜே ஸி ஆடம்:—மாஜிஸ்ட்ரேட் இத்தகையபுகார்களை முற்றும் மறுத்திருக்கிறார்.

பின்னும திரு நியூஜண்ட் கிராண்ட் மனுவிற் கண்ட மற்ற புகார்களை நீதிபதிக்குக் கவன மூட்டி, அவை முக்கியமாகக் கவனிக்கத்தக்கவை எனக் கூறி இப்புகார்களில் சிறிதாவது வாஸ்தவமாயிருந்தால் மாஜிஸ்ரேட்டிடமிருநது தமக்கு சரியான நீதி கிடைக்காதென்று எதிரிபயப்படுவது நியாயந்தான் என்றும், அவ்வாறிருந்தால் நீதிபதி மாஜிஸ்ரேட்டை அவ்வழக்கை விசாரிக்க அனுமதிக்க முடியாதெனறும் கூறினார்.

நீதிபதி ஜான்சன்:—மாஜிஸ்ட்ரேட்டும் வாதியும் ஒன்றாகச் சாப்பிடுவதனால் என்ன முழுகிப்போய்விட்டது?

திரு கிராண்ட்:—மாஜிஸ்ட்ரேட் வீட்டில் சாப்பிடுவதுமட்டுமன்றி கோர்ட்டிலும வாதி வக்கீலுடனும் சாப்பிடுகிறார்கள்.

இந்நிலையில் நீதிபதி ஜாக்சன் கள்ளிக்கோட்டை போலீஸ சப் இன்ஸ்பெகடர் சம்பந்தமான புகாரைக் குறிப்பிட்டபோது திரு கிராண்டும் அவ்விஷயம் தமக்கும் தெரியுமெனக்கூறினார்.

நீதிபதி ஜாக்சன்:—இந்தியர்களுக்குள் இத்தகைய வழக்கமிருந்தால என் சந்தேகிக்கவேண்டும்? ஐரோப்பிய மாஜிஸ்ட்ரேட்டுகளும் எதிரியினுடையவோ அல்லது வாதியினுடையவோ வக்கீலும ஒன்றாகச் சாப்பிடுவதும் சம்பாஷிப்பதும சர்வ சாதாரணமாயிருக்க இந்தியர்கள் விஷயத்தில் இவ்வாறு நேர்மையற்ற கட்டுப்பாடு செய்வது தர்மமல்ல.

திரு ஜே சி ஆடம்:—மாஜிஸ்ட்ரேட் தாம் வாதி வக்கீலுடனாவது வாதியுடனாவது சேர்ந்து சாப்பிடவில்லை என்று பலமாக மறுத்திருக்கின்றார்.

திரு நியூஜண்ட் கிராண்ட், மாஜிஸ்ட்ரேட்டுக்கும வாதி வக்கீலுக்கும சமுதாய கட்டுரிமை யிருப்பதன சம்பந்தமாகத் தாம் எத்தகைய கட்டுப்பாடும் செய்ய விரும்பவில்லை என்றும், இத்தகைய செய்கையினுல் எதிரியின் மனதில் அந்த மாஜிஸ்டிரேட்டிடமிருந்து தனக்கு நீதி கிடைக்காதென்ற சந்தேகமும் பயமுமேற்படாதா வென்பது தான் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயமென்றும், மாஜிஸ்டிரேட் இத்தகையசெய்கைகளால் பெரும் பிசகு செய்திருப்பதாயும், இப்புகார்களைக் குறித்து விசாரிக்கச் செய்வதனால் இக்கேஸ் சம்பந்தமான பலன் ஒன்றுமேற்படாமற்போயினும் இனியாவது அந்த மாஜிஸ்ட்ரேட் அத்தகைய பிசகுக்கு ஆளாகாமல் போகக்கூடுமென்பதன் பொருட்டுத் தானென்றும் கூறினார்.

சர்க்கார் சார்பாகத் தோன்றிய பப்ளிக் பிராஸிகியூடர் திரு. ஜே. சி. ஆடம் அதனை எதிர்த்துப் பேசுகையில், இவ்விஷயங்களைக் குறித்து ஜில்லா மாஜிஸ்ட்ரேட் முன்பே விசாரித்திருப்பதாயும், அவர் விசாரித்து இதில் தலையிடுவதற்கு எத்தகைய காரணமுமில்லை எனத் தீர்மானித்து முடிவு செய்திருப்பதால் பின்னும் இதன் சம்பந்தமாகப் புதிதாக விசாரித்தறிவிக்கும்படி உத்தரவு பிறப்பிப்பதனுல் ஒருவித உபயோகமான பலனுமேற்படமாட்டாதென்றும எடுத்துக்காட்டினார்.

முடிவில் நீதிபதி ஜாக்சன் மனுவை செலவுதொகையுடன் தள்ளும்படி செய்தபோது கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பித்தார்:—மாஜிஸ்ட்ரேட் வாதியுடன் மித்ர நேசமுடையவராயிருப்பதனுல் எதிரிகளுக்கு சரியான நியாயம கிடைக்காமற் போகக்கூடுமென்று பயப்படுவதாக அவர்கள் நட்பையே முக்கிய ஆதாரமாகக்கொண்டு இக்கேஸ் விசாரணையை வேறு கோர்ட்டுக்கு மாற்றவேண்டுமென்று மனு கொடுக்கப் பட்டிருக்கின்றது. இத்தகைய புகார் ஒன்றும் வாஸ்தவமல்லவென்று மாஜிஸ்ட்ரேட் மறுத்திருக்கின்றார். மாஜிஸ்ட்ரேட் மீது எதிரி செய்துள்ள புகார்களைக் குறித்து சப்டிவிஷனல் மாஜிஸ்ரேட் விசாரித்து முடிவு செய்யுமவரை இவ்வற்ப வழக்கு விசாரணையை நிறுத்திவைக்கவேண்டுமென்று திரு கிராண்ட்யோசனை கூறுகின்றார். இது வழக்கமான முறையைத் தலைகீழாய்ப் புரட்டுவதாகின்றதேயன்றி வேறல்ல, வாதியும மாஜிஸ்ட்ரேட்டும இருவரும் ஒன்றாய்ச சேர்ந்து இவ்வழக்கில் எதிரிக்குத் தண்டனை விதிக்கச் சூழ்ச்சி செய்கின்றனர் என்று சொல்லப படுவதின் படியே வைத்துக் கொண்டபோதிலும் அவர்களிருவரும அவ்வாறு செய்யப் பகிரங்கமாக முயற்சி செய்யத்தக்கவாறு அவ்வளவு முட்டாள்கள் அல்ல. எதிரி கூறியுள்ள புகார்

இதன் தொடர்ச்சி 12ம் பக்கம பார்க்க

### நாயல் கமிஷன் சபையாருக்கு, தென்னிந்திய மருத்துவ சங்கத்தினர் அளித்த வரவேற்புப்பத்திரத்தின் சாரம்.

ஐயன்மீர்,

தென்னிந்தியாவில் சுமார் பதினொரு லட்சம் மருத்துவர்களுக்குப் பிரதிநிதியாக நாங்கள் தங்களை அன்புடன் வரவேற்கின்றோம்.

நெடுநாள் சமாதானமின்றி வருந்திக்கொண்டிருந்த இந்திய மக்களுக்குத் தாய்போல் தோன்றிய ஆங்கில நன்மக்களே வருக! வருக!

பலமொழிகள் வழங்கும் இந்தியாவில் ஒருவருடைய கருத்தை மற்றவர்கள் அறிவதற்கியலாமல், அன்பும் ஒற்றுமையுமின்றி வாழ்ந்தவர்களாகிய எங்கட்கு ஆங்கில பொதுமொழியையும், பல நலன்களையும் அளித்த பெருமக்களே வருக! வருக!

இந்தியாவில் பிராமணரென்போர் தம் நலம் கருதி, நூற்றுக்குத் தொண்ணூற்றேழு மக்களைப் பலவகை ஜாதிகளாகப் பிரித்து, அடிமைப்படுத்தி, மிகக் கொடுமையாக நடத்தி வந்ததைப் பிராமணரல்லாத தலைவர்களால் அறிந்து ஒடுக்கப்பட்ட வகுப்பினர்களுக்கு வகுப்புரிமை வழங்கிய வள்ளல்களே வருக! வருக!

எங்கள் பரம்பரை வைத்தியத் தொழிலை உயர்ந்த ஜாதியார் என்பவர் கைக்கொண்டனர். எங்கள் வகுப்பினர் கல்வியில் மிகப் பிற்போக்கடைந்து மிக ஏழைகளாயிருப்பதால் வேண்டிய உதவி செய்து உயர்தரக் கல்வியை இலவசமாக அளித்து மனிதத் தன்மை அடையச் செய்ய வல்ல மாண்பு மிக்கோர்களே வருக! வருக!

நூற்றுக்குத் தொண்ணூற்றேழு பிராமணரல்லாத மக்களுக்கு கல்வி அறிவு அளித்து சாதித் தொல்லைகளை வேரோடு களைந்து மக்களுக்குள் சமத்துவம், சுயமரியாதை வழங்கிய பின்னரே இந்தியாவுக்குச் சுயராஜ்யம் அளித்தல் வேண்டும். இல்லாதவரை நாங்கள் என்றும் இந்தியாவில் பிரிட்டிஷாரின் செங்கோலின்கீழ் வாழ்வதற்கே கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம், நன்றியறிதலுள்ள,

தென்னிந்திய மருத்துவ சங்கத்தினர்.

பண்டிதர், எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளை,

தலைவர்.

---

9ம் பக்கத் தொடர்ச்சி

வது. இப்படி தினம் ஒரு வீதி வேர்த்து சாபபலாவதானால் இந்த நாலு பிராமணாலேயே இந்த ஊரே சீக்கிரம் சாபலாய் விடும் போலிருக்கிறதே.

சித்தி:— பின்னை தெரியாமலா நம்முடைய பெரியவாள் பிராமணர்களை கிட்ட சேர்க்க வேண்டாம் என்று சொல்லுகின்றார்கள்

குடி — ஓ! ஹோ!! இதற்காகத்தானா அவர்கள் அப்படிச் சொல்லுகின்றார்களா! சரி, இனி புத்தியாய் பிழைத்துக்கொள்ளுகிறேன். இந்த நெருப்பை எப்படியாவது அணைத்து விடுங்களய்யா.

---

11-ம் பக்கத் தொடர்ச்சி.

கள் நடத்தும் சரியாயில்லாமற் போயினும் மாஜிஸ்ட்ரேட்டுக்கும் வாதிக்கும் ஏதோ கட்டுப்பாடென்பதை ஆதாரமாகக் கொண்டிருப்பதாக வைத்துக்கொண்டாலும் அதனை முன்னிட்டு வழக்கு விசாரணையை வேறு கோர்ட்டுக்கு மாற்றவேண்டுமென்பதற்குக் காரணமொன்றுமில்லை. மற்ற சமூகத்தார்களுக்குள் கௌரவமான கட்சிருப்பதுபோலவே இந்திய கனவான்களுக்குள் ளுமிருக்கக்கூடுமென்பதில் சந்தேகமில்லை. ஜில்லா மாஜிஸ்ட்ரேட் இதன் சம்பந்தமாக நன்கு விசாரித்து இதில் தலையிடுவதற்கு தக்க காரணமுமில்லை எனத் தீர்மானித்திருக்கின்றார். அவ்வாறிருக்க மீண்டும் வழக்கு விசாரணையை வேறு கோர்ட்டுக்கு மாற்றவேண்டுமென்று ஹைகோர்ட்டில் மனுக் கொடுக்கவேண்டிய அவசியமேயில்லை.

எதிரி (மனுதார்) சார்பாக திரு சியூஜண்ட் இரண்டும் தோன்றியிருந்தனர். வாதி திரு கண்ணப்பர் சார்பாக திவான்பகதூர் ஓ. தணிகாசலம் செட்டியாரும், திரு டப்ளியூ. எஸ். கிருஷ்ணசாமி நாயுடுவும், சர்க்கார் சார்பாக பப்ளிக் பிராசிகியூடர் திரு ஜே. வி. ஆடமும் தோன்றியிருந்தனர். 'திராவிடன்'

### மருத்துவ குல சங்கம் மதுரை

மருத்துவகுலப் பெரியார்களிலொருவராகிய பிரம்ம ஸ்ரீ இராமசுவாமிகள் 11 வது ஆண்டு குரு பூஜை சங்க நிலயத்தில் 6—3—28ல் நடைபெறும். ஏழைகள் சுமார் 1000 பேர்களுக்கு உண்டி அளிக்கப்பட்டது.

ஜில்லா மகாநாடு மாகாண மகாநாடுகளைக் கூடிய சீக்கிரம் நடத்த முயற்சி செய்து வருவதால் மருத்துவ சகோதரர்கள் முன்வரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம். இடம் காலம் முதலியவைகள் பின்னால் அறிவிக்கப்படும். திருவண்ணாமலை ஆலயச் சுதந்திர வழக்குக்காக சகாயத்தையும், சுயமரியாதையும் அடைய பொருளுதவி செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். எம். எஸ். சுப்பிரமணியம்.

### வைத்தியசாலை ஆண்டுவிழா

சேலம், குகை, அம்பலசாமி கோவில் வீதியில் அமைக்கப்பெற்றிருக்கும் முனிசிபல் சித்தவைத்ய சாலையின் ஆண்டு விழா நிகழும் மாதம் 18-ந் மாலை 3-30 மணிக்கு மேற்படி வைத்தியசாலைக்கட்டிடத்தில் சேலம் முனிசிபல் சேர்மென் திருவாளர், S. தம்மண்ண செட்டியார் அவர்களின் தலைமையின்கீழ் கொண்டாடப்படும்.

K. R. மீனாக்ஷிசுந்தரம், வைத்தியர்.

## "திராவிடன்" கிடைக்குமிடம்.

"திராவிடன்" பத்திரிகைகள் மதராஸ் சென்டிரல், எழும்பூர், அரக்கோணம், காட்பாடி, ஜோலார்ப்பேட்டை, சேலம், ஈரோடு, போத்தனூர், மாயவரம், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, நாகபட்டணம் முதலிய ரெயில்வே ஸ்டேஷன்களிலுள்ள ஹிக்கின்பாதம் புத்தகசாலைகளில் அரையணா வீதம் கிடைக்கும்.

---

## தேவை.

தஞ்சை தாலூகா போர்டு ஆண், பெண் பாடசாலைகளுக்குப் போதனா முறை பயிற்ற ஆண், பெண் உபாத்தியாயர்கள் தேவை.

சம்பளம் கீழ்கண்டபடி.

| | | |
|---|---|---|
| லோயர் கிரேட் உபாத்தியாயர்கள் | | 12 ½ 20 |
| ஹயர் ,, | ,, | 20 ½ 25 |
| செகண்டரி கிரேட் | ,, | 30 1 35 |
| லோயர்கிரேட்உபாத்தியாயினிகள் | | 20 1 25 |
| ஹயர் கிரேட் | ,, | 25 1 30 |

ஆசிரியர்கள் தங்கள் விண்ணப்பத்தில் வயது, ஆசிரியர் தொழிலில் தமக்குள்ள அனுபவம், தமது குலம் ஆகியவற்றைக் குறிப்பதோடு ஆசிரியர் அனுபவம், நடத்தை இவைகளைக் குறித்த நற்சாக்ஷிப் பத்திரங்களும் அனுப்பப்பட வேண்டும், விண்ணப்பங்கள் 23—3—28க்குள் அனுப்பப்பட வேண்டும்.

பார்ப்பனரல்லாதாருக்கு முதலில் உரிமை கொடுக்கப்படும்.

(ஒப்பம்) த. வே. உமாமகேஸ்வரம் பிள்ளை

தாலூகா போர்டு தலைவர், தஞ்சாவூர்.

---

## இனம்! இனம்!
## ஸில்க் அங்க வஸ்திரம்.

பிரைஸ் சீட்டு.

என்ற இந்த சீட்டை ரூபாய் 1 விலைகொடுத்து வாங்கினவர்களுக்கு ஒரு ரூபாய் விலையுள்ள 5 சீட்டு அனுப்பப்படும். டி சீட்டு 5-ம் விற்று ரூபாய் 4-ம் சீட்டின் டுப்ளிகேட்டும் அனுப்பினவர்களுக்கு 4 ரூபாய் பொறுமான ஒரு சிறந்த ஸில்க் அங்கவஸ்திரம் இனம் அனுப்பப்படும். நண்பர்களே, கவனியுங்கள் டி சீட்டு 5-ம் விற்று தாங்கள் கொடுத்த ரூபாய் ஒன்றும் எடுத்துக்கொண்டு மீதம் ரூபாய் நாலும் எங்களுக்கு அனுப்பிவிடவேண்டும். ஆகவே தாங்களுக்கு ஒரு நஷ்டமுமின்றி சிறந்த ஸில்க் அங்கவஸ்திரம் நீடித்த உழைப்பிற்கு உத்தரவாதமுள்ளது இனம் கிடைப்பதை கவனியுங்கள். எட்டணா ஸ்டாம்புடன் இன்றே எழுதவும்.

'ஜவுளி கேட்லாக் இனம்' மானேஜர்,

எம். ஆர். வீவிங் பாக்டரி,

கோட்டார், திருவாங்கூர்.

---

## சுதேச காபி பௌடர் என்னும் ஆவாரம்பூ சூரணம்.

கர்ப்ப ஸ்திரீகளும், குழந்தைகளும், பாலூட்டுகிற ஸ்திரீகளும், மாதவிடாய் கண்டிருக்கிற ஸ்திரீகளும் காப்பி முதலிய உஷ்ண குணமுள்ள பானங்களை அருந்துவதைக் காட்டிலும் ஆவாரம்பூ சூரண பானத்தை அருந்துவது மிகுந்த நன்மை செய்யும். மற்றவர்களும் சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் மாத்திரம் இருக்கும். ஒரு மண்டலத்துக்கு ½ சேர் டின் 1-க்கு ரூ. 0—9—0. அரை மண்டலத்துக்கு ¼ சேர் டின் ரூ. 0—5—0.

கு. முத்துக்குமாரசாமி பிள்ளை, c/o மீனாக்ஷிகா போஜன சாலை, கச்சேரி வீதி, ஈரோடு.

---

சுயமரியாதை அடைய

## 'திராவிடன்' 'குடி அரசு'

வாசியுங்கள்.

## ஈரோடு தாலூகா போர்டு தலைவர் தேர்தல்

ஈரோடு தாலூகா போர்டுக்கு தலைவர் தேர்தல் 14—3—28ல் நடைபெற்றது. அன்று, மொத்தம் 24 மெம்பர்களில் 20 மெம்பர்கள் ஆஜராயினர். சென்ற 6 வருஷங்களாக பிறர் நலத்தைக் கருதி தாலூகா போர்டுக்குட்பட்ட பள்ளிக்கூடங்களை அதிகரித்தும் பிள்ளைகளுக்கு சம்பளமின்றி படிப்பு கற்பிக்க ஏற்பாடு செய்தும் தாலூகா போர்டில் தமது பத்தா அலவன்சுக்கென்று வருஷம் ரூ 1200 ஆக ஆறு வருஷங்களுக்கு ஏற்பட்ட ரூ 7200 பெருமனும் அதைப் பொது ஜனங்களுடைய நன்மைக்காக போர்டுக்கு கொடுத்தும் தலைவராக வேலை பார்த்து வந்த ஸ்ரீமான் பழையகோட்டைப் பட்டக்காரர் பாப்பகரூர் நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார் அவர்கள் இப்பொழுது மூன்றும் முறையாக தலைவர் ஸ்தானத்திற்கு போட்டியின்றியில் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இது நமது பட்டக்காரரவர்களின் பெருந்தன்மையையும் அவரிடத்தில் மற்றவர்கள் கொண்டுள்ள அன்பையும் காட்டுகிறது. அன்று சாயந்திரம் தலைவர் அவர்கள் பங்களாவில் இந்து முஸ்லீம் கிருஸ்தவர் முதலிய சுமார் 500 நண்பர்கள் அடங்கிய சின்றுண்டிச்சமபந்தி போஜனம் நடைபெற்றது. இப்படி பிறர் நலத்தைக் கருதி தமது முக்கிய சொந்த அலுவல்களையும் கவனியாது பல நண்பர்களும் எல்லா மெம்பர்களும் வேண்டிக்கொண்டபடி ஷ ஸ்தானத்தை அன்புடன் ஏற்றுக்கொண்ட நமது தலைவர் பழையகோட்டை பட்டக்காரர் அவர்களை மனப்பூர்வமாக வாழ்த்துகின்றோம்.

ஒரு நிருபர்.

## கோலார் தங்க வயல்
### ஆதி திராவிட ஜன சபை.

23—2—28ல நிறைவேறிய தீர்மானங்கள்

ஆதி திராவிட மகா ஜன சபைக்காரியதரிசி தமிழ்ப்பண்டிகர் ஸ்ரீகளத்தூர் முனிசாமிப்பிள்ளை அவர்களின் அகால மரணத்தைப்பற்றி இச்சபை துக்கிக்கிறது.

இராயல் கமிஷனை மனப்பூர்வமாய் வரவேற்கிறது. சென்னையில் காங்கிரஸ்காரரின் பிரசாரத்தால் சென்ற 3ந் தேதி நடந்த ஹார்த்தால் கொடுமையின்போது நிரபராதியாக உயிர் துறந்த ஏழை ஆதி திராவிடர்களுக்கு அனுதாபத்தை தெரிவிக்கிறது. ஸ்ரீ காந்தியடிகளின் மனப்பான்மையைப் போன்ற ஜாதிப்பற்றுள்ள எவ்வித இந்துத் தலைவர்களையும் ஆதி திராவிடர் நம்புதல் கூடாது. ஒடுக்கப்பட்டவர்களுடைய சுதந்தர விஷயத்தில் 'குடி அரசு' 'திராவிடன்' பத்திரிகைகள் மூலமாகவும் பிரசார மூலமாகவும உதவிபுரிந்து வரும் திருமிகு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்களுக்கும் ஜெ. எஸ். கண்ணப்பர் அவர்களுக்கும் நன்றி பாராட்டுகிறது. தேக நலிவுள்ள காருண்ய மைசூர் மன்னர் பூரண சுகமாம் பொருட்டாக எம்பெருமானை பிரார்த்திக்கிறது. நலியாக சென்னை சென்றுள்ள முதியோரான ஸ்ரீ நாராயணசுவாமி அவர்களுக்கும் பூரண சௌக்கியம் தரும் பொருட்டு ஸ்மரிக்கிறது.

காரியதரிசி.

## லாலுகுடி தாலூகா பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை மகாநாடு.

—:o:—

ஏற்கனவே ஒத்திவைக்கப்பட்ட கூட்டம் 10-3-28ல் லாலுகுடி கோதண்டராம செட்டியார் சத்திரத்தில் கூடியது. பல கிராம சங்க அதிகாரிகளும், பிரடலஸ்தர்களும், திருச்சி சங்க அமைச்சர் விஸ்வநாத பிள்ளையவர்களும் பல சுயமரியாதை யுணர்ச்சியுள்ள இளைஞர் பலரும் வந்திருந்தார்கள். திருச்சி விஸ்வநாத பிள்ளையவர்கள தலைமைவகித்தார்.

### நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

(1) சமது மகாநாட்டை வருகிற மே மாதத்தில் லாலுகுடியிலேயே நடத்த இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

(2) மகாநாட்டுத் தலைவராக திருவாளர்கள் ஈ. வெ. இராமசாமி நாயக்கர், திராவிடன் ஆசிரியர் ஜெ. எஸ். கண்ணப்பர், குமாரன் ஆசிரியர் முருகப்ப செட்டியார், சென்னை பிரசிடென்ஸி ஆனரரி மாஜிஸ்திரேட் திரு மிரு அலர்மேல் மங்குத்தாயாரம்மாள், தஞ்சை எ. டி. பன்னீர் செல்வம், கோவை ரத்தினசாபாபதி முதலியார இந்த அறுவர்களை முறையே கேட்டு ஒருவரைந் தேர்ந்தெடுக்கொள்ள வரவேற்புக கமிட்டிக்கு இக்கூட்டம் அதிகாரங்கொடுக்கிறது.

(3) லாலுகுடி தாலூகா போர்டு பிரசிடெண்டு திரு. பா. கிருஷ்ணசாமி ரெட்டியார் வரவேற்புக்கமிட்டித் தலைவராகவும், சந்தனூர் தாலூகா போர்டு உறுப்பினர் செல்லப்பநாடார், பூவளூர் திரு. செல்லக்கணபதி செட்டியார், திரு. பொன்னம்பலனூர். பெருவளநல்லூர் திரு.பா. கி. இராஜசிதம்பரம் ரெட்டியார் காரியதரிசிகளாகவும் பல பிரமுகர்கள் உறுப்பினர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

(4) வரவேற்புக் கமிட்டி உறுப்பினர்கள் பிரதிநிதிகள் விசிட்டர்கள் இவர்கள் தரவேண்டிய கட்டணத்தை நிச்சயிக்கவும் வசூலித்து மகாநாட்டுச்செலவு செய்தல் முதலிய எல்லா அதிகாரங்களையும் வரவேற்புக்கமிட்டிக்கு கொடுக்கிறது. வந்தனோபசாரத்துடன் இரவு எழரை மணிக்கு குதூகலத்துடன் கூட்டம் நிறைவேறியது நலம் ஓங்குக, என்று நமது நிருபர் எழுதுகிறார்.

## பிராமணரல்லா மாணவர் உண்டிச்சாலை.

நம் இந்தியா தேசத்திலும், சிறப்பாய் தமிழ் நாட்டிலும் உள்ள ஒவ்வொரு பெரிய நகரத்திலும், பார்ப்பனர்களென்போர் போஜனச்சாலைகளையும் சிற்றுண்டிச் சாலைகளையும் ஏராளமாய் ஏற்படுத்தி. அன்பு என்பது அணுவளவும் இன்றி, காசு பறிக்கும் மோசக் கருத்துடன், எளிய விலைக்கு விற்கும் தகாத பதார்த்தங்களை வாங்கி நம்மவர்க்கு அளிக்க, நமமவர்களும் பணங்கொடுத்துண்டு, பிணிவாய்ப்பட்டு சுயமரியாதை விட்டு, பரிதபிக்கிறார்கள். இந்நிலைமையை யறிந்த பெரியோர்கள், சிற்சில விடங்களில் பிராமணரல்லா உண்டிச்சாலைகளை ஏற்படுத்தி வருவது, 'குடி அரசு' வாசகர்கள் யாவரும் அறிந்ததொன்றே. இதுகாலை ஈரோட்டிலும பிராமணரலலா மாணவர்களின் உடலநலத்தையும் சுயமரியாதையும் காப்பாற்றும் நோக்கங்கொண்டு, உ. பி. பி. சாமிக் கவுண்டர், முத்துசாமி கவுண்டர் முதலியவர்கள் உண்டிச்சாலைகள் ஏற்படுத்தி, தம் கைப்பொருள் விரயமாவதையும் கவனியாது, மாணவர்களின் உடல் நலத்திற்கும், சௌகரியத்திற்கும், ஏற்ற ஏற்பாடுகளுடன் நடத்தி வருகிறார்கள். இவ்வுண்டிச்சாலைகளில் சமையல் செய்பவர்கள் பார்ப்பனரைப் போல் துர்நாற்ற உடைகளைத் தரிககாமல், தினந்தோறும் குளித்து, உடை மாற்றி, இல்லம் மெழுகியே சமையல் செய்வதை விரதமாக கொண்டவராகலான் பிராமணரல்லா மாணவர்களே! இனி மேலாவது, தம்மைவிட உயர்ந்தவர்கள் இல்லை யெனும் கர்வங்கொண்ட போலிப் பார்ப்பன உண்டிச்சாலைகளுக்குப் போகும் வழக்கத்தை ஒழித்து, பிராமணரல்லா உண்டிச்சாலைகளில சாப்பிட்டு, உடல் நலத்தையும், சுயமரியாதையும் காப்பாற்றிக்கொள்வீர்களாக. சுயமரியாதை வாழ்க;

B. R. சின்னகிருஷ்ணசாமி.

## மதிப்புரைகள்.

1 ஜீவகோடி ரஹஸ்யம்:-ஸ்ரீ ஆர். கேகமசிவாய சுவாமியவர்களால் இயற்றப்பெற்றது. இப்புத்தகத்தில் மதப் புரட்டு, வேதப் புரட்டு, சித்தாந்தப் புரட்டு, சன்யாசிகள் புரட்டு, ஆரியர் புரட்டு, அர்ச்சகர் புரட்டு, சோதிடப் புரட்டு, ஜாலப் புரட்டு, இரசவாதப் புரட்டு, அரசியல் புரட்டு, தேசியப்புரட்டு, முதலிய புரட்டுகள் சம்பாஷணை ரூபமாகவும் கதை ரூபமாகவும், கட்டுரை ரூபமாகவும் வெளியாக்கப்பட்டிருப்பதுடன் பூமி, தாவரம், பிராணிகள், மனிதன், விவாகம், கடவுள், மதம், பக்தி முதலியவைகளின் உற்பத்தி வளர்ச்சி முதலியவைகள் நவீன (சயன்ஸ்) சாஸ்திரப்படி விளக்கப்பட்டிருக்கின்றன. இப்புத்தகம ஆடவர், பெண்டிர், அரசியல் வாதிகள், சீர்திருத்தக்காரர்கள், ஆகிய அனைவரும் படிக்கத்தக்கன.

இதன் விலை ரூ 1 விலை சற்று அதிகமென்றே சொல்லவேண்டியிருக்கிறது. வேண்டுவோர் "கே. என். சிவபோகம பிள்ளை 4—15 மஞ்சனைக்காரத் தெரு மதுரை" என்ற விலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

2 இந்திய மாதா:-இப் புத்தகம் அமெரிக்க மாது ஸ்ரீமதி காதரைன் மேயோ அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய 'மதர் இண்டியா' என்னும் புத்தகத்தின் தமிழ் மொழி பெயர்ப்பாகும். இது சென்னை கே. எஸ். முத்தையா கம்பெனியாரவர்களால் பிரசுரிக்கப்பட்டது. இப்புத்தகத்திலுள்ள விஷயங்களில் சிலவற்றைப் பற்றி ஏற்கனவே 'தமிழ் நாடு' முதலிய பத்திரிகைகளிலும் பிரசங்கங்களிலும படித்தும கேட்டுமிருக்கலாம. இப்புத்தகத்தைப்படித்தால் இந்திய நாட்டைப்பற்றி வெள்நாட்டார் சிரிக்கத் தகுந்ததும் இழிவானதுமான விஷயங்கள் என்னென்ன வென்பதை ஒருவாறு உணர்ந்து சீர் திருத்திக்கொள்ள அநுகூலமாயிருக்கும். 1/8 ராயல் அளவில் 120 பக்கங் கொண்ட இப்புத்தகத்தின் விலை ரூ 1-8-0 புஸ்தகத்தின் தன்மைக்கு விலை சற்று அதிகம் என்பதையும் குறிப்பிடாமலிருகக முடியவில்லை. புஸ்தகம் வேண்டுவோர் கே. எஸ். முத்தய்யா கம்பெனி, சென்னை' என்ற விலாசத்துக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

## மலாய் நாட்டில் சுயமரியாதையின் வளர்ச்சி

இவ்வூரின் கண் வதியும் பிரபல தனவந்தரும் வியாபாரியும் ஈகையாளரும் இதுவரை பார்ப்பனரைத் தெய்வமென பக்தி செலுத்தி வருமாகிய உயர் திருவாளர் உ. ராமசாமி நாடார் 18—2—28ல் காலமான தனது சகோதரர் திருவாளர் உ. இலசுமண நாடார் அவர்களின் கருமக்கிரியையை பலரின் தடைகளையும் பொருட்படுத்தாது சுயமரியாதை முறைப்படி, சுயமரியாதை வீரர்களும் ஆராய்ச்சியாளர்களுமாகிய திருவாளர்கள் கா. தாமோதரம்பிள்ளை, எ. ரா. சிவரூப பிள்ளை இவர்களைக்கொண்டு 4—2—28 தேதி ஞாயிற்றுக்கிழமை விமரிசையாய் நடத்தி வைத்தார். இது இம்மலாய் நாட்டில் பரவி வரும் சுயமரியாதை இயக்க முன்னேற்றத்தின் அறிகுறியாகும். இது சமயம் சுயமரியாதையை நிலை நாட்ட தமிழர்களுக்கு ஓர் வழிகாட்டியாக நிற்கின்ற உயர் திரு. நாடார் அவர்களுக்கும் சுயமரியாதை தொண்டாற்றி வரும் திருவாளர்கள் கா. தாமோதரம் பிள்ளை, எ. ரா. சிவரூப பிள்ளை அவர்களுக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தை தெரிவித்துக்கொள்வதுடன் ஏனைத் தமிழ் மக்களும் இம்முறையிலீடுபட்டு சுயமரியாதை இயக்கத்தை நிலை நாட்டும் படிக்கும் விண்ணப்பித்துக்கொள்கின்றேன்.

கோ. சாரங்கபாணி

## புரோகிதத்தையும் பார்ப்பனியத்தையும் ஒழித்த வீரர்கள்

1. ஸ்ரீமான் கோவிந்தசாமி மூவரையர் ஒரத்தூர், தஞ்சை தாலூகா.
2. ,, சா. ராமசாமி வாண்டையார் சாக்கோட்டை.
3. ,, சா. சுப்பிரமணிய நாடார், சாக்கோட்டை.
4. ,, சா. ரெங்கசாமி வாண்டையார், சாக்கோட்டை.
5. ,, சோ. முத்துக்குமார பிள்ளை திருவளர்சோலை.
6. ,, எ. சுப்பராயலு நாயுடு பட்டுக்கோட்டை.
7. ,, கரு. கருப்பையா பிள்ளை சக்காக்கி.
8. ,, பா. மா. பெருமாள் வியாபாரி, கடலூர்.
9. ,, ரெ. வெங்கிடசாமி நாயுடு மிஷின் மென், திருச்சி.

## ஒரத்தநாடு போர்டு ஹைஸ்கூல் ஆண்டு விழா

நிகழும் மார்ச்சு மாதம் 18-தேதி ஞாயிற்றுக்கிழமை ஷை விழாவும் பரிசளிப்பு விழாவும் ஷை பாடசாலையில் திருவாளர் ஏ. ராமசாமி முதலியார் பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் கொண்டாடப்படும். அன்பர்கள் விஜயம் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

M. சோமசுந்தரம், தலைமை ஆசிரியர்.

## ஆதிதிராவிடர்களைப்பற்றி மனம் வருந்துவதேன்.

'யௌவன பாரதன்' 10—2—28ல் ராயல் கமிஷன் பகிஷ்கார தினம் என்ற தலைப்பின் கீழ் எழுதிய விஷயங்களில் 3—2—28ல் ஆதிதிராவிடர்கள் பகிஷ்காரத்திற்கு விரோதமாக பிரசாரம் செய்ய பிரித்தாளும் முறையை தன் கொள்கையாக கடைப்பிடித்திருக்கும் அரசாங்கத்தினரின் தூண்டுதலினாலோ அல்லது அன்னியருடைய சூழ்ச்சியினாலோ கிளப்பி விடப்பட்டிருப்பதாகவும் நமது ஆதிதிராவிடமக்கள் அன்று நடந்து கொண்ட பான்மை மிகவும் வருந்தத்தக்க தெனவும் குறிப்பிட்டு எழுதியிருப்பது விந்தையிலும் விந்தை? ஐயா யௌவனவா? நீர் அன்று ஆதிதிராவிடர்கள் நடாத்திய ராயல் கமிஷன் வரவேற்பின் திருநாளை சிறப்பாக கொண்டாடியதை கண்ணுற்றதும் வயிறு எரிந்து புலம்புகிறீரா அல்லது காங்கிரஸ் பார்ப்பன பிரசாரத்திற்கு முட்டுக்கட்டை வந்து விட்டதே என்று ஓலமிடுகிறீரா? ஆதிதிராவிடர்களை பத்திரிகை மூலமாக பயப்படுத்தலாமென்று பிரசுரித்தீரா? இப்பாரத மாதாவின் பிள்ளைகளாகிய எங்களை ஆறறிவுடைய எங்களை தீண்டப்படாதவன் என்றும், தெய்வத்தை கும்பிட கோவிலில் இடமில்லை என்றும் சாதாரண பொதுரஸ்தாவில் நடக்கயாக்கியமில்லை என்றும் போஸ்டாபீசில் தபால்முத்திரை வாங்க பாத்தியமில்லை என்றும் கிணற்றில் தண்ணீர் இறைக்க இடமில்லை என்றும் முனிசிபல் கவுன்சில் ஸ்தானங்களில் பஞ்சாயத்து கோர்ட்டுகளில் பெஞ்சு மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளில் தாலூகா போர்டுகளில் இடமில்லை என்றும் விலக்குவது யாருடைய பிரித்தாளும்முறை? யாருடைய சூழ்ச்சிகள்! யௌவனவா! ஐயோ யௌவனவா! காங்கிரஸ் பார்ப்பனர்கள் கவர்ன்மெண்டாரால் எங்களுக்கு கொடுக்கும் சுதந்தரங்களுக்கு தடை G. O. No. 37 பிறப்பித்தார்கள். 144 செக்ஷனை சட்டமாக்க ஓட்டுகொடுத்தார்கள். சென்னை சட்டசபையில் பிரேரபனை கொண்டுவந்தார்கள். இதுவெல்லாம் யாருடைய சூழ்ச்சி யௌவனவா? இப்போதாவது உமக்கு கண் திறந்ததா? ஆதிதிராவிடர்களின் மன வெறுப்பைக்கண்டு இன்னும் நமது 'குடி அரசு' இடம் கொடுத்தால் எழுதுகிறோம்.

ஆதிதிராவிடன்.


**ஏஜண்டுகள் தேவை.**
தக்க கமிஷன் கொடுக்கப்படும்.
கேட்லாக் இனாம்,

**ஸ்ரீ கிருஷ்ணாநந்த கௌதம பரிமளசாலை.**

ஆண்மை தரும் அமிர்த ரச தாதுபுஷ்டி லேகியம், அங்க நோயகற்றும் அநுமாஞ்சனம், வாய் நாற்றமகற்றும் வாசனைப் புகையிலை, நற்சுகமளிக்கும் நறுமண சந்தனாதித் தைலம், நலம்மிகுந்த நறுமண அரைக்கீரை விதைத் தைலம், நாளுக்கு நாள் குணமளிக்கும் நறுமண கூந்தல் தைலம், பாங்குடனமைந்த வாசனைப் பாக்குத்தூள், கண்டோர் வியக்கும் கல்நார் பற்பொடி. சாதுக்கள் இன்புறும் ஊதுபத்தி தினுசுகள், பூஜைக்குகந்த வாசனை தசாங்கம். தேஜஸ் கொடுக்கும் ஸ்நானப் பவுடர். மந்தகாசம் பொருந்திய நறுமண சந்தன பில்லை. சித்தம் மகிழ்விக்கும் பல அத்தர் தினுசுகள்.

அடியிற்கண்ட விலாசத்தில் கிடைக்கும்.
ஸ்ரீ கிருஷ்ணாநந்த கௌதம பரிமள சாலை,
வலங்கைமான் போஸ்டு,
தஞ்சை ஜில்லா.


### மலாய் நாட்டில் 'குடி அரசு' கிடைக்கும் இடங்கள்.

சிங்கப்பூர்.

1. பிரிட்டிஷ் & அமரிகன் நியூஸ் ஏஜன்ஸி 6, பேட்ரி ரோட்டு.
2. பெடரல் ரப்பர் ஸ்டேம்பு கம்பெனி.
3. குணம் மெடிகல் & நாவல்டீஸ் ஸ்டோர் 178, சிலிகி ரோட்டு.

கோலாலம்பூர்.

1. M. S. வடிவேலு பிள்ளை, 86, அம்பேங் வீதி.
2. விஸ்வநாத புக் டிபோ, நெ. 9, பிரிக்பீல்டு ரோட்டு.
3. பெடரல் ரப்பர் ஸ்டாம்பு கம்பெனி.
4. M. P. L. பழனியப்ப செட்டியார், சரஸ்வதி விலாஸ், 98, அம்பேங் வீதி.
5. V. S. லக்ஷ்மண செட்டியார், ஜெனரல் மர்ச்சண்டு, 14, ஸ்டேஷன் ரோட்டு, செண்டல்.

ஜோகூர்பாரு.

1. சென்ட்ரல் ஸ்டோர், 61, ஜாலன் இப்ராஹிம்.

பினாங்.

1. பெடரல் ரப்பர் ஸ்டாம்பு கம்பெனி.

ஈப்போ.

1. பெடரல் ரப்பர் ஸ்டாம்பு கம்பெனி.

கீழ்கண்ட ஊர்களில் ரயில்வே ஸ்டேஷன் புக்ஸ்டால்களிலும் கிடைக்கும்.

1. பாரிபந்தர். 2. டாபா ரோட்டு. 3. சிரம்பான். 4. கெலாங். 5. மலாக்கா.

### சென்னையில் குடி அரசு கிடைக்கும் முக்கியமான இடங்கள்.

1. முனுசாமி, ஜெனரல் நியூஸ் ஏஜென்ஸி பிராட்வே கார்னர்.
2. K. கண்ணன்—நியூஸ் ஏஜென்ஸி கோவிந்தப்ப நாயக்கன் தெரு,
3. குப்புசாமி பிள்ளை வெத்திலை பாக்கு கடை, யானைகௌனி.
4. ஷண்முக முதலி, அரிசி வியாபாரம், புரசைவாக்கம்.
5. எத்திராஜு முதலி, வெத்திலை பாக்கு கடை, திருவல்லிக்கேணி.
6. ஜெகநாதமுதலி, பஸ்" ஸ்டேண்டு புரசைவாக்கம்.
7 'திராவிடன்' ஆபீஸ், மவுண்ட் ரோடு.

## ஆதிதிராவிட சகோதரர்கள் கவனிக்க.

சென்ற பல வாண்டுகளாக உயர் குலத்தோர் என்று சொல்லிக்கொள்ளும் ஜாதி இந்துக்களில் சிலர் நாடகங்களிலும் கதா பிரசாரங்களிலும் தசரா முதலிய இந்துக்கள் திருவிழாக்களிலும் பூர்வ குடிமக்களாகிய ஆதிதிராவிடர்களை பறைய னென்றும் பூலைய னென்றும் சாம்பான் சாம்பாத்தி என்றும் இழி சொற்களினால் பாடல்கள் பாடி அலங்கோலமான ஆடைகள் உடுத்தி மாட்டுத்தலைகள் போல் உருவங்கள் செய்து தடிகளில் தூக்கிக்கொண்டு கடை கடையாய் பிச்சை யெடுத்து துட்டு வசூலித்து திரியும் கேவலமான செய்கையைகண்டிக்க 20—6—26ல் தூத்துக்குடியில் ஆதிதிராவிட ஜில்லா கான்பிரன்ஸில் கனம் ஆர். வீரையன் எம். எல். ஸி. அவர்களின் தலைமையின் கீழ் தீர்மானங்கொண்டு வந்ததில் திருநெல்வேலி கலெக்டர் கீழ்கண்ட உத்தரவை வெளியிட்டிருக்கிறார்.

"நாடகத்திலாவது அல்லது கதைகளிலாவது நந்தனார் சரித்திரம் நடத்துவதில் நந்தனாரை பறையனென்று ஆபாசமான வார்த்தையால் அழைப்பதும், கேவலமான மாதிரியில் நடத்துவதும், மேற்படி ஜாதியாருக்கு மனவருத்தத்தையும் அவமானத்தையும் உண்டாக்குகிறபடியால் இனி எந்த நாடகத்திலும் கதைகளிலும் அவ்விதம் நடத்தாமலிருக்க வேண்டுமென்பதாகத் தெரியப்படுத்தப்படுகிறது"

இந்த உத்தரவைத் தண்டோரா மூலம் எல்லோருக்கும் தெரியப்படுத்த வேண்டுமென்று எல்லா கிராம முனிசிப்புகளுக்கும் பஞ்சாயத்து கோர்ட்டு தலைவர்களுக்கும் உத்தரவு வந்து அவர்கள் அதன்படி செய்கிறார்களாம்.

ஆனதால் சகோதரர்களே இந்த உத்தரவை மேற் கூறிய ஜாதி இந்துக்கள் அனுசரித்து நடக்கின்றார்களா வென்பதை கவனித்து இனிஷ்டிகேவல செய்கைநடந்தால் உடனே கவர்ண்மெண்டாருக்கு முறைபாடு எழுதும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

யோ. இ. பால்வண்ணம், தூத்துக்குடி.

## திருப்பத்தூர் தாலூக்கா ஆதிதிராவிட 2 வது மகாநாடு.

### விஷமங்கலம்.

1928 பிப்ரவரி மாதம் 23 தேதியில் விஷமங்கலத்தில் திரு வி. ஜ. முனிசாமிப் பிள்ளை அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஷெ மகாநாடு சிறப்பாக நடைபெற்றது,

22 தீர்மானங்கள் வாசிக்க கரகோஷங்களுடன் நிறைவேறிற்று.

அதில் பொய்யான ஜாதிப் பெயர்கள் வழங்கப்பட்டு ஒருவருக்கொருவர் பெண் கொடுக்க வாங்க இல்லாமலிருப்பதை நீக்கி இனி ஒருவருக்கொருவர் பெண் கொடுக்க வாங்க இருக்கவேண்டு மென்றும் மாரியம்மன் திருவிழாக்களில் ஆடு மாடுகளை பலியிடக்கூடாதென்றும் இப்பொழுது திருப்பத்தூரில ஓர் போடிங் ஏற்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது மிகவும் சந்தோஷம்.

நிருபர்

## சேலம் கலெக்டருக்கு பிரிவுபசாரம்.

சேலம் கலெக்டர் F. L. பிரிக்ஸ்டாக் துரை I. C. S. இவ்வூரைவிட்டு வின்பேரில் போவதை முன்னிட்டு அவருக்கு இன்று மாலை 5-30 மணிக்கு சேலம் டிஸ்டிரிக்ட் போர்டு ஆபீஸ் காம்பவுண்டில் ஒரு விருந்து கச்சேரி சேலம் முனிஸிபல் சேர்மென் S. தம்மண்ண செட்டியாரும், முனிசிபல் கவுன்சிலரும் பிரபல செடிகள் வியாபாரியுமான ஜனாப் S. K. I. அப்துல் ரகிமான் சாயபு பஹதூர் அவர்களும் இந்து முஸ்லீம்களின் சார்பாக நடத்தினார்கள். உள்ளூரிலுள்ள பல பிரபலஸ்தர்கள் விஜயம் செய்திருந்தார்கள். மிட்டா ஜமீன்தார் S. சிவசங்கர முதலியார் முதலியவர்கள் கலெக்டர் துரையை சிலாகித்துப் பேசினார்கள். கலெக்டர் துரை அவர்களும், விருந்து நடத்திய ஸ்ரீமான்கள் தம்மண்ண செட்டியார் அவர்களுக்கும் S. K. I. அப்துல் ரகிமான் சாயபு அவர்களுக்கும் வந்தனம் அளித்து பாராட்டி பேசினார். சிற்றுண்டிகள் வழங்கப்பட்டு கூட்டம் 7-மணிக்கு கலைந்தது.

ஒரு நிருபர்.

## கோபிசெட்டிபாளையம்.

### லக்கநாய்க்கன் பாளையம் சுகாதார வாரம்

லக்கனாய்க்கன்பாளையம் 12—2—28 ல் இவ்வூர் ஐயர் எலிமென்டெரி பாடசாலையில் ஸ்ரீமான் டி என் பெருமாள் கவுண்டர் அவர்களின் பொருளுதவியால் சுகாதாரவாரக் கொண்டாட்டம் விமரிசையாய் நடந்தேறியது: பந்தய விளையாட்டுகள் ஊர்வலம் முதலியன நடந்தன, கோபி ஸ்ரீமான் எ எல பிணிடோ அவர்கள் பி எ, ரெவன்யூ டிவிசனல் ஆபீசர் அக்கிராசனத்தின் கீழ் டாக்டர் கோபாலன் எல் எம் பி, ஸ்ரீ அட்டண்ண கவுண்டர், ஸ்ரீமதி கிரேஸ் டேவிட் அம்மாள், ஸ்ரீ புவனேஸ்வர அய்யர் தேக ஆரோக்கியம உடை உணவு இவைகளைப்பற்றி பேசினார்கள், பிரசிடெண்டு பிள்ளைகளுக்குப் பரிசுகள் அளித்தார் திரு வெ. பெருமாள் கவுண்டரால் சிற்றுண்டி வழங்கப்பட்டது: இரவு 7 மணிக்கு ஹெல்த் இன்ஸ்பெக்டர் சுகாதார விஷயத்தைக்குறித்து பூதக் கண்ணாடி க்காட்சி காண்பித்ததுடன் இவ்வைபவம் முடிவு பெற்றது.

தம்புசாமி.

## திருச்சிராப்பள்ளி ஜில்லா சுயமரியாதைச் சங்கம் அறிவிப்பு.

ஐயா,

இதுகாறும்நம்மவர்களின்நிலைமையையும், நம் முன்னேற்றத்திற்குத் தடையாகவிருக்கும் பகைகளின் பலத்தையும் பற்றி, பேசியும் எழுதியும், 'திராவிடனும்' 'குடி அரசும்' அதன் ஆசிரியர்களும் விளக்கியிருக்கிறார்கள்.

இனியேனும் காரியத்தில் செய்யவேண்டியவைகளை முடிவு செய்து நடவடிக்கையில் கொண்டுவர வேண்டியது இன்றியமையாததாகுமல்லவா?

அதற்காக, அடுத்த எப்ரல்-மீ 28, 29உ சனி, ஞாயிறுகளில் திரிச்சிராப்பள்ளி ஜில்லா பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை மகாநாட்டை நடத்தி நமது ஜில்லாவிற்கு வேண்டியவற்றை செய்வித்து பயன்படுத்த உறுதி செய்து அதற்கென ஒரு வரவேற்புக்கமிட்டி அமைக்கவும், மகாநாட்டுத் தலைவரை தேர்ந்தெடுக்கவும், 11-3-28 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு பெரிய பஜார் சிவாஜி மடத்தில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பெறுவதால் சுயமரியாதை யுணர்ச்சியுள்ள பார்ப்பனரல்லாதார் அனைவரும் அன்பர்களுடன் வந்திருந்து நடத்தி வைத்து எங்களுக்கு ஊக்கமளிக்க விரும்புகிறோம்.

தீ. ச. அ. வேணுகோபால்,
தலைவர், சுயமரியாதைச் சங்கம், திருச்சி,

## தஞ்சை ஜில்லா கல்வி மகாநாடு.

நிகழும் மார்ச் மாதம் 17-உ சனிக்கிழமையன்று தஞ்சை ஜில்லா போர்டு மீட்டிங் ஹாலில், சென்னை கல்விச்சபைத் தலைவர் திருவாளர் A. ராமசாமி முதலியார் B. A., B. L. அவர்கள் தலைமையில் ஷெ மகாநாடு நடைபெறும். அது காலை 1927ம் வருஷத்திய ஆரம்பக்கல்வி சோதா விஷயமாகவும் தஞ்சைஜில்லாவில் ஆரம்பக்கல்வியை விர்த்தி செய்யும் விஷயமாகவும் சீர்திருத்தும் விஷயமாகவும் யோசித்து முடிவு செய்யப்படும். யாவரும் விஜயம் செய்யவேணுமாய்க் கோருகிறோம்.

ஐ. குமரசாமி பிள்ளை,
தஞ்சை ஜில்லா கல்விச்சபைத் தலைவர்.

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

# மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன் பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி. மதிராஸ்.

5-ம் பக்கத் தொடர்ச்சி.

முன்னுக்குப் பின் முரணான வரலாருக இருக்கிறது. மற்றும் வேண்டுமென்றே குறும்புக்காக, எழுதியது போலவும் தோற்றுகிறது. முருகன் வரலாற்றைக் கூறுவதான கந்த புராணம் இது பற்றி யாது கூறுகிற தெனப் பார்ப்போம்.

சிவபெருமான் மலைமகளை மணந்த பின் போகுசெய்திருந்தார். அப்போது சூரனுடியோராலே துன்புறுத்தப் பெற்ற வானவர் அவரை யடைந்து தமது பகைவெல்ல ஓர் திருமகனைத்தர வேண்டுமென்று வேண்டிக்கொள்ள அவர் ஆறுமுகங்களோடும் விளங்கினர். ஒவ்வொரு முகத்திலிருந்தும் ஒவ்வொரு பொறியாக ஆறுதீப்பொறிகள் தோன்றின. அவருடைய ஆணைப்படி அக்கினிதேவனும் வாயுவும் அவைகளைச்சுமந்து கங்கையில் விட்டனர். கங்கை சரவணப் பொய்கையில் அவைகளைச்சேர்க்க அவை ஆறும் ஆறுமுகங்களோடும் கூடிய ஒரு பிள்ளையாக ஆயின. அப்பிள்ளையைக் கார்த்திகைப் பெண்கள் அறுவரும வளர்த்தனர். இதுவே அவ்வரலாறு. இதில் வால்மீகி முனிவர் வரலாற்றிற்போல ஆபாசமான செய்தியொன்றும் காணப்படவில்லை- இவ்வரலாற்றையே வால்மீகி மாற்றி ஆபாசமாகக்காட்டியிருக்கிறார்.

மேலும் வால்மீகி முப்பத்தேழாம் சருக்கத்திலே அக்கினி தேவனும ஏனைய தேவரும் பிரமனிடம சென்று வேண்டலும் அவன் அக்கினிதேவன் அந்நிய மாதாகிய கங்கையோடு கூடி ஓர் பிள்ளையைத்தருவான் என்று கூறியதாகவும் அதுகேட்ட தேவர்கள் கயிலாய மலையைஅடைந்து அக்கினியை வேண்ட அவன் கங்கையை யடைந்து, தன்னோடு சேர வேண்டியதாகவும், அவளும் இசைந்து பெண்ணுருவோடு வந்ததாகவும் எழுதுகிருர். இது முனனுக்குப்பின் மாருக இருக்கிறது. தன் முன நிற்கும் அக்கினியை விட்டுவிட்டு தேவர்களிடம் தி பிள்ளையைப் பெறுவான் என்று நான்முகன் கூறியதையும் தங்கள் முன் நின்ற தீயை விட்டுவிட்டு தேவர்கள் கயிலாயமடைந்து அங்கு அக்கினியை வேண்டியதாகவும் கூறும் கதை அறிவுடையவரால் ஒப்புக்கொள்ளும் தன்மையதா? இதை அறிஞரே தீர்மானித்தல் வேண்டும். இக்கதையைப் பார்த்தால் ஒன்று, அக்கினியும் நான்முகனை யடைந்தான் என்ற வாக்கியம் பொய்யாகவேண்டும். அல்லது நான்முகனை அடைந்த அக்கினி வேறு கயிலாயத்திலிருந்த அக்கினி வேறு ஆதல் வேண்டும். இதனுல் ஆரியர் தம் தெய்வத்தைபபற்றிக்கூறும வரலாறுகளெல்லாம் அறிவுடைய மக்களால் அருவருத்துத்தள்ளத்தக்கனவாகவே இருக்கின்றன. இவ்வாறு அருவருப்பைத் தரும வரலாறுகளை யெல்லாம் உண்மைத் தமிழ் மகனும் கம்பர் விட்டுவிட்டு முருக பிரான் பிறப்பைப்பற்றி ஒரே பாடல் கூறுகிருர்.

அது வருமாறு:—

"ஆயதிவ்விட மவ்விடம் அவிர்மதி யணிந்த
தூயவன் றனக்கரிவையிற் றேன்றியதொல்லை
வாயுவும் புனற்கங்கையும் பொறுக்கலா வலந்த
சேய்வளர்ந்தருள் சரவணமென்பதும் தெரித்
தான்."

இதன் பொருள் 'மதியணிந்த பரிசுத்தமானவனுகிய சிவபெருமானுக்கு பார்வதியிடம் தோன்றி, வரும், வாயுவாலும் கங்கையாலும் பொறுக்க முடியாத பலத்தையுடையவருமாகிய முருகக்கடவுள் வளர்ந்தருள் சரவணம் அவ்விடம் என்பதையுங் கூறினன்' என்பது இதனுல் இவர் அக்கினியைப்பற்றியபேச்சே கூருதவராவர். மேலும, வாயு தூக்கி வந்து போட அதனைக் கங்கை சுமக்கமாட்டாதவளானுள் என்பதாகிய கந்தபுராண வரலாற்றையே இவர் ஒப்புக்கொண்டவராவார். தீக்கடவுள் கங்கையைக்கூடிய ஆபாசவரலாறுகளை யெல்லாம் கம்பர் மறைத்துவிட்டனர். இதுபோலவே ஆரவமெத ஆபாசங்களை யெல்லாம் கூருது மறைத்துவிட்டமை முன்னரே தெளிவாகப்பார்த்தோம். கங்கை வரலாறு கூறவந்த வால்மீகி கங்கையில் ஆறுமுகக்கடவுள் தோன்றினர் என்று கூறவந்தவர் இவ்வெறுப்பைத் தரும் வரலாற்றைக்கூறினர். இனிமேற்செல்லுதும். ஆறுமுகக்கடவுள் தோற்ற வரலாற்றைக் கங்கைக் கரையிற் கூறியதாக வால்மீகி கூறுகிருர். கம்பரோ சோணைநதிக் கரையிலுள்ள சோலையில்வைத்துக் கூறியதாகக் கூறுகிருர்.

## சுகாதாரவாரக் கொண்டாட்டம்.

விஜயமங்கலம், குனியமுத்தூர், ஒட்டப்பிடாரம் முதலிய இடங்களில் மேடி கொண்டாட்டம் வெகு சிறப்பாக நடத்தப்பட்டதாக அவ்விடங்களிலிருந்து நிருபர்கள் பல நிருபங்கள் அனுப்பியிருக்கிறுர்கள். பொதுவாக, அவ்வாரத்தில் பள்ளி மாணவ மாணவிகளாலும், பிரமுகர்களாலும் ஊர் வலம், பந்தய விளையாட்டுகள், நாடகங்கள், சுகாதார விஷயமான சம்பாஷணைகள், சொற்பொழிவுகள், பூதக்கண்ணுடிக் காட்சிகள் முதலியவைகள் நடத்தப்பட்டதாகவும் மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் சிற்றுண்டிகள் அளிக்கப்பட்டதாகவும் அறிகிறோம்.

## எதிர்கால சோதிடம்.

நீங்கள் பிறந்த நாழிகை அல்லது கடிதம் எழுதும் நேரத்தையாவது குறித்தனுப்பினுல் உங்கள் எதிர்கால ஆயுள், தனம், சகோதரம், மாதுர், பிதுர், ஸந்தானம், சத்ரு, ருணம், களத்திரம், களத்திரரூபம், பாக்கியம், ஜீவனம், தொழில், லாபம், விரையம், ஆகஇத்யாதி விஷயங்கள் பூராவும் தெரிவிக்க ரூ. 2. ஒரு வருஷத்திற்கு மாதவாரி நடக்கும் பலன் எழுத ரூ. 2. பலன் சரியில்லாவிடில் பணம் வாபீஸ் செய்யப்படும்.

அருட்பிரகாசர் சோதிடாலயம்,
வைத்திக்குப்பம் புதுவை
(பிரான்ஞ்சிந்தியா)


உயர்வான பனியன்கள்! விலை மலிவு! வெகுநாள் உழைப்பது!

விரைவில் வாங்குங்கள்.

### பெயருக்காகப் போலி பனியன்களை வாங்கி ஏமாறுதீர்கள்.

நமது நாட்டில் தொழிலனுபவ மிக்க தன வைசியர் ஒருவரின் நேரான மேற் பார்வையில் ஒழுங்காக நடைபெறும் தன வைசிய தொழிற்சாலை எமது ஸ்ரீ மீனுட்சி விலாஸ் நிட்டிங் பாக்டரி ஒன்றேயாகும். இதிலிருந்து விதவிதமான பனியன்கள் வெவ்வேறு அளவுகளில் கண் கவர் வனப்புடையனவாய் உறுதியும் சேர்த்தியுமிக்க நூல்களைக்கொண்டு தயார் செய்து விற்பனை செய்யப்பெறுகிறது. உடலின்பக்கவசத்தில் தையல் இல்லை. குறைந்த விலையில் சிறந்த பனியன்களை விரிவாக விற்பதே எமது நோக்கம். ஒருமுறை வரவழைத்து உபயோகித்துப் பார்ப்பின் உண்மை விளங்கும். உள் நாட்டிலும், மலாய் பர்மா முதலிய வெளி நாடுகளிலும் ஏராளமாக விற்பனையாகிறது. வியாபாரிகளுக்கும் மொத்தமாய் வாங்குபவர்களுக்கும் தக்க கமிஷன் கொடுக்கப் பெறும். ஆர்டர்கள் உடனுக்குடன் கவனித்து ஒழுங்காக நிறைவேற்றப்பெறும் ஆர்டர்கள் அனுப்புகிறவர்கள் பத்திரிகையைக் குறித்து எழுதுவதுடன் நூற்றுக்குப் பத்து வீதம் முன்பணம் அனுப்ப வேண்டும். வி. பி. சார்ஜ் பாக்கிங் சார்ஜ் பிரத்தியேகம்.

A/1 டைமண்ட் நிட் திக் பனியன்கள்.

| | | | |
|---|---|---|---|
| 24 இஞ்சு டஜன் 1-க்கு | ரூ. 4-2-0 | 30 இஞ்சு டஜன் 1-க்கு | ரூ. 6-0-0 |
| 26 ,, ,, | ரூ. 4-8-0 | 32 ,, ,, | ரூ. 6-12-0 |
| 28 ,, ,, | ரூ. 5-4-0 | 34 ,, ,, | ரூ. 7-8-0 |

டி. ரகங்களில் ஸ்லீவ்ஸ் பனியன்கள் டஜன் 1-க்கு [illegible] அணு அதிகம். சாம்பிள் பனியன்களுக்கு வி. பி. சார்ஜ் பாக்கிங் சார்ஜ் இனும். முழு விபரத்திற்கும் மானேஜருக்கு எழுதி தெரிந்து கொள்ளவும்.

சொந்தக்காரர்
வ. ராம. கு. முத்து
முத்துக்கருப்பஞ் செட்டியார்,
தேவகோட்டை.

M. முத்துராமன் செட்டியார்,
மானேஜர்,
ஸ்ரீ மீனுக்ஷிவிலாஸ் நிட்டிங் பாக்டரி,
பெருந்துறை Perundurai (S. I. R)



உலகப் பிரசித்தி பெற்ற பாம்பரை வைத்தியர்! ஆயி ரக்கணக்கான குஷ்ட ரோகிகளை குணமாக்கினவர்!! வைத்திய கான்பரன்ஸ்களில் வைத்திய ஆசிரியர் பட்டமும் தங்க மெடலும் பெற்றவர்!! சமஸ்தான வைத்திய நிபுணரான பழநி சி. மலையப்பசாமி அவர்களின் மருந்துகள் உலகமெங்கும் புகழ் பெற்றவை. உண்மையான குணமுள்ளவை. உள்ளூர் வாசிகளால் மதிக்கப் பெற்றவை. ஒரு முறை வாங்கி பரீக்ஷித்தால் உண்மை விளங்கும்,

நூதன சிங்கபலத்தை தருவது எது? பழனி, சி. எம். சாமி,

மகா வீரிய **தங்க பஸ்பம்.**

பச்சிலை மூலிகையினாலேயே நீற்றப்பட்டது. பெரிய மஹானின் முறை. அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்த விர்த்தியும் உண்டாக்கும். இல்வாழ்வில் அதியற்புத சுகம் தரும். வெள்ளை, வெட்டை, நீர்கடுப்பு, நீரழிவு, பவுத்திரம், மூலம், க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம் முதலிய சகல வியாதிகளும் தீரும். 48 நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24 நாளைக்கு ரூ 10.

நற்சாக்ஷி:—தங்கள் தங்க பஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை, பலக் குறைவு முதலியன நீங்கி அபார தாதுபுஷ்டி உண்டாயிருக்கிறது. இதன் பெருமையை எழுத முடியாது. இன்னும் மேற்படி தங்கபஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும். வி. பி. வரத ராஜப்பெருமாள் சாமி, கவிராயர், பொள்ளாச்சி.

**குரு அப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு**

ஜாஸ்தி போகும் நீரையும, நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி, தேகவெளுப்பை மாற்றி ரத்தவிர்த்தியையும், தேக புஷ்டியையும் தரும். சகல மேகமும் க்ஷய ரோகமும் நீங்கும். தளுக்கற்றது. 24 நாள் புட்டி 1-க்கு ரூ. 15. 48 நாள் புட்டி 1-க்கு ரூ. 30. ஏராளமான நற்சாட்சிகளை கேட்லாக்கில் பார்க்கலாம். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

பினங் முதலிய அன்னிய தேசவாசிகள் ரூபாய் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

**சித்த ஆயுர்வேத வைத்தியாசிரியர்**

**C. மலையப்பசாமி** நித்தியானந்த வைத்தியசாலை, பழனி S. I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:-முருகன் ஏஜன்ஸி 43 அரமனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை


4-ம் பக்கத் தொடர்ச்சி.

உடம்பாடானவை மற்றொன்றிற்கு முரண்பாடாய்ப் பிரிந்து நிற்பதுவே மதங்களின் வேற்றுமைக்கு அணிகலனாய்த் திகழ, ஒருவர் சர்வமத சகோதரராயிருத்தற்குரிய இலக்கண மென்னும்? எல்லோரையும் திருப்தி செய்யப் புறப்பட்ட தந்தையும் மைந்தனும் கழுதையைத் தூக்கிச் சுமந்த கதை நமது சர்வமத சகோதர சங்கத்தார் அறியார் போலும். இன்னோரன்ன இடர்பாடு நிறைந்த சங்கத்தார் ஸ்ரீ நாயக்கர் சமயங்களுக்கு ஆபத்துண்டாக்கப் புறப்பட்டு விட்டாரெனச் செருக்கிச் சில வெளியீடுகளால் சமயங்களுக்கு அரண்கோல முற்பட்டவர் போல நடித்து வருகிறார்கள்.

இவர்களுடைய வெளியீடொன்றை சில நாட்களுக்கு முன்னர் 'தமிழ் நாடு' தினப்பதிப்பில் கண்டோம். சென்ற மாசித்திங்கள் பதினேழாந் தேதி வெளியான 'தமிழ் நாடு' தினப்பதிப்பில் 'நாயக்கர் பிரசாரம்' 'சமய அறிஞர்களுக்கு எச்சரிக்கை' 'சமயநூற்களை எரிக்கவேண்டுமா?' என்னும் அடுக்குத் தலைப்புகளோடு பிரசுரிக்கப்பட்டுள்ள இன்னொரு வெளியீட்டினையுங் கண்ணுற்றோம். இளந்தளிர் நாள் போய் முற்றின நீர்மைத்தாய் அவ்வெளியீடுகள் உள்ளீடற்ற புழை பொருளாய் புரைதந்து நிற்கின்றதே யல்லால் உணர்வுறும் பொருள் சிறிதும் காணப்படவில்லை. சுமை தாங்கிக் கல்லைப்போல் புராணச் சுமையை எடுக்கமாட்டாமல் ஏந்திக்கொண்டு நிற்பதையே வெளியீட்டிற் காணலாமே யன்றி வேறொன்றும் காண முடியவில்லை.

நவீன நாகரீகக் கொள்கையினால் மக்களிடை சமய அநுஷ்டானங்கள் சற்று திரிந்து ஆலயவழிபாடு முதலிய துறைகள் வழக்க விருத்தமாயுளது. இவைகளைச் சீர்திருத்த வேண்டுமென்றே ஆங்காங்கு சைவ வைணவ சித்தாந்த சபைகள் முயற்சித்து வருகின்றன வென்று சர்வமத சகோதர சங்கத்தார் குறிப்பிடுகிறார்கள். இவ்வளவாவது சமயங்களின் ஊழல் அவர்கள் சிந்தைக் கெட்டியது நமது நாயக்கரின் நற் பிரசங்கத்தால் தான் என்பதை முரசு முழக்கத்தோடு கூற நாம் சிறிதும் பின் வாங்கோம். நமது சகோதர சங்கத்தார் இன்னும் சிறிது முன்னேக்கோடு சமன் செய்து சீர் தூக்கிப் பார்ப்பரேல் நாயக்கர் உணர்ச்சியில் நாலிலொரு பாகமாவது கிடைக்கப்பெறும் பாக்கியமுடையவர்களென்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

சமயங்களின் பேராலும் சாமிகளின்பேராலும் முன்னோர் வழக்கம் என்னும் பாசறையில் மறைந்து மக்களை சுயமரியாதையின்றி வதைத்துவருகின்றபடியால் அத்தகைய கொடுமைகள் நிகழாது செய்தல் வேண்டும். அங்ஙனம் செய்தற்கு சமயங்கள் முட்டுக்கட்டையாய் நிற்குமானால் அச்சமயங்களையே சிதைத் தொழிக்க வேண்டுமென்பதே நமது ஸ்ரீ நாயக்கர் தம் ஒப்புயர்வற்ற பிரசாரமாகும் என்பதை நமது சகோதர சங்கத்தார் அறிதல் வேண்டும். மதங்கள் மக்களின் முன்னேற்றத்தைக் கருதாவிட்டாலும் மக்களின் முன்னேற்றத்திற்கே உழைக்கும் சாஸ்திர ஞானத்தை அம்மதங்கள் தடுக்காதிருக்க வேண்டும். மக்களைக் கடவுள் காப்பாற்றுவது தவறிப்போய் மக்கள் கடவுளைக் காப்பாற்றப் புறப்பட்டிருக்கிறார்களென்று சர் ஆர்தர்கீத் சமீபத்தில் கூறியதற்கு நமது சர்வமத சகோதர சங்கத்தார் இலக்கியமாய் திகழ்கின்றார்கள் போலும்.

இவர்களுடைய ஆச்சரியமான வெளியீட்டில் இன்னொரு அதிசயம் காணப்படுகின்றது. அதாவது "புத்தர் காட்டிய ஜீவகாருண்யம் அவர்காலத்திற்கு முன்னமே நமது சைவ சமயத்திலுள்ளதுதான்" என்பதே. இவர்கள் கூறும் ஜீவகாருண்யத்தையுடைய முந்திய சைவம் யாதென்றும் நாம் அறியக்கூடவில்லை. அதன் ஆதாரத்தை விளக்கிக்காட்ட முன் வருவார்களாக. அருளறமூர்த்தியாம் ஸ்ரீ புத்தருக்கு முன்னர், ஜீவகாருண்யமும், சமத்வக்கோட்பாடும் இன்றென்பது சரித்திர விற்பன்னரின் துணிபாம். ஆதாரமற்ற கட்டுக்கதைகளைக் கொண்டு ஒரு கற்பிதத்தைப் புதுக்க முற்படல் அறிவுடையோர் செய்கையல்ல என்பதைச் சங்கத்தாருக்குத் தெரிவிக்கிறோம்.

பிறகு இந்த வெளியீட்டிலும் இதற்கு முன்னர் 'தமிழ் நாடு' தினப்பதிப்பில் பிரசுரிக்கப்பட்டிருந்த வெளியீட்டிலும் ஸ்ரீ நாயக்கர் அவர்களைப் பற்றி வரைந்திருந்ததில் நாயக்கர் இந்து மதத்தைக் கண்டித்து அவற்றை ஒழித்துவிட வேண்டுமென்று கூறுவதால், பிறகு எம்மதந்தான் ஸ்ரீ நாயக்கர்க்குரியதெனக் கேட்கப்பட்டிருப்பதைக் கண்டோம். நாயக்கர் மதம் யாதென்பதை நமது குடி அரசில் இடையறாது வெளியிட்டுக் கொண்டே வருகிறார். அவை யாதெனில்,

அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

என்பதே மனிதத் தன்மையும் அறிவுச் சுடருமுடையவர் அனுசரிக்க வேண்டிய மதமென்பதை நமது சர்வமத சகோதர சங்கத்தார் அறிதல் வேண்டும். மதமென்பதின் பொருள் யாதென்பதைத் தேரத் தெளிவரேல் மக்கள் நலத்திற்காக மத மெழுப்பப்பட்டதே யன்றி மதத்திற்காக மக்கள் உண்டாகவில்லை யென்பதை அறிந்துய்வர்.

## சித்த மருந்து செய்சாலை கோவிற்பட்டி.

சென்னை மாகாண சித்த வைத்திய சங்கச்சிறப்புக் கூட்டம் 26-2-28ல் திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களின் தலைமையிற்கூடி கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதாய் நிறைவேற்றப் பெற்றது

"இவ்விராஜதானியில் சித்த வைத்திய நூல் முறைப்படி மருந்துகள் செய்துவைத்து முனிசிபாலிட்டிகளாலும், தாலூகாபோர்டுகளாலும், சொந்தத்திலும் வைத்து நடத்தப்பெறும் சித்த வைத்திய சாலைகளுக்கு குறைந்த விலைக்கனுப்புவதற்காகச் சித்த மருந்து செய்சாலை (Siddha Pharmacy) ஒன்றேற்படுத்தி நடத்தல் இன்றியமையாததாயிருக்கிறபடியாலும் ஷை மருந்துசெய்சாலையை இச்சங்கத்தின் அமைச்சர் சாமி விருதை சிவஞான யோகிகளை ஷை சித்த மருந்து செய்சாலையை ஏற்படுத்தி நடத்தும்படி இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது."

ஷை யாரும் மேற்கூறிய தீர்மானத்தை ஏற்று "சிவஞான சித்த மருந்து செய்சாலை" யென்ற ஒரு பார்மசி (Pharmacy) ஏற்படுத்தியுள்ளார்கள். 1928ம் வருஷம் ஏப்ரல் மாதம 1ந் தேதி முதல் உயர்ந்த சித்த மருந்துகள் அந்த பார்மசியிலிருந்து வேண்டியவர்களுக்கு அனுப்பப்படும்.

துணையமைச்சர்,

# குடும்பத்துக்கோர் பொக்கிஷம்.

சில மாதங்களுக்குள்

"இல்வாழ்க்கையின் இரகசியங்கள்"

11,000 பிரதிகள் விற்பனையாகி யிருக்கின்றன. ஒருவர் வாங்கிப் படித்தால் அவர் தம் நண்பர்கள் எல்லோரையும் வாங்கும்படி தூண்டுகிறார். எனவே இப்புத்தகத்திற்கு உள்ள மதிப்பை நாங்கள் சொல்லாமலே தெரிந்து கொள்ளலாம்.

## இல்வாழ்வை நல் வாழ்வாக

நடத்த உத்தேசிக்கும் ஸ்திரீ புருஷர்கள் கையில் இந்நூலின் பிரதியொன்று இருந்தே தீரவேண்டும்.

# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

## மூன்றாம் பதிப்பு விலை ரூ. 2.

ஒவ்வொரு ஊரிலுமுள்ள புஸ்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும். போலிப் புஸ்தகங்களை வாங்கி ஏமாறுதீர்கள். புஸ்தகத்தின் பேரில் "வாசன் புஸ்தகசாலை" என்ற பெயர் இருக்கிறதாவென்று பார்த்து வாங்குங்கள்.



நமது விலாசம்

## வாஸன் புஸ்தகசாலை,

244 தங்கசாலை வீதி, தபால் பெட்டி 119 மதருஸ்.


3ம் பக்கத் தொடர்ச்சி

என்னும் கதையைக் கேட்டு துளசிச் செடியை நம்பி விஜயநகர ராஜ்யமும் தஞ்சாவூர் ராஜ்யமும் அழிந்தன. துளசியை மிதிக்கக்கூடாது, மிதித்தால் பாவம், தாண்டினால் லெட்சுமி போய் விடுவாள், என்பது வைணவர்கள் நம்பிக்கை. துருக்கருக்கும் மராட்டியருக்கும் சனியத்தில் தான் அவர்கள் கடவுள் இருக்கிறார் என்கிற நம்பிக்கை.

சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்கு திருப்பேரூரில் பள்ளரோடு பள்ளராகவல்லவா சிவபெருமான் ஞான உபதேசம் செய்தார். அதை சுந்தரரும் ஏற்றுக்கொண்டு ஞானமுமடைந்தார். சிவபெருமானும் சுந்தர மூர்த்திகளும் பள்ளர்களுக்கு பக்தவும் சிநேகிதருமாயிருக்கையில் சைவர்களாகவிருக்கும் நாம் ஏன் அருவருப்பும், கொடுமையும் காட்டவேண்டுமென்றே 'குடி அரசு' கேட்கிறது. அதற்கு விரோதமான கதைகளை ஏற்பாடென்றும் வழக்கமென்றும், சாஸ்திரமென்றும் பரிபக்குவ மென்றும் சமய நிட்சை யென்றும் கடவுளை சுட்டிக்காட்டி கொடுமைகளைச் செய்து அன்னிய மதத்திற்கு ஓட்டின சிவபெருமானின் பந்துக்களை ஓடினபக்தர்களும் சிவபெருமானுக்கு எங்கும் வாத்தியம் வாசிக்க விடார்கள். முன்னமேயே சிவபெருமான் ஓட்டாண்டி. கோர்ட்டுக்குப்போனாலும் கடனாளியாய் விடுவார். இதுவரையிலும் சிவபெருமானுக்கு வந்த ஆபத்து போதும். இனியும் அவரைச் சீரழிக்காதீர்கள் என்றே 'குடி அரசு' பிரசாரம் செய்கிறது.

## சென்னை மாகாண 9-வது ரெட்டிகுல மகாநாடு, ஹொசூர்.

இந்த 9-வது மகாநாட்டை சேலம் ஜில்லா ஓசூரில் மகா-௱-௱-ஸ்ரீ ராஜா எல். ராமநாத ரெட்டியாரின் தலைமையின் கீழ் எப்ரல் மாதக்கடைசியில் நடத்த ஏற்பாடு செய்து கொண்டு வருகிறது. சபையை ஆரம்பிக்க சென்னை மந்திரி டாக்டர் பி. சுப்பராயன் M. A. L. L. B., அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார். பெரிய உத்தியோகஸ்தரும், ரெட்டி ராஜாக்களும், ஜாதிய வாதிகளும், சுயராஜ்ய சங்கக்காரரும் ஸ்ரீமான்கள் கட்டமஞ்சி ராமலிங்க ரெட்டியார் அவர்களும், ஓ புல்லா ரெட்டி M. A. I. C. S., மதுரை அஸிஸ்டெண்டு கலெக்டர் அவர்களும், இதர ரெட்டி கனவான்களும், பனக்கால் ராஜாவாகிய ஸ்ரீ ராமராயனிங்கார் முதலான பிராமணரல்லாத சங்கப் பிரபுக்களும் சபைக்கு வருகிறார்கள். ஆகையால் முந்தியே டிக்கட்டுகள் வாங்குவது நல்லது. சபை நடக்கும் தேதி பிறகு தெரிவிக்கப்படும்.

சன்மான சங்க கட்டணம் ரூ. 25—0—0
ஷெ 2-ம் தர கட்டணம் ,, 10—0—0
டெலிகேட் டிக்கட்டு ,, 3—0—0
விசிடர் டிக்கட்டு ,, 1—0—0

காரியதரிசிகள்.

## திரிசிரபுரம் செங்குந்த மஹாஜன சங்கம்.

இச்சங்கத்தின் அதரவின் பேரில் 13-2-28௳ சங்க உபதலைவர் திரு. டி. எஸ். துரைசாமி முதலியார் அவர்களது மாடியில கோவை திரு. ஏ. ஆர். சிவானந்த முதலியாரவர்கள் தலைமையின் கீழ் கூடின கூட்டத்தில் கீழே கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

டாக்டர் முத்துலக்ஷிமி அம்மையாரின் பொட்டுக்கட்டுதலை ஒழிக்கும் மசோதாவிற்கு மிக்க ஆதரவளிப்பதுடன் இதற்கு விரோதமாக உழைத்த சங்கராச்சாரிகளையும் சில பார்ப்பன விஷமிகளையும் வன்மையாக கண்டிப்பதோடு மேன்மை தங்கிய அரசப்பிரதிநிதியாரை இதற்கு மிக்க ஆதரவளிக்குமாறு இச்சங்கம் தாழ்மையாகக் கேட்டுக் கொள்ளுகிறது. சிறிதும் ஆதாரமும் நியாயமுமில்லாமல் கோவை செங்குந்த மஹாஜன சங்கத்தாரைப் போலி செங்குந்தர் என்று சொல்லி அனுவசியமாகப் பிரசாரஞ் செய்வதை அழுத்தமாகக் கண்டிக்கிறது. கோவில்களில் இருக்கும் அர்ச்சகர்கள் ஒருவருக்கும் தெரியாது இரகசியமாய் புஷ்பத்திற்குள் பொட்டைவைத்து திருட்டுத்தனமாகப் பொட்டுக்கட்டுவதைக் கண்டிப்பதோடு தேவஸ்தான டிரஸ்டிகள் இது விஷயமாய் மிக்க கவனஞ்செலுத்தி அவ்வர்ச்சகர்களை தண்டிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எம். வீரப்ப முதலியார்,
காரியதரிசி.

9-ம் பதிப்பு! வெளி வந்து விட்டது 9-ம் பதிப்பு!!

## ஆங்கில ஆசான் (ஒன்பதாம் பதிப்பு)



தமிழ் நாட்டில் சுமார் 2,50,000 இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ஜனங்களுக்குச் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொடுத்ததும், இதைப்போன்ற அநேக புஸ்தகங்கள் பின்னால் பணம் பறிக்கும்பொருட்டு அநேகரால் தயார் செய்யப்பட்டாலும் முதன் முதல் வெளிவந்ததும், ஸ்காற்றதும், நற்கியாதியும் ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும் சென்னை சட்டசபை வித்யா இலாகா மந்திரி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு அவரிடமிருந்து உயர்ந்த நற்சாக்ஷிப் பத்திரம் வாங்கப்பட்டதுமான எமது ரிஜிஸ்டர்டு லேடி டிரேட்மார்க் போட்டுள்ள,

ஆங்கில ஆசான் என்ற பெயர் பார்த்தும், இப்படத்தில் காட்டியுள்ள லேடி டிரேட்மார்க் இருக்கிறதா வென்று கவனித்தும் புத்தகம் வாங்குங்கள்.

800 பக்கம் முழு காலிகோ பயிண்டு விலை ரூ. 2—0—0

வி. பி. தபால் செலவு அணா 0—8—0

தி. இராஜகோபால் முதலியார், 302 தங்கசாலைத் தெரு, மதறாஸ்

## அறிக்கை.

ஜவுளி ஜரிகை வியாபாரிகளுக்கு

எங்களிடம் பிரான்சி 8 லடி ரங்குள்ள ஜரிகை மார்க்குகளும் பாம்பே குவால்டி 8 லடி ரங்கு சரிகை மார்க்குகளும் சூரத்பட்டு கயிர்கட்டின அதிக ரங்குள்ள கம்பி ரங்குகள் மார்க்குகள் தயாரிலிருக்கிறது இத்துடன் உள்ளூரில் தயாராகும்படியான ஜவுளி தினுசுகளில் வெள்ளை 100 நெம்பர் முதல் 200 நெம்பர் வரை நூல்களில் 5, 6 முழம் சதுரம் ஜரிகை ருமால்களும் ஷை நெம்பர்களில் 2½ முழம் அகலம் 6 முழம் பலவிதமான நவீன கொடி பேட் ரகங்களில் ஜரிகை துப்பட்டாக்களும் தனிப்பட்டும், பட்டும் நூலும் கலந்த பலவிதமான இங்கிலீஷ் பேன்ஸி சிகப்பு க்ரேஸ் கலர்களில் 5 அகலம் 18 முழம் நீளம் பலவிதமான பேட்கரையும் ஜரிகை முந்தாணியுள்ள சேலை ரகங்களும் ஷை கண்ட ரகங்களில் 6 முழம் ரவிக்கை தினுசுகளும் பேட்டா தினுசுகளும் தயாரிலிருப்பதால் தேவையுள்ளவர்கள் எழுதினால் விலை ஜாப்தா அனுப்பப்படும்,

சி. லிங்கி செட்டி எஸ். வெங்கிட்டராம செட்டி,
ஜவுளி அண்டு ஜரிகை வியாபாரம், கோயமுத்தூர்.

இனம்! **1928** இனம்!!

தங்கள் விலாசத்தைத் தெரியப்படுத்தினால் நாங்கள் 1928வது காலண்டரும் ஆரோக்கிய சமாசாரமும் தபால் செலவின்றித் தங்களுக்கு அனுப்புகிறோம்.

சித்த ஔஷதசாலை கம்பெனி,
போஸ்டு முல்லச்சேரி, மலபார்.

"அறிவு விளக்கம்"

ஓர் மாதாந்திரப் பத்திரிகை

வருட சந்தா தபாற்கூலி உள்பட **6** அணா

மாதிரிப்பிரதி இனம்.

'அறிவுவிளக்கம்' ஆபீஸ், உடுமலைப்பேட்டை

அநேக காட்சிகளில் பொன், வெள்ளி மெடல்கள் பெற்ற

விதைகள் செடிகள்

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 3 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி, கேட்லாக் இனம். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள்:— 20 சாம்பிள் பாக்கெட் ரூ. 2. 10 பாக்கெட் 1—4. நாட்டுக் காய்கறி 20 பாக்கெட் ரூ. 2—8.

ச. கொ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட்ரர்சா தோட்டம், சேலம்.

## பனி! பனி! பனி!

குளிர் காலத்திற்கு அடக்கமான கம்பளிப் போர்வைகள் சுத்தமான உரோமத்தால் நம் நாட்டில் நெசவு செய்யப்பட்டவை. 6 முழ நீளம் 3 முழ அகலமும் அழகிய பல நிறங்களில் கிடைக்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| நெ. 1. | 6 முழ நீளம் | 3 முழ அகலம் | ரூ. | 15. |
| 2. | ,, | ,, | | 12. |
| 3. | ,, | ,, | | 10. |
| 4. | 5 ,, | 2½ ,, | | 8. |
| கம்பளித் தொப்பி நெ. | 1 | உருப்படி 1-க்கு | | 3-8-0 |
| ஷை | 2 | ஷை | | 2-8-0 |
| ,, | 3 | ,, | | 2-0-0 |

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

## பெண்களுக்கு அழகு.

உயர்ந்த மல்லில் பச்சை, புளு, வயலெட், கருப்பு, கெம்பு, லைப் கலர்கள், கெட்டிச்சாயம்: பளபளப்பான வசீகரத் தோற்ற முள்ளது.

18 மு. x 48 இஞ்ச கலர் புடவை ரூ. 4—4—0
ஷை சுன்னடி ,, ரூ. 4—12—0
18 மு. x 44 இஞ்ச கலர் புடவை ரூ. 3—8—0
ஷை சுன்னடி ,, ரூ. 3—12—0

புதிய ஜவுளி கேடலாக் இனம்!


Te Madura Oriental Trading Co,.
Laxmi Cloth Store, MADURA

## டிடக்டாஸ்

அல்லது

## துப்பு இரகசியம் அறியும் கருவி.

இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன்மூலமாய்ப் பார்க்கலாம்.



உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவரை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம்.

இத்துடன் பல கலர்களால்தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் ஷை கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன்பணம் வந்தாலன்றிக் கண்டிப்பாய் வி. பி. யில் அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம் ஜி. டி. மதராஸ்.

நாவல் உலகத்தின் ஒளி,

## ஸ்ரீலோலன்

ஓர் அரிய இனிய அபூர்வ

**துப்பறியும் நாவல்,**

**விலை ரூ. 1-4-0.**

விலாசம்:—

*T. S.* ராஜம் & சன்,
காஞ்சீபுரம்.

## நிசவுகாரர்களுக்கு.

சேலம் கோயமுத்தூர் ஜில்லாக்களில் உள்ள கிராமங்களில் நிசவு வேலை செய்யும் கை மிஷின்தறிகளுக்காக வேண்டி ஸ்பெஷலாக சீமையில் இருந்து எங்களுக்காகவே தயாரிக்கப்பட்ட (Shuttles) நாடா வந்துவிட்டது, ஸ்வல்ப ஸ்டாக் மட்டும் வந்திருப்பதால் உடனே வாங்கி ஆனந்த மடையுங்கள். மற்ற விவரங்களுக்கு (Sole Agent) விலாசத்திற்கு எழுதவும்.

அ ஆ ந அ ப ஆத்தநாரி செட்டி,
ஷாப், ஜலகண்டாபுரம்,
(சேலம் ஜில்லா).

1928 1928

# இந்து சமயக் காலண்டர்.

## ஒரே காலண்டரில் அழகான 14 படங்களுள்ளது!

ஒவ்வொரு படமும் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கும் தத்துவங்களை விளக்கிக் காட்டுவது.

நேர்த்தியான ஆர்ட் பேப்பரில் கண்ணாடி போடத் தகுந்ததாய் அச்சிடப்பட்டுள்ளது.

இக்காலண்டரில் அடங்கியுள்ள 14 படங்களின் விவரம்:—

1 திருமகள்

2 கலைமகள்

3 ஆண்டாள் சூடிப்பார்த்தல்

4 உமை சிவலிங்கத்தைத் தழுவியிருத்தல்

5 பார்வதி பரமேஸ்வரன்

6 மகாவிஷ்ணு

7 ஷண்முகம்

8 பாலகிருஷ்ணன்

9 இராதாகிருஷ்ணன்

10 சிவபெருமான் கங்கையைத் தரித்தல

11 முருகன் சிவபெருமானுக்கு உபதேசித்தல்

12 காளிங்கமர்த்தனம்

13 துருவன் அருள்பெறுதல்

14 ஸ்ரீராமர் பட்டாபிஷேகம்

விலை அணா 8. தபாற்கூலி வேறு.

## இம்பீரியல் டிரேடிங் கம்பெனி,

585, பைகிராப்ட் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.